வானிலை
கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான காலநிலை

# உதயன்

சுடர் 30 | கதிர் 132 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 24, செவ்வாய்க்கிழமை 07.04.2015

HNB கிராமத்தின் வளர்ச்சி வாழ்க்கையில் வெற்றிகொள்ள வழிகாட்டும்
**புத்தாண்டு சந்தை**
ஹற்றன் நஷனல் வங்கி மற்றும் பெருமை மிகு வாடிக்கையாளர்கள் இணைந்து நடத்தும் "புத்தாண்டு சந்தை 2015" இல் தங்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
காலம்:- இன்று (07.04.2015) செவ்வாய்க்கிழமை
நேரம்:- காலை 09.00 மணி
இடம்:- வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்.

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஐ.நா. சபை ஒத்துழைக்கும்

## ஐ.நா. உதவிச் செயலாளர் ஹொலியங் ஸு தெரிவிப்பு

கொழும்பு, ஏப்ரல் 7

இலங்கையில் இனநல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தொடர்ச்சியான தனது ஒத்துழைப்புக்களை வழங்கும் என்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நா. உதவிச் செயலாளர் ஹொலியங் ஸு குறிப்பிட்டுள்ளார்.

சட்ட நடைமுறைப்படுத்தலை வலுப்படுத்தல், நீதி மற்றும் சமூக ஒருங்கிணைவுக்கான அடைவு என்னும் யு.என்.டி.பி. திட்ட முன்னெடுப்பு முகவர்களுடன் நேற்று மதியம் கொழும்பில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு ஆறு நாள் பயணமாக வந்துள்ள ஐ.நா. உதவிச் செயலாளர் ஹொலியங் ஸு, நேற்று கொழும்பில் பலரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனை மீள்குடியேற்ற அமைச்சில் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் செயன்முறையிலுள்ள சவால்கள் தொடர்பிலும், மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளது.

இதன் பின்னர் சட்ட நடைமுறைப்படுத்தலை வலுப்படுத்தல், நீதி மற்றும் சமூக ஒருங்கிணைவுக்கான அடைவு என்னும் யு.என்.டி.பி திட்ட முன்னெடுப்பு முகவர்களுடன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நீதித்துறையைப் பலப்படுத்தல் பக்.24

## வேலி பயிரை மேயவில்லை என்கின்றனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 7

வடமராட்சியைச் சேர்ந்த மாணவி ஒருவரை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்று அதேபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதாகக் கூறப்படும் செய்தியை நெல்லியடிப் பொலிஸார் முற்றாக மறுத்துள்ளனர்.

தமது பொலிஸ் நிலையத்தில் அவ்வாறான முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் அலுவலர் எவர் மீதும் குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட பக்.24

## கைபேசி கட்டணத்துக்கு 25 வீத கழிவு

கொழும்பு, ஏப். 7

இன்று முதல் கையடக்கத் தொலைபேசி முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு 25 சதவீத கட்டணக் குறைப்பு சலுகை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சகல உள்நாட்டு அழைப்புக்களுக்கும் இந்த கட்டணக்கழிவு நடைமுறைப்படுத்தப்படும்.

மைத்திரி அரசால் அண்மையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இடைக்கால பக்.24

## '19'ஐ நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை

கொழும்பு, ஏப். 7

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும், நாடாளுமன்றத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தினூடாக நிறைவேற்ற முடியும் என்றும் சட்டமா அதிபர் நேற்றுத் தனது அபிப்பிராயத்தை உயர்நீதி மன்றத்திடம் தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கோரப்பட்டதையடுத்து, 19ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான தமது சட்ட வியாக்கியானத்தை நாடாளுமன்றத்துக்கும், ஜனாதிபதிக்கும் உயர்நீதிமன்றம் நேற்று இரகசியமான முறையில் அனுப்பிவைத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்த தமது அபிப்பிராயத்தை சட்டமா அதிபர் வை.ஜே. டபிள்யூ.விஜயதிலக நேற்று சுமார் ஒரு மணியளவில் பிரதம நீதியரசரிடம் தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16 மனுக் கள் மற்றும் 8 இடையீட்டு மனுக் கள் மீதான பக்.24

## ஆணைக்குழு அமர்வுகள் அம்பாறையில் ஆரம்பம்

### விசாரணையில் நம்பிக்கையில்லை என மக்கள் அமைதி ஆர்ப்பாட்டம்



அம்பாறை, ஏப்.7

காணாமற்போனோர் குறித்து விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பகிரங்க அமர்வு நேற்று அம்பாறை மாவட்டத்தில் ஆரம்பமாகியது.

இந்த அமர்வுகள் எதிர்வரும் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

நேற்று ஆரம்பமான முதலாவது அமர்வு கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அந்த அமர்வில் சாட்சியம் வழங்குவதற்காக 100 பேர் ஆணைக்குழுவால் அழைக்கப்பட்டிருந்தனர். நாளை நடைபெறவுள்ள இரண்டாம் நாள் அமர்வில் சாட்சியம் வழங்குவதற்கு 112 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாம், நான்காம் அமர்வுகள் எதிர்வரும் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் ஆலையடி வேம்பு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. பக்.24

## பாகிஸ்தானுடனும் அணுசக்தி ஒப்பந்தம்



கொழும்பு, ஏப். 7

இந்தியாவைத் தொடர்ந்து பாகிஸ்தானுடனும் இலங்கை அரசு அணுசக்தி ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளார்.

பாகிஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரீப்புக்கும் இடையில் நடந்த பேச்சுக்களை அடுத்து புரிந்துணர்வு உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

கையெழுத்திடப்பட்டுள்ள ஆறு உடன்பாடுகளில் சமூக – பொருளாதார அபிவிருத்திக்கான அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடும் ஒன்றாகும். பக்.24

## மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு நடைமுறையில் எதுவுமில்லை

### ஆஸ்திரேலியத் தூதுவரிடம் வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்

யாழ்ப்பாணம், ஏப். 7

புதிய அரசின் மீது தமிழ் மக்களுக்கு இருக்கும் எதிர்பார்ப்பின் அளவுக்கு, விடயங்களை நடைமுறையில் பார்க்க முடியவில்லை என்று ஆஸ்திரேலியத் தூதுவரிடம் சுட்டிக்காட்டியுள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வந்த இலங்கைக்கான பக்.24



## எதிர்க்கட்சித் தலைவர் யார்? இன்று பதில் கூறுவார் சமல்

யாழ்ப்பாணம், ஏப்.7

எதிர்கட்சித் தலைவர் யார் என்ற நீண்ட சர்ச்சைக்கு இன்று விடை தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் இன்று எதிர்கட்சித் தலைவர் யார் என்பதைத் தெரிவிப்பார்.

ஜனாதிபதி மைத்திரிபால தலைமையிலான புதிய அரசு பதவியேற்ற பின்னர், எதிர்கட்சித் தலைவராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பக்.24

## தமிழர்களை எட்டாத மைத்திரியின் நல்லாட்சி

பக்கம் 16

## மாந்தை புதைகுழி வழக்கு ஜூலை 6க்கு ஒத்திவைப்பு

மன்னார், ஏப். 7

மாந்தை புதை குழி தொடர்பான வழக்கு நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்காக எடுத்துகொள்ளப்பட்டது. வழக்கை விசாரணை செய்த மன்னார் மாவட்ட நீதிவான் அலெக்ஸ்ராஜா ஆசீர்வாதம் கிரேசியன் வழக்கை எதிர்வரும் ஜூலை மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வழக்கு விசாரணையின்போது பக்.24

# ‘19’ஐ முழுமையாக எதிர்க்கவில்லை தேர்தல் முறையில் மாற்றம் தேவை

## ஹெல உறுமயவும் உடும்புப்பிடி; ரணிலுக்கும் சிவப்பு சமிக்ஞை

கொழும்பு, ஏப்.7

அரசமைப்பிற்குரிய 19ஆவது திருத்தச்சட்டத்தை ஜாதிக ஹெல உறுமய முழுமையாக எதிர்க்க வில்லை என்றும், ‘19’ என்ற போர்வையில் நிறைவேற்று பிரதமர் முறைமையை உருவாக்குவதற்கு முன்னெடுக்கப்படும் திட்டத்துக்கே எதிர்ப்பு வெளியிடப்படுகிறது என்றும் அக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க நேற்றுத் தெரிவித்தார்.

அத்துடன், 19ஆவது திருத்தச் சட்டத்தில் தேர்தல் முறைமை மாற்றமும் உள்ளடக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜாதிக ஹெல உறுமயவின் செய்தியாளர் மாநாடு நேற்று மதியம் அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழித்துவிட்டு, நிறைவேற்று பிரதமர் முறைமையை உருவாக்குவதற்குப் பிரதமர் தலைமையிலான கும்பலொன்று முயற்சிக்கிறது. இதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது.

19ஆவது திருத்தச்சட்டத்தில், தேர்தல் முறைமை மாற்றமும் உள்ளடக்கப்பட்டு அது சாதகமான முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நடைபெறும் என நாம் நம்புகிறோம்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்த வேண்டுமானால், அதுபற்றி மக்களின் கருத்தையும் பெறவேண்டும். ஜனாதிபதிக்குரிய எட்டு அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும்.

எனினும், 1972ஆம் ஆண்டு அரசமைப்பின் பிரதியொன்றாகவே 19 ஐ கொண்டுவருவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அக்காலப் பகுதியில் பிரதமருக்கு முழு அதிகாரம் இருந்தது. ஜனாதிபதிப் பதவி என்பது பெயரளவில் மாத்திரமே. தற்போது இந்த முறைமையை அனுமதிக்க முடியாது. – என்றார்.

(ற–சி)

## சட்டவிரோத மின்சாரம்: மூவர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 7

சட்ட விரோதமாக மின்சாரத்தைப் பெற்ற ஒரு பெண் உட்பட மூவர் பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டனர். நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் ஓடக்கரை வீதிப் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவதாகப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸார் குறித்த பிரதேசத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது சட்ட விரோதமாக மின் சாரம் பெற்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட மூவரைக் கைது செய்து பதில் நீதவானிடம் முற்படுத்தினர். மூவரையும் கடுமையாக எச்சரிக்கை செய்த பதில் நீதவான் அவர்களை பிணையில் செல்ல அனுமதித்தார். (ற)

## தென்மராட்சியில் திணைக்கள அபிவிருத்தியில்லை - மக்கள் கவலை

தென்மராட்சி, ஏப்.7

வடக்கு மாகாண சபை பொறுப்பேற்று ஓராண்டு கடந்த நிலையில் தென்மராட்சி பிரதேசத்தில் எந்தவொரு திணைக்கள அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லையென பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாகாண எல்லைக்குட்பட்ட கல்வி, விவசாயம், சுகாதாரம், உள்ளூராட்சி, மீன்பிடி, வீதி அபிவிருத்தி உட்பட பல்வேறு திணைக்கள நிறுவனங்கள் செயற்படுகின்ற போதிலும் அவற்றூடாக எந்தவொரு அபிவிருத்தி வேலைகளும் மேற்கொள்ளப்படுவதில்லையென குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மத்திய அரசு மற்றும் வெளிநாடுகள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் நிதிகளில் பெரும்பாலானவை வன்னிப் பிரதேசத்திற்கு பயன் படுத்துவதாகவும் தென்மராட்சி பிரதேசத்தில் போரால் அழிவடைந்து இன்னமும் முழுமையாக மீளாமல் காணப்படும் பல இடங்களில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பொதுமக்கள் கவலை வெளி

## வித்தியாசமான திருமணம்



யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் மர நடுகையை ஊக்குவிக்கும் முகமாக மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. திருமண நிகழ்விற்கு வந்தோர் மட்டுமன்றி வீதியால் சென்றோரும் இக்கன்றுகளை ஆர்வத்துடன் எடுத்துச்சென்றதை காணக்கூடியதாக இருந்தது.

நாச்சிமார் கோவிலில் நடந்த இத்திருமணத்தில் கொய்யா, தேசி, மாதுளை, நெல்லி என பலவகை பயந்தரு மரக்கன்றுகள் அன்பளிப்பாக விநியோகிக்கப்பட்டன. மரக்கன்றுகள் ஒவ்வொன்றிலும் ‘தயவு செய்து என்னையும் பலரையும் பயிரிட்டு பயன் பெறுங்கள்’ என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தமை பலரையும் ஈர்த்தது.

மணமக்கள் வைத்தியர் மற்றும் பொறியியலாளராவார்கள். தேவையற்ற ஆடம்பர செலவுகள் செய்யாது இவர்களது சிந்தனையை பின்பற்றினால் சூழலைப் பாதுகாக்கும் அளப்பெரிய பணியில் இணைய முடியும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ற)

## பன்றித்தலைச்சி அம்மன் அருள் பெற பெரும் கூட்டம்

### நான்காவது திங்களான நேற்று

தென்மராட்சி, ஏப். 7

மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மாள் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தை ஒட்டி ஆலய வளாகம் நேற்று அடியார்களால் நிரம்பி வழிந்தது. ஐந்தாவது திங்கள் சித்திரைப் புத்தாண்டு தினத்துக்கு முதல் நாள் என்பதால் நேற்று நான்காவது திங்கள் அடியார்கள் அதிகாலை 4 மணி தொடக்கம் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றிய வண்ணம் இருந்தனர். பொங்கல் மண்டபங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் பொங்கல் நேற்று செய்தவர்களால் வீதி எங்கும் ஒரே புகை மண்டலமாகக் காணப்பட்டது.

பொங்குவதற்கு ஏற்பட்ட இட நெருக்கடியால் ஒருவர் பொங்கல் பானை அடுப்பிலிருந்து கீழ் இறக்கும் வரை காத்திருந்து மற்றவர் அந்த அடுப்பில் பொங்கல் இட்டனர். பொங்கலுடன் மோதகம், வடை மற்றும் கறி சமைப்பதிலும் அடியார்கள் ஆலயத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மண்டப பந்தலுக்குள் செல்ல முடியாத அளவுக்கு பொங்கல் இட்டவர்கள் படைப்பதற்கு காத்திருந்து படையல் செய்ததை காண முடிந்தது.

நான்கு வீதிகளிலும் தொடராக காவடிகளும் பாற்செம்புகளும் நூறுக்கும்மேற்பட்ட பறவைக்காவடி, தூக்குக் காவடி, வாகனங்களும் வலம் வந்த வண்ணம் இருந்தன. நேற்று வெயிலின் தாக்கம் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் அடியார்கள் கொளுத்தும் வெயிலிலும் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றினர்.

ஆலய வளாகத்திலும் உள் வீதியிலும் சிவில் உடையில் காணப்பட்ட பொலிஸாருடன் சாரணப் படையினரும் அடியார்களை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டனர். ஆயினும் நேற்று நண்பகல் வரை தாலிக்கொடி, சங்கிலி, பணப் பைகள் போன்றவற்றை பறிகொடுத்தவர்கள் ஆலய அறிவிப்பு மையத்தில்

# கலை இலக்கியப் பெருவிழா வவுனியாவில் நாளை

வவுனியா, ஏப்.7

வவுனியா பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்தும் கலை, இலக்கியப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

காலை அமர்வு காலை 8.30 மணிக்கு “மாணவர் கலை தெரி அங்கம்” என்ற பெயரில் இடம் பெறும். வவுனியா பிரதேச கலாசாரப் பேரவையின் உப தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் பிரதம விருந்தினராகவும், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.சிதம்பரநாதன், வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமர்ராஜா, நகரசபை செயலாளர் க.சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

விருந்தினர் வரவேற்பு, மங்கல விளக்கேற்றல், பிரதேச கீதம் இசைத்தல், வரவேற்பு நடனம் என்பவற்றைத் தொடர்ந்து “பள்ளிப்பட்டாம் பூச்சி” பாடல் இறுவட்டு வெளியீடு, கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரன் தலைமையில் “தமிழர் தம் மரபுகளில் இலக்குகளே அதிகம்!, இழப்புகளே அதிகம்!!” என்ற தலைப்பிலான கவியரங்கம், “மாணவர்களும் சமூகமும்” என்ற தலைப்பிலான இலக்கியச் சொற்பொழிவு, “இன்றைய சூழ்நிலையில் இளைஞர் வாழ்வு இன்பம் காண்கிறது துன்பம் காண்கிறது” என்ற தலைப்பிலான பட்டிமன்றமும், கொழுந்து நடனம், நாட்டார் இசை, கலை இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கானபரிசளிப்பும் இடம்பெறும்.

மாலை அமர்வு அன்றைய தினம் பிற்பகல் 2.15 மணிக்கு வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராஜா தலைமையில் “கலைஞர், சுவைஞர் கலையரங்கம்” என்ற பெயரில் ஆரம்பமாகும். வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிஸ் சந்திர பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சரஸ்வதி மேகநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார்.

தமிழ் வாழ்த்து, மங்கள இசை, வரவேற்பு நடனம் என்பவற்றைத் தொடர்ந்து வன்னி வரலாற்று தொல்லியல் சின்னங்கள் விளக்கப் படத்துடன் ஓர் ஆய்வு, “வவுனியம்” பிரதேச மலர் வெளியீடு, குழு இசை, குழு நடனம், பறை மேள தாள வாத்திய இசை, வாத்திய இசை, தெற்காசிய நடனம், அரிச்சந்திர மயான காண்டம் மற்றும் தேசிய விருது பெற்றவர்களுக்கான கௌரவிப்பு, உள்ளிட்ட கௌரவிப்பு என்பன இடம்பெறும். இறுதியாக வவுனியா கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் நன்றியுரை நிகழ்த்துவார். (ற–421)

## கட்டுப்படுத்துவார் இன்றி நடக்கும் மரக்கடத்தல்கள்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, ஏப்.7

வவுனியாவில் சட்டவிரோதமான மரக்கடத்தல்களை யாராலும் நிறுத்த முடியாதுள்ளது என்று தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா, சேமமடு, பறநட்டகல், நொச்சிக்குளம், ஓமந்தை ஆகிய இடங்களில் பாலை, முதிரை, வீரை போன்ற பல மரங்கள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுக் கடத்தப்பட்டு கொண்டு செல்லப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்திலும் வன இலாகாவுக்குப் பொறுப்பான அதிகாரியின் கவனத்துக்கு கொண்டுவந்தபோதும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. மாறாக வன இலாகா அதிகாரிளும் குறிப்பிட்ட சில உத்தியோகத்தர்களும் சட்டவிரோதமான மரக்கடத்தலுக்கு துணை போகிறார்கள்.” – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

“மீள்குடியேறியுள்ள மக்கள் தமக்கு தேவையான வேலியடைத்து வேலிக்கு கட்டைபோட வைக்கப்படும் மரங்கள் பறிக்கப்படுவதுடன் அவர்களை கைது செய்து நீதிமன்றம் வரை கொண்டு செல்லும் அதிகாரிகள் இந்த மரக்கடத்தல் சம்பந்தமான பெருச்சாளிகளிடம் இருந்து லஞ்சத்தை பெற்றுவிட்டு கண்டு கொள்ளாது இருக்கிறார்கள்.” – என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

“மஹிந்த ஆட்சிக் காலத்தில் நடந்து கொண்டு இருந்த மரக்கடத்தல்கள் மைத்திரிபாலசிறிசேன ஆட்சிக் காலத்திலும் கட்டுப்படுத்தமுடியவில்லை. பொலிஸ் மா அதிபர் வன இலாகா அதிகாரிகளுக்குகடும் உத்தரவைப் பிறப்பித்து சம்பந்தப்பட்டவர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்.” – என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (ற–402)

## காசோலை மோசடி செய்த குருநாகல் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 6

இருபது லட்சம் ரூபாவுக்கு எரிபொருளை பெற்றுக்கொண்டு பணமில்லாத வங்கிக்கணக்குக்கு காசோலையை வழங்கி மோசடி செய்தார் எனகுருநாகல் பிரதேசத்தை சேர்ந்த சிங்கள இளைஞரொருவரை யாழ்ப்பாண விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞர் பலாலி வீதி காங்கேசன்துறை வீதி மற்றும் பருத்தித்துறை வீதி ஆகிய வீதிகளை புனரமைப்பு செய்த நிறுவனத்துக்காக டிப்பர் வாகனத்தை செலுத்துபவராவார். 2011ஆம் ஆம் ஆண்டுக்கும் 2013ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் குறித்த வீதிகளின் புனரமைப்பு பணிகளுக்காக புன்னாலைக்கட்டுவன் வடக்கு [illegible] எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருபது லட்சம் ரூபாவுக்கு எரிபொருளை பெற்றுக்கொண்டு அதற்காக காசோலைகள் இரண்டை குறித்த நப[illegible] கொடுத்துள்ளார்.

எனினும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் காசோலைகள் வங்கியில் வைப்பு செய்தவேளை குறித்த நபரின் வங்கிக் கணக்கில் பணமில்லாததால் வங்கியால் குறித்த காசோலைகள் திருப்பப்பட்டன.

அதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். அதையடுத்து கைது செய்யப்பட்ட இளைஞர் யாழ்.நீதிவான் நீதி[illegible] ஸாரால் முற்படு[illegible]

## அநாதரவாக நின்றிருந்த பெண் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7
கோப்பாய், இருபாலைப் பகுதியில் அநாதரவான நிலையில் நின்றிருந்த 24 வயதுடைய திருமணமான பெண் ஒருவர் அந்தப் பகுதி கிராம சேவையாளர் ஊடகப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
குறித்த பகுதியில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றுக்கு அருகில் கடந்த சனிக்கிழமை அவர் நீண்ட நேரமாக நின்றிருந்தார். அதையடுத்து அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸாரிடம் தனது விவரங்களை அவர் சரியாகக் கூறாததால் அவர் பதில் நீதிவான் சறோஜினி இளங்கோவன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார். குறித்த பெண்ணை கைதடியில் உள்ள இரட்சணிய சேனைகள் இல்லத்தில் தங்க வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். வழக்கை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ற-103)

## பாம்பு தீண்டியவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், ஏப்.7
யாழ்ப்பாணம், கொல்லங்கலட்டிப் பகுதியில் வாழைத் தோட்டத்தில் பாம்பு தீண்டி ஒருவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். திருமண வீட்டுக்கு வாழைக் குலை வெட்டும்போதே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.(ற)

# நிதி கிடைத்தும் விடுதி அமைப்பு இழுபறியில்

## யாழ்.போதனா வைத்தியசாலை தாதியர்கள் விசனம்

யாழ்ப்பாணம், ஏப்.7
யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியருக்கான தங்குமிட வசதிகளை அமைப்பதற்கான 111 மில்லியன் ரூபா நிதி கடந்த வருடம் கிடைத்தபோதும், கட்டட ஒப்பந்த விண்ணப்பம் கோரப்படாததால் எந்த நடவடிக்கையுமின்றிப் பணிகள் இழுபறியில் உள்ளது என்று தாதியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
இதனால் தாதியருக்கான விடுதி அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் பணிப்பாளர்கள், மத்திய சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.
தாதியர்களுக்குப் பல வருடங்களாகத் தங்குமிட விடுதி அமைக்கப்படவில்லை. அதனை விரைவில் அமைத்துத் தருமாறு தாதியர்கள் கோரியிருந்தனர். அதன்படி தற்போதுள்ள வைத்தியசாலைச் சமையலறையின் மேல்தளத்தில் தாதியர்களுக்கு விடுதி அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கென நிதியும் ஒதுக்கப்பட்டது.
அதனை அமைப்பதற்கு, கட்டட வேலைககளைச்செயற்படுத்தவேண்டிய மத்திய பொறியியல் நிறுவனத்தின் தாமதத்தால் எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால் அவர்களும் அதற்கான பணிகளை முடித்து விட்டனர். வைத்தியசாலை நிர்வாகமும் மத்திய அரச அதிகாரிகளும் ஒப்பந்தம் வழங்குதில் தற்போது தாமதப்படுத்துவதாகக் கூறப்படுகின்றது. எனவே இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு விரைவில் வேண்டும் என்று தாதியர்கள் கோரியுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளருடன் தாதியர்கள் சுமார் 35 பேர் சந்தித்துக் கலந்துரையாடினர். அதன்போது எதிர்வரும் புதன்கிழமை மத்திய சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகப் பணிப்பாளர் கூறியுள்ளார் என்று தாதியர்கள் தெரிவித்தனர். (ற-4)

# சுன்னாகம் மின்நிலைய பராமரிப்புக்கு அனுமதி

## இரண்டு வாரங்களுக்கு வழங்கியது நீதிமன்று

யாழ்ப்பாணம், ஏப்.7
சுன்னாகத்திலுள்ள நொதேர்ன் பவர் நிறுவனத்தை இரண்டு வாரங்களுக்கு மின் உற்பத்தி தவிர்ந்த ஏனைய பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்று அனு மதி வழங்கியுள்ளது.
அதனைப் பராமரிக்க அனுமதி வழங்கக் கோரி யாழ்.மேல்நீதிமன்றில் விண்ணப்பம் செய்யப்பட்டது. உரிய முறைப்படி அதனைச் செய்ய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் முதல்நாளன்று பராமரிப்புக்குச் சென்று அங்கிருந்து வெளியேறுவதில் தாமதம் ஏற்பட்டது. அதனால் யாழ்.மேல்நீதிமன்றப் பதிவாளர் அங்கு சென்றார். அதையடுத்து அவர்கள் வெளியேறினர்.
அதன்பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றில் விண்ணப்பித்திருந்தனர். அதனால் 2 வாரங்களுக்கு மாத்திரம் மின் உற்பத்தி தவிர்ந்த பராமரிப்பு வேலைகளைச் செய்ய மேன்முறையீட்டு நீதிமன்று அனுமதி வழங்கியது. இந்த வழக்கை எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது நீதிமன்று. கழிவு ஒயில் கிணற்று நீரில் கலக்க சுன்னாகம் மின் நிலையமே காரணம் என்று நம்பப்படுவதனால் அதனை தற்காலிகமாக சீல் வைத்து மல்லாகம் நீதிமன்று மூடியிருந்தது. (ற-4)

## கள்ளி மரத்தில் அம்மன் உருவம்



வவுனியா மேட்டுத்தெருவில் உள்ள ஒரு வீட்டில் வளர்ந்திருக்கும் கள்ளி மரத்தில் அம்மன் உருவம் காட்சியளிக்கின்றது. அதைப் பார்வையிடுவதற்கு பெரும் அளவிலான மக்கள் கூடி வருகின்றனர்.(ற)

# இன்று கிடைக்குமா மிதிவெடி அகற்றிய சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஏப்.7
உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் மிதிவெடி அகற்றியமைக்கான சான்றிதழ் இன்று, அரச அதிபர் நா.வேதநாயகனிடம் கையளிக்கப்படவுள்ளது. அதன்பின்னர் குறித்த பிரதேசங்களை அரச அதிபர் தலைமையிலான குழுவினர் இரண்டொரு தினங்களில் பார்வையிட்டதைத் தொடர்ந்து மீள்குடியமர்வு நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.
'கடந்த கூட்டத்தில் நாளை (இன்று) 8 கிராம சேவையாளர் பிரிவுகளில் மிதிவெடி அகற்றியமைக்கான சான்றிதழைத் தருவதாக, இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். நாளை (இன்று) அவர்கள் அதனை வழங்குவார்கள்' – என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
வலி.வடக்கில் ஆயிரத்து 100 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கு புதிய அரசின் அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதற்கமைய முதற் கட்டமாக வளலாயில் 233 ஏக்கரும், பலாலி தெற்கு மற்றும் வயாவிளான் இணைந்து 197 ஏக்கருமாக 430 ஏக்கர் காணி இதுவரை விடுவிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 670 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடல் கடந்த வாரம் இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலில், 670 ஏக்கர் நிலப்பரப்பினுள் மிதிவெடி அகற்றல் நடவடிக்கைகளை முன்னெடுத்து 7 ஆம் திகதி அதற்குரிய சான்றிதழைக் கையளிப்பதாக இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர்.
ஆனாலும் குறித்த பகுதிகளில் இன்னமும் மிதிவெடி அகற்றல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. இராணுவத்தினரின் பொறியியல் பிரிவு குறித்த மிதிவெடி அகற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், இந்த நடவடிக்கைள் விரைவில் செய்து முடிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
மிகுந்த அவதானமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாலேயே, காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இருப்பினும் விரைவில், மிதிவெடி அகற்றல் செயற்பாட்டை பூர்த்தி செய்து இராணுவத்தினர் கையளிப்பார்கள் என்று, இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. (ற-5)

# கனகராயன்குள சிறுமியுடைய உடல் தோண்டி எடுக்கப்பட்டது

## மேலதிக உடற்கூற்றுச் சோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டது



யாழ்ப்பாணம், ஏப்.7
பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்தார் என்று கூறப்படும் கனகராயன்குளத்தைச் சேர்ந்த சிறுமியின் உடல் நேற்று புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது.
புதைக்கப்பட்டு ஒரு மாதம் 8 நாள்கள் கழிந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் நேற்று நண்பகல் உடல் வவுனியா மாவட்ட நீதிவான், யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் முன்னிலையில் பலத்த பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் தோண்டி எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட சிறுமியின் உடல் மேலதிக உடற் கூற்றுப் பரிசோதனைக்காக கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு அனுப்பப்பட்டது.
கடந்த 27ஆம் திகதி குறித்த சிறுமி தொண்டை வழியாக நீர் இறங்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டு அயல் வீட்டுகாரரால் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் உயிரிழந்தார். சிறுமியின் இறப்பில் சந்தேகம் உள்ளது என்று தெரிவித்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாதர் சங்கத்தினரும், சிறுமியின் பாட்டியும் சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டே உயிரிழந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டினார். இதற்குப் பலர் காரணம் என்றும் அவர்கள் கூறினர்.
கனகராயன் குளம் பொலிஸார் சிறுமி சம்மந்தப்பட்ட சட்ட வைத்திய அறிக்கையின் பின்னரே நடவடிக்கை எடுக்க முடியும் என்று தெரிவித்தனர். இந்தநிலையில் கடந்த 17ஆம் திகதி வெளியிடப்பட்ட சட்ட வைத்திய அறிக்கையில் சிறுமி வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமைக்கான தடயங்கள் இருக்கின்றன என்று சிறுவர் நன்னடத்தைப் பிரிவின் கொழும்பு தலைமை காரியாலயம் கூறியது.
எனினும், சிறுமியின் இறப்புக்கான காரணம் இருதய மற்றும் மூளை தொடர்பான பாதிப்பு என குறித்த வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட சிறுவர் நன்னடத்தைப் பிரிவினர் தெரிவித்திருந்தனர்.
அதையடுத்து கடந்த மாதம் 22 ஆம் திகதி சாவில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்து புதைக்கப்பட்ட சிறுமியின் உடலைத் தோண்டி எடுத்து மேலதிக உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி கனகராயன் குளம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அதற்கு அமைவாக நேற்று வவுனியா மாவட்ட நீதிவான் ஏ.சிறிஸ்வரன், யாழ் போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரன் ஆகியோர் முன்னிலையில் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் சிறுமியின் உடல் புதைக்கப்பட்ட மயானத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது. (ற-21)

# 1,11,000 பேர் சித்தியடையவில்லை

கொழும்பு, ஏப்.7
நடைபெற்று முடிந்த கல்விப் பொதுத்தராதர சாதாரணப்பரீட்சையில் கணித பாடத்தில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 198 மாணவர்கள் சித்தியடையவில்லை என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
பரீட்சைக்காக 2லட்சத்து 56 ஆயிரத்து 802 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் அதிகளவான மாணவர்கள் கணிதபாடத்தில் சித்தியடையவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை கணித பாடத்தில் சித்தியடையாத மாணவர்களும் இரண்டு வருடத்திற்குள் கணித பாடத்தில் சித்திபெற்றுத்தரும் உறுதிமொழிக்கமைய உயர் கல்வியை தொடர முடியும் என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ள போதிலும் இந்த செயல் முறை நாடு முழுவதிலும் முறையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என ஆசிரியர் தொழில் சங்கம் குற்றம் சாட்டிவருகின்றது. (ற)

# வடக்கு சுகாதார மேம்பாட்டுக்கு தேவை ரூ.3500 மில்.

## கொழும்பு அரசிடம் மாகாண சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 7
வடக்குமாகாணத்தில்யாழ்.போதனா வைத்தியசாலை மேம்படுத்தல் உட்பட சுகாதார மேம்பாட்டுக்காக உடனடியாக 3 ஆயிரத்து 512 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்று வடக்கு மாகாண சபையால் கொழும்பு அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட சுகாதார மேம்பாட்டுத்திட்டங்கள் 15க்கு ஆயிரத்து 662 மில்லியன்ரூபாவும், யாழ்.போதனா வைத்தியசாலையின் 4 திட்டங்களுக்கு ஆயிரத்து 850 மில்லியன் ரூபாவும் தேவைப்படுகின்றது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாங்குளத்தில் விசேட தேவையுடையோருக்கான வைத்தியசாலை அமைப்பதற்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவும், அடிப்படை சுகாதார பராமரிப்புச் சேவை மற்றும் ஆய்வுகூட வசதிகளுடனான நடமாடும்வாகனங்கள்ஐந்தைக்கொள்வனவு செய்வதற்கு 40 மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ விடுதித் தொகுதிகள் அமைப்பதற்கு 200 மில்லியன் ரூபாவும், யாழ்ப்பாணத்தில் பிராந்திய பயிற்சி நிலையம் அமைப்பதற்கு 94.63 மில்லியன் ரூபாவும், கழிவு அகற்றல் முகாமைத்துவத்திற்கு 50 மில்லியன் ரூபாவும், மனித உடல் கழிவுகளை அகற்றுவதற்கு 78.3 மில்லியன் ரூபாவுமாக ஆயிரத்து 662 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மகப்பேற்று விடுதி முழுமையான புனரமைப்புக்கு ஆயிரத்து 200 மில்லியன் ரூபாவும், மருத்துவ உத்தியோகத்தர்கள், தாதியர்களுக்கான விடுதிகள் அமைப்பதற்கு 600 மில்லியன் ரூபாவும், ஆய்வுகூட விரிவாக்கத்துக்கு 50 மில்லியன் ரூபாவுமாக ஆயிரத்து 850 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (ற-5)

## பெண்களும் அரசியலில் பங்குகொள்ளவேண்டும்

### மகளிர் விவகார அமைச்சர் சந்திரானி பண்டார தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7
இலங்கை அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது குறைவாகவே காணப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் கூட 5.7 வீதமே பெண்கள் காணப்படுகிறார்கள். எனவே பெண்கள் அரசியலில் அதிகமாக பங்குகொள்ள வேண்டும். – இவ்வாறு தெரிவித்தார் மகளிர் விவகார அமைச்சர் சந்திரானி பண்டார.



நேற்றுமுன்தினம் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் 'வடமாகாண பெண்களை வலுவூட்டும் விசேட செயற்திட்டம்' என்னும் தொனிப்பொருளில் உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எமது நாட்டில் பெண்கள் 52 வீதமாக வாழ்ந்து வருகின்றார்கள். அவ்வாறு இருந்த போதும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் என்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. உலகின் முதலாவது பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க இருந்திருக்கின்றார், இலங்கையில் ஜனாதிபதியாகக் கூட ஒரு பெண் இருந்திருக்கின்றார். ஆயினும் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது குறைவாககவே காணப்படுகின்றது."– என்று அவர் அங்கு தெரிவித்தார்.

"உண்மையில் பெண்ணென்ற ரீதியில் பெண்கள் அனாதைகளாக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் உள்ளன, பெண்கள் ஏதாவது பிரச்சினைகளில் அகப்பட்டு விடுவது எனக்குத் தெரியும், எனவே அந்த அடிப்படையில் பெண்களுக்கான செயற்பாடுகளுக்கான அமைச்சை நான் பொறுப்பேற்றது எனக்கு மகிழ்ச்சியே. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெண்களின்அரசியல்பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்காக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார். எனவே அந்த அடிப்படையில் கட்சித் தலைவர்களைச் சந்தித்து உள்ளூராட்சி சபைகளிலும், ஏனைய அரசியல் பீடங்களிலும் பெண்களின் பங்கை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பது தொடர்பான அறிக்கைகளை பெற்று வருகின்றார். அதனை அவர் நிறைவேற்றுவார். அதனூடாக பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும் என நான் நம்புகின்றேன்."– என்றும் அவர் தெரிவித்தார். (ற-21)

## பெண்ணை வீழ்த்தி தங்கச் சங்கிலி அறுப்பு

வலி.தென்மேற்கு, ஏப்.7
சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இளம்பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர் தள்ளி வீழ்த்தி 75 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் மானிப்பாய், மூத்ததம்பி வீதியில் நடந்துள்ளது.


சுதுமலை வடக்கைச் சேர்ந்த இளம்பெண்ணொருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாயில் உள்ள தமது சகோதரியின் கடைக்கு சைக்கிளில் சென்றுள்ளார். அவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இரு இளைஞர்கள் ஆள்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் அவரைத் தள்ளி வீழ்த்தி விட்டு தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளனர். இது குறித்து மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று கூறப்பட்டது. (ற-135)

## சங்கிலி அறுத்த பெண்ணுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப்.7
வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தேர்த்திருவிழாவின் போது தங்கச் சங்கிலி அறுத்தார் என்று தெரிவிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட பெண்ணை எதிர்வரும் 17ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. குறித்த பெண்ணை யாழ்.நீதிமன்றில் முற்படுத்திய போது பதில் நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். கைது செய்யப்பட்ட பெண் அல்வத்துற, இங்கிரியாவவில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்று கூறப்படுகின்றது. (ற-103)

## விபத்தில் படுகாயமடைந்த கர்ப்பிணிப் பெண் சாவு

வவுனியா, ஏப்.7
வவுனியா, பனிக்கன்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் பிக்கப்–ஓட்டோ விபத்தில் படுகாயமடைந்த பெண் நேற்று உயிரிழந்தார். வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த சிவகுமார் தவமலர் (வயது–31) என்பவரே சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இவர் 7 மாதக் கர்ப்பிணி என்று தெரிவிக்கப்படுகின்றது. விபத்தின்போது குறித்த பெண்ணின் இரு வயதுக் குழந்தை உயிரிழந்தது. பெண்ணின் கணவரும், மற்றொரு குழந்தையும் காயங்களுக்குள்ளான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்தோரின் உடல்கள் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.(ற)



வவுனியா நகரில் நடைபாதை வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று வவுனியா நகர சபையால் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த வர்த்தகர்களுக்கு கடந்த மாத ஆரம்பத்தில் இதுகுறித்த அறிவித்தல் வழங்கப்பட்டது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். மக்கள் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது புத்தாண்டு வரவுள்ள நிலையில், மக்கள் நடமாட்டத்துக்கு இடையூறாகக் காணப்படும் நடைபாதை வியாபாரங்களை அகற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

## குழு மோதலில் 6 பேர் காயம்

முல்லைத்தீவு, ஏப்.7
முல்லைத்தீவு, வற்றாப்பளைப் பகுதியில் நடந்த குழு மோதலில் 6 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதியில் நடைபெற்ற உதைபந்துப் போட்டியொன்றில் ஏற்பட்டவாய்த் தர்க்கமே மோதலாக மாறியது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## வீதிகள் புனரமைப்பு

கிளிநொச்சி, ஏப்.7
கிளிநொச்சி–கோணாவிலிருந்து அக்கராயன்பிள்ளையார்கோயில் வரையான வீதியும், அக்கராயன் மருத்துவமனைச் சந்தியில் இருந்து ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டம் வரையான வீதியும் புனரமைப்பு செய்யப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.அதற்கானபணிகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## பெண்கள் விவகார அமைச்சால் உதவி வழங்கும் நிகழ்வு



யாழ்ப்பாணம், ஏப்.7
பெண்கள் விவகார அமைச்சால் கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள், விளையாட்டு கழகங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாணத்தைச் சேர்ந்த பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 50 பெண்களுக்கு வாழ்வாதார உதவிகளும், 72 விளையாட்டுக் கழகங்களுக்க விளையாட்டு உபகரணங்களும், பாடசாலைகளில் கல்வி கற்கும் 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மகளிர் விவகார அமைச்சர் சந்திரானி பண்டார, பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர். கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-21)

# கூட்டமைப்பை உடைப்பதற்கு அரசியல் சதி

## அவர்களை இனங்கண்டு ஓரங்கட்டவேண்டும்
## இ.தொ.கா வின் வன்னி அமைப்பாளர் எச்சரிக்கை

வவுனியா, ஏப் 7
நல்லாட்சி என்ற போர்வையில் தமிழ்த்தேசியமண்ணில்பேரினவாத விஷச் செடியை விதைத்து தமிழ் மக்களின் பாதுகாப்பு அரணாகவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் பலத்தை இல்லாது செய்யும் பிரித்தாளும் சூழ்ச்சி அரசியல் சில விசமிகளால் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. இந்தச் சக்தியைத் தமிழ் மக்கள் இனம் கண்டு ஓரங்கட்டாவிட்டால்தியாகம்செய்து, இரத்தம் சிந்தி, கட்டிக் காக்கப்பட்டு வந்த பூர்வீக அரசியல் மற்றும் பிரதேச இருப்புக்கு அச்சுறுத்தலும் பேராபத்தும் சூழ்ந்து வருகின்றது. எனவே வட–கிழக்கு வாழ் தமிழர்கள் விழிப்புடன் இருப்பது காலத்தின் கட்டாயமாகும்.
இவ்வாறு இ.தொ.காவின் வன்னி மாவட்ட அமைப்பாளர் எஸ்.கோவிந்தராஜ் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் அமரர் தந்தை செல்வாவின் 117 ஜனன தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.
இந்நிகழ்வு வடமாகாண சுகாதார அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட தலைவருமான வைத்தியர் ப. சத்தியலிங்கத்தின் தலைமையில் வவுனியா குருமன்காடு தாயகத்தில் நடைபெற்றது.
கோவிந்தராஜ் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது :–
தந்தை செல்வா இந்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் உரிமைக்காகவும் பாதுகாப்புக்காகவும் பாடுபட்டவர். அவர்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசித்து பூர்வீக மண்ணில் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ வேண்டுமென்ற தொலைநோக்குடன் தீர்க்கதரிசன அரசியல் சிந்தனையை அன்றே மக்கள் மனதில் உருவாக்கினார். அவரது தலைமைத்துவக் காலத்தில் தமிழினம் என்ற நிலை தவிர பிரதேசம் மற்றும் வகுப்பு வாதம், ஏற்றத்தாழ்வு என்ற கொள்கையோ கோட்பாடோ கிடையாது. அவரது ஆழமான, தீர்க்கமான கருத்தாழமிக்க தலைமைத்துவத்தின் மகத்துவமே காலப் போக்கில் பேரினவாத அடக்குமுறை, இன ஒடுக்குமுறை, சர்வாதிகாரம், இன அழிப்பு ஆகியவற்றுக்கு எதிராக இளைஞர்கள் ஓர் இன விடுதலைக்குப் போராட வழி வகுத்தது என்றால் யாரும் மறுக்க முடியாது.
தந்தை செல்வா விட்டுச் சென்ற பணியை அவரது காலடித் தடங்களைச் செப்பனிட்டுச் செயற்பட வேண்டிய வரலாற்றுச் சமூக கடமையும் கடும் பொறுப்புக்களும் இலங்கை தமிழரசு கட்சிக்கும் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் உண்டு. நம்ப நட நம்பி நடவாதே என்பதற்கமைய இன்றைய ஆட்சியின் அதிகாரவாதிகளிடம் அவதானமாக இருப்பதும் தற்போதுள்ள இணக்க அரசியல் எமது தமிழ்த் தேசியத்தின் இலட்சியம், கொள்கைக் கோட்பாடுகளுக்கும் பங்கம் ஏற்படாமல் இருப்பதும் காலத்தின் கட்டாயமாகும்.
இன்று நல்லாட்சியென்ற போர்வையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுபடுத்தி தனது பேரினவாத அரசியல் இலக்கை அடைவதற்கான திட்டமிட்ட காய்நகர்த்தல் கூர்மை அடைந்து வருவது விரும்பத்தகாத ஒன்றாகும்.
அதே நேரம் இன்று சிலர் வடக்குக்கு பயணம் செய்து தமிழ்த்தேசியத்தில் இருக்கின்ற தலைமைத்துவப் பலத்தை இல்லாது செய்ய, பூர்வீகமாக இருந்துவரும் அரசியல் இருப்பை சின்னாபின்னமாக்கிப் பிரித்தாளும் நாசகார அரசியலை முன்னெடுக்கின்றனர். இது எமது தமிழ்த் தேசியத்தின் எதிர்காலத்தை சூனியமாக்கும்.
எனவே இந்த விசமிகளின் சூழ்ச்சி வலையில் அகப்படாது விழிப்புடன் இருப்பது தம்மை நம்பும் மக்களுக்கு வட மாகாண தமிழ் தலைமைகள் செய்யும் தார்மிகச் சேவையாகும்–என்றார். (த–402)

# உண்மையான, நேர்மையான அரசியலுக்குத் தயாராகுங்கள்


## இளைஞர்களுக்கு வினோ எம்.பி அழைப்பு



வவுனியா, ஏப் 7
மக்களைஅணிதிரட்டவும்,தலைமை தாங்கவும் கூடிய சக்தியும் பலமும் இன்றைய இளைஞர் சமுதாயத்திடம் அதிகம் உள்ளது.சுயநல அரசியல்வாதிகளின் கைகளினால் கறை படிந்து கொண்டிருக்கும் தூய்மையான அரசியலை உங்களைப் போன்ற இளைஞர்களினால் தான் காப்பற்ற முடியும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.
வவுனியா பிரதேச இளைஞர் சம்மேளனக் கூட்டம் கடந்த 4ஆம் திகதி இடம் பெற்றது.இதன் போது கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
சில சுயநல அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளினாலும்,போக்குகளினாலும் நீங்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்த்திருக்கலாம். கடந்த காலங்களில் தமிழ் இளைஞர்கள் அரசியலில் பிரவேசிக்கும் போது அரசு சந்தேகம் கொண்ட ஒரு நிலைமை இருந்தது.
துப்பாக்கிக் கலாசாரம் மேலோங்கி இருந்தது. சாதாரண இளைஞர்களுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருந்தது. அதனால் நீங்கள் அரசியலில் ஈடுபட அச்சப்பட்டீர்கள். இன்று அந்த நிலைமைமாறியிருக்கின்றது. நீங்கள் தேர்தலிலும், அரசியலிலும் ஈடுபட நாம் வாய்ப்புக் கள் வழங்கத் தயாராக இருக்கின்றோம்.
நேர்மையானஉண்மையான அரசியல் பணி செய்ய நீங்கள் தயா ராக வேண்டும். ஒரு சில அரசியல்வாதிகள் செய்யும் தவறுகளினால் ஒட்டு மொத்த அரசியல்வாதிகளும் விமர்சிக்கப்படுகின்றார்கள்.
சமூக,சமூதாயப் பணிகளில் நீங்கள் வெற்றி கொண்டால் அரசியல் பணிகளிலும் உங்களால் வெற்றி கொள்ள முடியும்.எமது மக்கள் எதிர்பார்க்கின்ற மாற்றங்களை உங்களினால் கொண்டு வர முடியும். அண்மைய அரசியல் மாற்றத்தில் இளைஞர்களின் பங்களிப்பு இதற்கு எடுத்துக்காட்டானதாக அமைந்துள்ளது –என்றார். (த–56)

# எம்மைப் பிரித்தாள புதிய அரசு முயற்சி

## சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றச்சாட்டு



கரணவாய், ஏப்.7
அற்பவிடயங்களுக்காகநாம்பிரிந்து செயற்படுவோமானால் எங்களை மற்றவர்கள் பிரித்தாள முயற்சிப்பார்கள். இந்த புதிய அரசு எங்களுக்குள் காணப்படும் ஒற்றுமை இன்மையைக் கொண்டு பிரித்தாள நினைக்கின்றது. பிளவுபடுத்த நினைக்கின்றது. நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் கட்டுக்கோப்புடனும் செயற்படுவோமானால் எவராலும் எம்மை ஒன்றும் செய்து விட முடியாது.
இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சுரேஷ் பிரேமச்சந்திரன்.
அன்பே சிவம் அமைப்பின் ஒருங்கிணைப்பில் சுவில் தமிழர் நலன் புரி சங்கத்தின் சொலாத்தூண் அமைப்பினால் வடக்கு–கிழக்கு மாகாணங்களிலுள்ள மாணவர்களுக்கான கல்வி மேம்பாட்டுத்திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–
வடக்கு–கிழக்குப் பகுதியிலே இடம்பெற்ற போர், சுனாமி இடர் என்பவற்றால் பெற்றோரை இழந்த மாணவர்கள், கல்வியை இழந்த மாணவர்கள் என பல்லாயிரக் கணக்கானவர்கள் எமது மண்ணில் இருக்கிறார்கள்.
இந்தப் போரினால் வடக்கு–கிழக்கு மாகாணத்தில் 94 ஆயிரம் பேர் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களாக மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை உடையவர்களாக உள்ளனர். அவர்களை இனங்கண்டு அவர்களின் கல்வி மேம்பாட்டு ஊக்குவிப்புக்களைப் புலம் பெயர் நாட்டிலுள்ள தமிழர் நலன் புரி சங்கம் சொலாத்தூண் அன்பே சிவம் அமைப்பினூடாக வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியது.
அன்பே சிவம் அமைப்பினர் கடந்த 5 வருடங்களாகப் பல்வேறு கல்வி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வரு கின்றார்கள். இவ்வமைப்பினால் பல கோடி ரூபா மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்காகச் செலவிடப்பட்டுள்ளது.
கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லைக் கிராமங்களில் ஏற்பட்டிருக்கக் கூடிய துன்பகரமான நிகழ்ச்சிகளால் தமிழ் மக்கள் தமது மொழி, கலை, கலாசாரம் மற்றும் பண்பாடுகள் மதம் எல்லாவற்றையும் இழந்து போகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அந்த மக்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்காக அன்பே சிவம் தமது ஆதரவுக் கரத்தை நீட்டியுள்ளது.
புலம்பெயர் நாடுகளில் வாழும் எமது உறவுகள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வியர்வை சிந்தி உழைத்து இந்த உதவிகளைச் செய்கின்றார்கள். ஏனெனில் எமது மக்கள் தமது சொந்தக் காலில் சுய கௌரவத்துடன் வாழவேண்டும் என்பதற்காகத்தான்.
இந்த அரசை எடுத்துக்கொண்டால் போரின் பின்னர் அரசு என்ன செய்தது? பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு எதனைச் செய்தார்கள்? ஒன்றுமே செய்யவில்லை. ஆனால் அரசை நம்பவேண்டாம். எமது புலம் பெயர் உறவுகள், தாம் ஆன்மிக ரீதியில் சேகரிக்கும் பணத்தின் மூலம் எமது மக்களுக்கு உதவக் காத்திருக்கின்றார்கள்.
இன்று இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் கல்வியில் மட்டுமல்ல சமூகத்துக்கு வேண்டிய பிரஜைகளாக உருவாகி எமது இனத்தின் அபிவிருத்திக்கு வழி சமைக்கவேண்டும். தமிழ் மக்களின் கலாசாரம் பண்பாட்டு விழுமியங்களை சர்வதேசத்துக்கு எடுத்துச் சொல்லக் கூடிய சக்திகளாக மிளிரவேண்டும்.
தமிழ் மக்கள் வீரம் செறிந்தவர்கள். அவர்கள் எதனையும் இலகுவில் விட்டுக் கொடுக்க மாட்டார்கள் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளும் வரை போராடக் கூடியவர்கள். அவர்கள் எந்தச்சதிவேலைகளுக்கும்பணிந்து போகின்றவர்கள் அல்ல.
இன்று நாங்கள் பல கோணங்களாகச் சிதறுண்டு போயிருக்கிறோம். புலம் பெயர்ந்து சிதறுண்டு போயிருப்பது வேறு. ஆனால் இங்கு தமிழ் மண்ணில் கொள்கை ரீதியாகச் சிதறுண்டிருக்கின்றோம். நாங்கள் கட்டுக்கோப்பாக இருந்து. பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியவர்கள். ஆனால் நாங்கள் அவ்வாறில்லை. நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் உறுதியாகவும் இல்லாவிட்டால் எங்களைப் பிரிக்கும், உடைக்கும் சதிவேலைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் இலகுவாக மேற்கொண்டு விடுவார்கள்.
நாங்கள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்றால் நாங்கள் கட்டுக்கோப்பாக உறுதியுடனும் ஒற்றுமையுடனும் பயணிக்கவேண்டும். ஆனால் இன்று நாம் கட்டுக்கோப்புடனும் உறுதியுடனும் முன்னேறிச் செல்லப் போகின்றோமா என்பதே அனைவரிடமும் எழுந்துள்ள கேள்வி.
பல வழிகளில் எங்களைப் பிரித்தாள்வதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்கின்றது. எங்களுக்குள் பிளவை ஏற்படுத்தப் பார்க்கின்றது. நாங்கள் உறுதியாக இருந்தால் நாங்கள் கட்டுக்கோப்போடு இருந்தால் எவராலும் எம்மை ஒன் றும் செய்ய முடியாது. எங்களுக்குள் இருக்கின்ற அபத்தமான விடயங்களைக் கைவிட்டு கொள்கை ரீதியாக ஒன்றுபடுவோமாக இருந்தால் எவராலும் எம்மைப் பிரித்தாள முடியாது. ராஜபக்ஷவாலும் முடிய வில்லை கோத்தாவாலும் முடியவில்லை; எந்த அரசாலும் அது முடியாது. நாங்கள் உறுதியாகவும் ஒற்றுமையாகவும் இருந்தால் எவராலும் ஒன்றும் செய்ய முடியாது. அவ்வாறு ஒற்றுமையின்றி இருந்தால் எங்கள் நிலை தலைகீழாக மாறிவிடும்.
புலம்பெயர் உறவுகள் நாங்கள் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு செயற்படவேண்டும் என்று எண்ணுகின்றார்கள். அதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலுள்ள அனைவரும் இவற்றை மனதில் கொண்டு செயற்படவேண்டும்–என்றார். (த–108)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா

**மேடம்:** மிகச் சிறந்த பலன்களை உழைப்பின் மூலம் அடையும் நாளிது. நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள்.

**இடபம்:** உங்கள் எதிரிகளின் பலம் குறையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மன அழுத்தம் மறையும். சிந்தனையில் தெளிவு உண்டாகும்.

**மிதுனம்:** சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். ஆன்மிகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பயனடைவீர்கள்.

**கடகம்:** எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாது. வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். அலைச்சல்களுடன் நடந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கைக்கு வந்து சேரும்.

**சிங்கம்:** தக்க சமயத்தில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெற்று கௌரவக் குறைவு ஏற்படாமல் காக்கப்படுவீர்கள். உறுதியின்றிச் செய்த வேலைகளில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு அவை மளமளவென்று நடந்தேறும்.

**கன்னி:** உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு தேடி வரும். மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்களுடன் நல்ல நட்பு தொடர்வதால் உங்களின் வேலைகள் குறித்த காலத்திற்குள் நிறைவேறிவிடும்.

**துலாம்:** உங்களின் வேலைத் திறனைக் கூட்டிக்கொள்ள புதிய அலுவலகப் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரிகள் போட்டிகளை பொறுமையுடன் எதிர்கொண்டு அவற்றைச் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்:** உங்களின் சமயோசித புத்தியால் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்வீர்கள். உத்தியோகத்தர்களுக்கு இன்றைய நாள் நன்றாக இருக்கும்.

**தனுசு:** படிப்படியான வளர்ச்சியைக் காண்பீர்கள். வருமானம் நன்றாக இருப்பதால் சொந்தங்களுக்காகச் செலவு செய்வீர்கள். சக ஊழியர்களால் நன்மை அடைவீர்கள். புதிய வாகனங்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

**மகரம்:** போட்ட திட்டங்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருந்த தன வருவாய் சிக்கல்களை ஓரளவு சமாளிப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் இருந்த தாமத நிலை மாறும்.

**கும்பம்:** பண விடயங்கள் தாராளமயமாக இருக்கும். உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துப் போகவேண்டும்.

**மீனம்:** நீங்கள் படும் கஷ்டம் வெளியே தெரியாது. நீங்கள் எப்போதுமே பிறர் கண்ணுக்கு சௌகரியமான வாழ்க்கை வாழும் ஆளாகக் காட்சி தருவீர்கள். நீங்கள் யாரிடமும் உங்களது குறைகளைக் கூறிக் கொள்ள மாட்டீர்கள்.



# புதிய ஐபோன்கள்

அப்பிள் புதிய ஐபோனை அறிமுகம் செய்து சில மாதங்கள்கூட முடியவில்லை. அதற்குள் அடுத்த ஐ போன் மாதிரிகள் பற்றிய செய்திகள் வந்துவிட்டன. செப்ரெம்பர் மாதத்தில் மூன்று புதிய ஐபோன் மாதிரிகளை அப்பிள் அறிமுகம் செய்யப் போகிறது.

ஐபோன் 6 எஸ் மற்றும் ஐபோன் 6 எஸ் பிளஸ் ஆகிய புதிய போன்கள் அறிமுகமாகலாம் என்று முதலில் எதிர்பார்க்கப்பட்டது.

இவற்றுடன் மினி 6 சி மாதிரியும் அறிமுகமாகலாம் என்று தற்போது தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் புதிய தொடுதிரை அம்சமும் இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

தொடுதிரை சென்சார் அம்சம் கொண்ட இந்த போன் ஒருவர் எந்த அளவுக்கு அழுத்தம் கொடுக்கிறார் என்பதை உணர்ந்து செயல்படக் கூடியது என்றும் சொல்லப்படுகிறது. அப்பிள் வோட்ச் மற்றும் மேக்புக்கில் உள்ள இந்த வசதி ஐபோனுக்கும் வரலாம்.

கமராவைப் பொறுத்தவரை 8 மெகா பிக்சல் கமராவே நீடிக்கும் எனச் சொல்லப்படுகிறது.

நம்பிக்கை இருக்கணும்
பிறரை
நம்பித்தான்
இருக்கக் கூடாது!

# எஜமானரைக் காப்பாற்றிய நாய்



உணவு தொண்டையில் சிக்கி உயிருக்காகப் போராடிய எஜமானரை அவரது நாய் காப்பாற்றிய சம்பவம் பிரிட்டனில் இடம்பெற்றுள்ளது.

கடந்த வியாழக் கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் சர்வதேச ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அலன் ஸ்பென்சர் (67 வயது) என்ற நபர் சம்பவ தினம் மாலை உணவு அருந்திக் கொண்டிஜருந்த போதே உணவு அவரது தொண்டையில் சிக்கியுள்ளது. இதனையடுத்து, அவர் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகிய நிலையில் தரையில் சரிந்து விழுந்துள்ளார்.

அவரது நாயான லெக்ஸி, உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த தனது எஜமானரது முதுகில் பாய்ந்து நிபுணத்துவம் பெற்ற முதலுத விச் சிகிச்சையாளர் போன்று புத்திசாலித் தனமான முறையில் செயற்பட்டு முதுகை அழுத்தி அவரது தொண்டையில் அடைபட்டிருந்த உணவு வெளியேற வழிவகை செய்துள்ளது.

இதனையடுத்து, அலனின் சுவாசக் குழாயில் பிரவேசித்திருந்த வெங்காயத் தோல் வெளியேறவும் அவரது சுவாச செயற்கிரமம் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது. இதனால் அவர் உயிர் பிழைத்துள்ளார்.

# கொஞ்சம் சிரிங்க பாஸ்.



**பெண்:** டாக்டர் என்னோட இரண்டு வயது பையன் இன்னும் விரல் சூப்புரான்.

**டாக்டர்:** ஒன்றும் பிரச்சினை இல்லை. சரி பண்ணிடலாம்.

**பெண்:** ரொம்ப கேவலமா இருக்கு. எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை.

**டாக்டர்:** ஒன்றும் செலவு இல்லை. இரண்டு வயசு பையனுக்கு ஒரு பெரிய பையனோட டவுசர மாட்டி விட்டுடுங்க.

**பெண்:** (குழப்பமாக).......எதுக்கு டாக்டர்.....??

**டாக்டர்:** அந்த டவுசர் அவனுக்கு லூசா இருக்கும். அதை கீழே விழாமே மேலே இழுத்து விடுறதே அவன் வேலையா இருக்கும். விரல் சூப்ப ரைம் இருக்காது......




# சமூகவலைத் தளத்தில்




வடிவேலு கதாநாயகனாக நடித்து வரும் எலி திரைப்படத்துக்காக, சமூக வலைத் தளங்களான பேஸ்புக் மற்றும் ருவிட்டரில் தனியாக வலைப்பக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இதை தொடங்கி வைத்தபின் வடிவேலு பேசும்போது, நான் நடித்துக் கொண்டு இருக்கும் திரைப்படம் பெயர் எலி. இந்த திரைப்படத்தில நகைச்சுவையில் எலி பயணிக்காத பாதையே கிடையாது. மொத்தத்தில் இது ஒரு நகைச்சுவை எலி, கலக்கல் எலி, உங்களை வயிறு குலுங்க சிரிக்க வைக்கப் பேற உங்க வீட்டு எலி. நான் இப்படி ராகம் போட்டு பேசுவதால் லேகியம் விற்கின்றேன் என்று நினைக்க வேண்டாம். உடனே போய் பேஸ்புக்லயும், ருவிட்டர்லயும், இந்த நகைச்சுவை எலியை பின்பற்றி உடம்பில இருக்கிற இரத்த அழுத்தத்தையும், நீரிழிவையும் சட்டு புட்டுன்னு இறக்கிட்டு, கலகலன்னு குழந்தை குட்டியோட சிரிச்சு மகிழுங்கோ என்று கலகலப்பாக



# கரும்புச்செய்கை மூலம் இலங்கையை தன்னிறைவடையச் செய்வதே நோக்கம்

## பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஏப்.7

"இலங்கையின் கரும்புப் பயிர்ச் செய்கையை மேலும் அபி விருத்தி செய்வதன் மூலம் சீனிக் கைத் தொழிலில் இலங்கையை தன்னி றைவடைய வைப்பதே எனது இலக்காகும்" – என்று தெரிவித்தார் பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான கே.வேலாயுதம்.

செவனகல கரும்புப் பயிர்ச்செய் கையில் ஈடுபடும் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முகமாக அண் மையில் அமைச்சில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது:

"கடந்த ஆட்சியில் இடம்பெற்ற பல தவறுகளை நாங்கள் தொடர்ந்து செய்ய அனுமதிக்க முடியாது. கரும் புப் பயிர்ச் செய்கையை அதிகரித்து சீனி உற்பத்தித்துறையில் இலாப மீட்டும் வகையில் முன்னெடுக்க வேண்டியது எனது பொறுப்பு மாத்திரமன்றி, இதனுடன் சம்பந் தப்பட்ட நிர்வாகிகளுக்கும், விவ சாயிகளுக்கும் உள்ள பொறுப்பு மாகும்.

செவனகல சீனித் தொழிற்சாலை தனியார் நிறுவனத்திடமிருந்து அரசுடைமையாக்கப்பட்டு இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின்கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் இரண் டாயிரம் ஹெக் ரெயராக இருந்த கரும்புப் பயிர்ச்செய்கையை இவ் வருட முடிவுக்குள் 3,950 ஹெக் ரெயராக அதிகரிப்பதற்கு நடவடிக் கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

செவனகலை சீனித் தொழிற்றுறை இலாபமீட்டி வருகின்ற போதிலும் பெல்வத்தை சீனித் தொழிற்றுறை இன்னமும் இலாப மீட்டவில்லை. கடந்த அரச காலத்தில் அமைச் சர்களோ உயரதிகாரிகளோ செய்த தவறுகளை சரிப்படுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் இன் றைய உயரதிகாரிகள் இருக்கின் றனர்.

ஆனால், என்னுடைய பதவிக் காலத் தில் எனது அமைச்சின் கீழ் துஷ் பிரயோகத்துக்கும் ஊழலுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்க நான் பின்னிற்கப் போவதில்லை. எவரா வது தவறிழைத்தால் அவர்களைத் தண்டிக்க நான் தவற மாட்டேன். வரையறுக்கப்பட்ட இலங்கை சீனிக் கம்பனி இன்று அமைச்சரின் தலை யீடின்றி சுயமாக இயங்கி அதிகம் இலாபமீட்டுவதற்கு வழியேற்படுத் திக் கொடுத்துள்ளேன்.

கரும்பு உற்பத்தியில் ஈடுபடு கின்ற விவசாயிகளின் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கு நானும் எமது நல்லாட்சி அரசும் என்றும் தயாராகவே உள் ளோம். கரும்புப் பயிர்ச்செய்கை யில் காலத்திற்குக் காலம் ஏற்படு கின்ற அசாதாரணமான நிலை, அதன் மூலம் கரும்புப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்படு கின்ற நட்டம் போன்றவை குறித்து நான் அறிந்திருக்கின்றேன். அவற் றுக்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து சிந்திக்கவேண்டிய தேவை இருக் கின்றது" – என்றார். (வ)

# ஜி.சீ.ஈ சாதாரண தர பெறுபேறுகள்

*ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளி யாகியிருந்தன. பாடசாலை களால் எமக்கு அனுப்பி வைக்கப் பட்டிருந்த பரீட்சை முடிவுகள் வருமாறு:-*

**யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை**

க. அனிஸ்ரன் – 3ஏசி5எஸ், கோ.மதிவதனன்–ஏபி2சி3எஸ், இ.டஸ்மி–பி4சி2எஸ், ம.துஷித்தா–ஏ3சி3எஸ், சி.சதீஸ்–2பி2சி4எஸ்.

**யா/ நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம்**

த.லக்ஷனா–4ஏபி2சிஎஸ், ப.நிமல காந்தன்–3ஏ2பி3சி, ப.லஜீபன்–2ஏ3பி2சிஎஸ், வ.சுபாதிகா–ஏ2பி4 சிஎஸ், பா.தீபனா–ஏ5சி2எஸ், ச.ரஜீ பன்–2பி4சி2எஸ், சோ.சுகன்யா–ஏபிசி4எஸ், து.துருசியா–2பிசி 4எஸ், ச.கௌசிகன்–2பி4சிஎஸ், அ.ஜிந்துசன்–பி3சி4எஸ், பா.சங் கீர்த்தனன்–பி3சி3எஸ், ச.ரஜிதா–2சி5எஸ், ஞா.தர்ஷிகா–2சி4எஸ், கு. ஐங்கரன் – ஏ3சி3எஸ், ஸ்ரீ.கௌசல்யா–2ஏசி4எஸ்; ப.சுஜீபா– ஏ2சி2எஸ், க.சமீரா–3சி2எஸ், அப்துல் றகீம் சிபானா–2சி3எஸ், ர.சுஜீப்காந்–6எஸ்.

**யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்**

த.நிவேக்கா–6ஏ2பிசி, சி.டனிஸ் ரன்–4ஏ3பி2சி, த.நிவேதிகா–3ஏ 2பி3சி, சே.நதிஸ்ரன்–3ஏ2பி 2சி 2எஸ், ஜெ.தனுசியா–3ஏபி2சி 3எஸ், தி.திலக்ஷன்–3ஏ4சி2எஸ், பு.சாரங்கன்–2ஏ3பி2சிஎஸ், வெ.தராட்சினி–2ஏ4சிஎஸ், ர.பிரிய தர்சன்–ஏ2பி4சிஎஸ், சூ.சுலக் ஷன்–ஏபி3சி2எஸ், தி.ஜெனரூபன்–ஏ3பி 2சி2எஸ், கு.லக்ஷன்–ஏபி2சி 4எஸ், கா.கஜீபா–ஏபி3சி3எஸ், பு.சேதுஜா–ஏபி3சி2எஸ்.

**யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி**

ரீ.ஐஸ்வர்யா–8ஏசி, து.சஞ்சியா–8ஏஎஸ், சி.துர்க்கா–6ஏபி2சி, க.சுலக் ஷனா–4ஏ4பிஎஸ், யோ.கனு சியா–2ஏ2பி2சி3எஸ், வி.கோகிதா–2ஏபி2சி4எஸ், இ.புலோமி மேரி அனிஸ்ரா–3ஏ2பி3சிஎஸ், கி.துஷாந்தி–3ஏ3பிசிஎஸ், கு.பிர வீனா–3ஏ3பி3எஸ், உ.உஷானி–3ஏ3பிசி2எஸ்.

**யா/ யாழ்ற்ரன் கல்லூரி – காரைநகர்**

செ.கமலேஸ்வரி–8ஏஎஸ், கு.கோபிதா–7ஏஎஸ், தி.சயந்தன்–6ஏ3பி, வி.வேதாரணி–5ஏ2பி2சி, ம.நவநிலா–5ஏ2பிஎஸ், மோ.துர் சிகா–5ஏபிசிஎஸ், க.ஜெயமது ஷன்–4ஏ3பி2எஸ், த.திருமகள்–4ஏ3பிசிஎஸ், பா.கவிதா–3ஏபி 3சி2எஸ், கி.அஜந்தன்–3ஏபி2சி 2எஸ், கோ.ரஜித்–2ஏபி6எஸ், ம.ஜிவிதா–2ஏ2சி3எஸ்.

**யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

ஆர்.டி. ஜெ. போல் ஜான்சன் – 9 ஏ, வி.ஷிடான் – 8ஏ பி, கொ.பிரகாஷ், 8ஏ சி, ரி.பர்ஷிகன் – 7ஏ பி சி, டி. சாள்ஸ் – 7ஏ பி சி, பி.கெவின் – 7ஏ பி எஸ், ஜெ.போல் அபிராஜிதன் – 5ஏ 3பி எஸ், யு.மரியக்ஷன் – 4ஏ 4பி சி, எஸ்.டிலக்ஷன்ராஜ் – 4ஏ 4பி எஸ்,

**தமிழ் மொழி மூலம்**

ஜெ.ஜெறின்சன் – 9 ஏ, கே.யூலியட் பிறின்சன் – 8ஏ பி, ஆர். தக்ஷன் – 8ஏ பி, ஜெ.சி. றொனால்டோ – 8ஏ எஸ், எஸ்.எஸ்.டினுசாந் – 7ஏ 2பி, பி.ரி.திசாந் – 7ஏ 2பி, ஜெ.டிஷான் – 6ஏ 3பி, ஜெ.ஜெ.நிதர்சன் – 6ஏ 3பி, ஜே. லிமோயன் – 6ஏ 2பி எஸ், எம். சேவியர் – 5ஏ 3பி சி, ஆர்.றொகான் – 5ஏ 3பி எஸ், எ.உதயபிரசாந் – 5ஏ 2பி 2 சி, ஜெ.யூவனியஸ் – 5ஏ 2பி சி எஸ், எவ்.எ.நிரூஜன் – 5ஏ 2பி சி எஸ், பி.டன்சன் – 5ஏ பி 2சி எஸ், எ.டினுசியன் – 4ஏ 4பி சி, ஆர்.ஜெ. ஷர்வியோ – 4ஏ 4பி சி, யு.மதுவர் ணன் – 4ஏ 2பி 2சி எஸ், எ.திசாந் – 4ஏ பி 3சி எஸ், ரி.கிருஷாந்தன் – 4ஏ பி 3சி எஸ், எஸ்.துஷாந்தன் – 4ஏ 4சி எஸ்.

**யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

த.நிருசனன்–8ஏசி, இ.சுயாந்தன்–7ஏ2பி, ம.சஞ்ஜீவன்–7ஏ2பி, சி.சரண் ஜன்– 7ஏ2பி, யோ.திவியாளன்–6ஏ3பி, அ.அசோக்–5ஏ2பி2சி, சி.விதுஷன்– 4ஏ2பி3சி, நா.டினேஸ்–4ஏ2பிசிஎஸ், ர.விஜய்–4ஏபி 3சிஎஸ், ர.ரசோதன்–3ஏ3பி 2சிஎஸ், ம.தயா னன்–3ஏ2பி3சிஎஸ், சி.சுஜாந்தன்–3ஏபி2சி2எஸ், ஆ.பகீரதன்–3ஏபி 4சிஎஸ், அ.உமாசுதன்–3ஏபி 3சிஎஸ்.

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

கு.பவித்திரா–8ஏசி, செ.மதுஜன்–7ஏபிசி, வி.வினோஜா–5ஏ3பிசி.

**பளை றோ.க.த.க. பாடசாலை**

யோ.வானுஜா–5ஏபிசிஎஸ், இ.தனுஷா– 5ஏபி2எஸ், செ.இலக் கியா–4ஏ3பிஎஸ், ச.நிதர்சனா–3ஏ3பிசிஎஸ், ஆ.ஜெயரூபி–3ஏ 2பிசி2எஸ், சி.கென்சிகா–2ஏ3பி 2எஸ், தே.அஜந்தினி–2ஏ2பிசிஎஸ்.

## 28 நாடுகளின் தூதுவர் பதவி நிரப்பப்படவில்லை

கொழும்பு, ஏப்.7

ஐரோப்பா உள்ளிட்ட 28 நாடுகளில் அமைந்துள்ள இலங் கைக்கான தூதரங்களில் ஒரு மாத காலமா கவே தூதர் பதவிகள் நிரப்பப்படாது வெற்றிடமாகவே இருப்பதாக வெளி விவகார அமைச்சின் தகவல் வட் டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதர்கள் பதவி நிலைகளுக்கு அர சியல் செல்வாக்கின் அடிப்படையில் நியமனம் செய் யப்பட்டிருந்த தூதர் கள் மீளவும் நாட்டுக்கு வரவழைத் துக் கொள்ளப்பட்டதை அடுத்தே இந் தப் பதவி வெற்றிடங்கள் உரு வாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. (வ–22)

## அறிவியல் ஊற்று சஞ்சிகை வெளியீடு

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய கணித விஞ்ஞான மன்ற மாணவர்களின் ஆக்கத் தில் உருவான 'அறிவியல் ஊற்று' என்ற சஞ்சிகை வெளி யீட்டு விழா இன்று செவ் வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை விவேகா னந்தா மண்டபத்தில் அதிபர் திருமதி நி.தனஞ்செயன் தலைமையில் நடை பெறவுள்ளது.

நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக வலிகாமம் கல்வி வலய ஓய்வு நிலை பிரதி கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும் சிறப்பு விருந்தி னராக சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி விஞ்ஞான பாட ஓய்வு நிலை ஆசிரியர் செல்வி தே.சங்கரப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ–86)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 25 ஆவது ஆண்டாக நடத்தும் கே.சி.சி.சி வெற் றிக் கிண்ணத் துக்கான 30 ஓவர் கள் மட்டுப்படுத்திய கடினப் பந்து கிரிக் கெட் போட்டிக்கான விண் ணப்பங் களை கோரியுள்ளது. எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கழகச் செய லாளருடன் தொடர்பு கொண்டு விண் ணப் பங்களைப் பெற்றுக் கொள் ளும் படியும் 12 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு நிரல் ஒழுங்கு, கழக மண்டபத்தில் இடம்பெற வுள்ளதாக வும் அறிவிக்கப்பட் டுள்ளது. (வ–86)

## மட்டக்களப்பில் மாணவரால் டெங்கு கவனவீர்ப்புப் பேரணி



மட்டக்களப்பு, ஏப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேக மாகப் பரவிவரும் டெங்கு நோய்க்கு எதிராக நேற்றுக் காலை மட்டக் களப்பு நகரில் பாடசாலை மாண வர்கள் கவனவீர்ப்பு பேரணியில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு சென்.திரேசா வித்தி யாலயம் ஏற்பாடு செய்த இப்பேரணி யில் பெரும் எண் ணிக்கையிலான மாணவர்கள் மற்றும் ஆசிரியர் களும் கலந்து கொண்டனர்.

பாடசாலை வாயிலில் ஆரம்ப மான பேரணி பல வாசகங் களைத் தாங் கிய பதாகைகளை ஏந்திய வண் ணம் லேடி மெனிங் ட்ரைவ், பார் வீதி, திருமலை வீதி, மட்டக்க ளப்பு– கல்முனை வீதி, பாலமீன்மடு வீதி உட்பட பல முக்கிய வீதிகள் ஊடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வுப் பரப் புரை மேற்கொண்டது.

புனித திரேசா வித்தியாலய அதிபர் மாலதி பேரின்பராசா உட்பட அதிகமானோர் இந்தப் பேரணியில் இணைந்திருந் தனர்.

கடந்த மூன்று மாத காலத்தில் மட் டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயால் 732 பேர் பாதிக்கப்பட் டுள்ளதுடன், மூவர் உயிரிழந்திருப்ப தாகவும் மட்டக்களப்பு மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் எம்.சதுர்முகம் தெரி வித்தார். (வ)

## போதைப் பொருள் கடத்தலை கட்டுப்படுத்த விசேட பொலிஸ் பிரிவு

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பொலிஸ்நிலையங்களிலும்போதைப் பொருள் சுற்றி வளைப்புக்கென தனியான விசேட பொலிஸ் பிரி வொன்று அமைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உத விப் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில்:

'போதைப் பொருள் கடத்தல்கள் மற்றும் விற்பனையைக் கட்டுப் படுத் தும் நோக்கில் இந்த விசேட வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். அதன்படி நாடளாவிய ரீதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் போதைப்பொருள் சுற்றி வளைப் புக்கென தனியான விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டுள் ளது. அந்தப் பிரிவிலுள்ள பொலி ஸாருக்கு போதைப்பொருள் சுற்றி வளைப்புக் குறித்து விசேட பயிற் அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண் மித்த பகுதிகளில் மட்டுமே இந்த விசேட பிரிவு தற்போது செயற்பட்டு வருகிறது. ஏனைய பகுதிகளில் படிப்படியாக இந்த விசேட பிரிவு தனது பணிகளை ஆரம்பிக்கும்'– என்றார். (வ–10)


சேவை நலன் பாராட்டு விழா



செல்வி நிக்கலஸ் புளோறன்ஸ் றஞ்சினி

(உப அதிபர், யா/சென்ஜேம்ஸ் ம.வி)

திருவுறு சேவையாய் ஆசிரியப் பணிதனை
மறுவில்லாது, ஆண்டுகள் இருபத்தைந்து ஆற்றி
ஓய்வெய்தும் எம் அன்பு உப அதிபரின் அகவையாம்
அறுபதில் அவர் பணி நினைந்து
நன்றிகள் நவில்கின்றோம்.

பாடசாலைச்சமூகம்

யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

(58419)(4.3.6)

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினர்களான **கனகரத்தினம்**
(ரஞ்சனாஸ் புடைவை சாவகச்சேரி)
**ஞானசேகரம்**
(பூஞ்சோலை - சாவகச்சேரி)
ஆகியோரின் பாசமிகு தாயார்

**பொன்னம்மா நாகலிங்கம்**

அவர்கள் 04.04.2015 ஆம் திகதி காலமானார்.
அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**
(சி/17351)(4.3.7)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **அம்பலவாணர்**
**கந்தையா பாலசிங்கம்**



அன்னையின் மடியில் சரண்
16.10.1925

ஆண்டவன் பாதங்களில் சரண்
09.04.2012

திதி: பங்குனி மாதம் அபரபக்க திருத்தியை
(07.04.2015)

எங்கள் உயிரான ஐயா
எம்மை விட்டு ஓடி மறைந்தன் மூன்று ஆண்டுகள்
என்றென்றும் மறக்காது நினைவுகள்
உயிராக வளர்ந்து வாழ்ந்த உன்னத நாள்கள்
உங்களை நினைத்து ஏங்கும் எம் இதயங்கள்
மறைந்தாலும் நிறைந்திருக்கும் நிஜமான நெஞ்சங்கள்
மனதின் துயர்தனைச் சொல்ல இல்லையே வார்த்தைகள்.

"துவாரகா"
கதிர்காமசுவாமி கோயிலடி,
காரைநகர்.

நினைத்து நினைத்து வாழும் உங்கள்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(58622)(4.3.7)



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி
**பாலசிங்கம்**



தோற்றம்
1932.04.19

மறைவு
2010.04.01

திதி: திருதியை
07.04.2015

ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ அப்பா உங்களையிழந்து
ஆறாத துயரம் இன்னும் மாறாது வருந்துகிறோம்
அன்பும் அரவணைப்பும் ஆறுதலும்எங்களுக்கு
உங்களைப்போல்யார் தருவார்.

20.பீ.ஏ. தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உங்கள் ஆத்மாசாந்திக்காகப்
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
(50425)(4.3.6)



## நினைவழியா நினைவுகளில் ஓராண்டு நினைவுநாள்

அமரர் திருமதி **இந்திராதேவி**
**பரமராசா**



தோற்றம்
26.11.1948

மறைவு
19.03.2014

திதி: அபரபக்க திருதியை
(07.04.2015)

எம் குடும்பத்தின் குலமகள்
பிரிந்து சென்று ஓராண்டு - எம்
விழிகளில் நீர் இன்னும் காயவில்லை- அம்மா!
உங்கள் பேச்சைத் தேடி
பாச விழுதுகள் ஏங்கி நின்று
நீங்கள் காட்டிய நேர்வழிப் பாதையிலே
எம் பயணத்தை தொடர்கின்றோம்.... அம்மா!
காலங்கள் எத்தனை சென்றிடினும்
உங்கள் எண்ணங்கள் எம் நெஞ்சில் நீங்கிடாது... அம்மா!

பொற்தொழிலாளர் வீதி.
சங்கத்தானை. சாவகச்சேரி.

குடும்பத்தினர்.


# நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஏப்.7

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில் மெய்கண்டான், ஆலடி, சித்திரமேளி, ஆனைவிழுந்தான், நாதோலை ஆகிய இடங்களிலும்– வவுனியா பிரதேசத்தில் இரட்டைப் பெரிய குளத்திலிருந்து பட்டாணிச்சூர் வரை, குளோப் மில் ஆகிய இடங்களிலும்– மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரம், எள்ளுப்பிட்டி, சிறு நாவற்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடை ஏற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# அதிபர் கூட்டம்

வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலையின் அதிபர்களை கலந்து கொள்ளும் படி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (வ)

# சைக்கிளில் சென்றவரை மோதியது கார்

வலி.வடக்கு, ஏப்.7

சைக்கிளில் வீதியில் சென்று கொண்டு இருந்த முதியவரை பின்னால் வந்த கார் மோதியதில் படுகாயமுற்ற நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியைச் சேர்ந்தவரான ரி.சிவலிங்கம் (வயது–76) என்பவரே சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக காரால் மோதுண்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவராவார். சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ–86)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**மாணிக்கம் சிவராசா**



தோற்றம்
23.08.1945

மறைவு
13.04.2013

திதி: திருதியை

எங்கள் அன்பு அப்பாவே!
உங்கள் இழப்பால் எங்கள்
நெஞ்சில் அலை மோதுகின்ற நினைவை
யாராலும் ஈடுசெய்ய முடியாது
எங்கள் பார்வையில் நீங்கள்
இல்லாவிட்டாலும் எங்கள்
நினைவில் நீக்கமறக் கலந்து விட்டீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.

80/10. பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.
(58416)(4.3.6)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் **கணபதிப்பிள்ளை யோகராசா**

அன்னை மடியில்
17.01.1958

ஆண்டவன் அடியில்
22.02.2015

கடந்த 22.02.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (07.04.2015) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிப்பதோடு, தவறவிடப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு மருத்துவமனை தொடக்கம் இன்று வரை பல்வேறு வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள். அதே போல் வெளிநாடுகளில் வாழும் எமது உறவுகள், நண்பர்கள் தொலைபேசி ஊடாகவும் வேறு வழிகளிலும் எமது துக்கத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் எமது நன்றிகள். மற்றும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் பதாதைகள் மலர்வளையங்கள் வெளியிட்டோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெரிய பளை,
பளை.

குடும்பத்தினர்.
(58648) (4.6.3)



## நீங்கா நினைவலைகள்

18 ஆம் ஆண்டு — முதலாம் ஆண்டு



அமரர் வித்துவான் பொன்.
**அ.கனகசபை**

திருமதி **பராசக்தி கனகசபை**

30.10.1917 - தோற்றம் - 24.12.1919
15.03.1997 - மறைவு - 19.03.2014

திதி: திருதியை

மண்ணுலகில் பிறந்து மண்ணுலக வாழ்வில்
மனம் மகிழ வாழ்ந்து இறைவன் நம்பிக்கையில்
ஈடுபட்டு கல்விச்சுடர் ஏற்றி குடும்பத்தின்
குலவிளக்காய் திகழ்ந்து எல்லோரின் உயர்வுக்காய்
பாடுபட்டு பார் போற்ற வையகத்தில் வாழ்ந்த
எம் உயிர்த் தெய்வங்களே உங்கள் ஆத்மா
சாந்தியடைய புங்குடுதீவு கிராஞ்சி முருகனை வேண்டுகின்றோம்.

182, கச்சேரி, நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
(48621) (4.6.3)

என்றும் நினைவில் குடும்பத்தினர்.


# நிர்வாகிகள் தெரிவு

முல்லைத்தீவு, ஏப்.7

முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ந.தசரதகுமாரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாந்தை கிழக்கு, கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் சமூக சேவைகள் அலுவலர்களான க.குணசிங்கம், ம.சுஜிதரன், க.சாருஹாசன், ரி.ராஜ்குமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவராக ந.யோகராசா, உபதலைவராக ரசிதரன், செயலாளராக மு.குகநேசன், உதவிச் செயலாளராக கி.நிர்மலா, பொருளாளராக க.நவரத்தினம் ஆகியோருடன் – ஆறு நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (வ–9)

◆◆◆

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஒன்றியத்துக்கு நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஒன்றியத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் நடப்பு ஆண்டுக்குரிய நிர்வாக சபையின் தலைவராக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் வி.காண்டீபனும் செயலாளராக கல்விக் கிளையின் உதவிப்பதிவாளர் ஆர்.ரமேஸும் பொருளாளராக சிரேஷ்ட உதவி நிதியாளர் எம்.ஐ.லசந்த மாவிக்கும்பரவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உபதலைவராக கைதடி சித்த மருத்துவத்துறையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எட்வேட் றெஜினோல்ட்டும் உப செயலாளராக விவசாயபீட உதவிப் பதிவாளர் எஸ்.பிரணவனும் பத்திராதிபராக உதவி நிதியாளர் செல்வி சதீஸ்காசங்கபாலிகோணபின்வலவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். (வ)

# கிழக்கு காணிப் பிரச்சினையை தீர்க்க தேசிய செயலணியை அமைக்குக

## மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே.எம். லாஹீர் வலியுறுத்து

அம்பாறை, ஏப்.7

கிழக்கு மாகாணத்தில் சாதாரண பொதுமக்களுக்கும் அரச அதிகாரிகளுக்கும் இடையே அரச காணிகள் தொடர்பில் அதிக பிணக்குகள் ஏற்பட்டு வருவதாகவும், அவற்றைத் தீர்த்து வைக்க கிழக்கு மாகாண காணி அமைச்சும், மத்திய அரசின் காணி அமைச்சும் இணைந்து முன்வர வேண்டும் என்றும், இதற்காக கிழக்கு மாகாண சபை காணி தொடர்பான தேசிய செயலணி ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே. எம். லாஹீர்.

கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பொதுமக்களது காணிகள் தொடர்பான பிரச்சினைகள் தொடர்ந்து நிலவி வருவதாக கடந்த மாகாண சபை அமர்வின் போது அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் தென்னைமரவாடி முதல் வெருகல் வரையான பிரதேசங்களில் இந்தக் காணிப் பிரச்சினை நிலவி வருவதாகவும் தோப்பூர் – செல்வாநகர் பிரதேசத்தில் 127 குடும்பங்கள் காணி உறுதிப் பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் இருந்தும்கூட அவர்களது காணிப் பிரச்சினை தீர்க்கப்படாது உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சில பொலிஸ்நிலையங்களில்வாக்கு மூலங்கள் பெறுகின்றபோது தமிழ் மொழியில் பெறப்படாததன் காரணமாக குறித்த ஒரு நபர் எதிரியாக மாற்றப்படுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகிறது.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட ஒருவருக்குக் கூட தனது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தமிழ் மொழியில் வழங்குவதற்கேற்றாற்போல் அரசமைப்புச் சட்டத்தில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள போதும், இவை நடைமுறையில் பெருமளவு செயற் படுத்தப்படுவதில்லை என்றும், அரச நிறுவனங்கள் அரசகரும மொழி செயற்பாட்டை நடைமுறைப் படுத்துவதை மேம்படுத்திக் கொள்வது சிறப்பானதாக அமையும் என்றும் அவர் அந்த மாகாண சபைஅமர்வின்போது உரையாற்றுகையில் தெரிவித்தார். (வ)

## தெரியத் தெரியத் தெரியாமை தெரியும்! நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப்.7

பிரெஞ்சு முனைவர் சதாசிவம் சச்சிதானந்தம் எழுதிய 'தெரியத் தெரியத் தெரியாமை தெரியும்' என்ற நூலின் அறிமுக விழா நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சுந்தரம் டிவகலாலா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பேராசிரியர் இரா.சிவசந்திரன் நூலின் விமர்சன உரையை நிகழ்த்துவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபர் ஐ.தயானந்தராஜா, கோல்டன் ஈகிள் நிறுவன இயக்குநர் க.தர்மகுலசிங்கம், மருத்துவர் வை.யோகேஸ் வரன், உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். தயாளன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெறுவர்.(வ)

# தற்போதைய நிலையில் தமிழரின் பலம் கல்வியிலேயே

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கூறுகிறார்

மட்டக்களப்பு, ஏப்.7

இன்றைய காலத்தில் தமிழ் இனத்தின் பலம் கல்வியிலேயே தங்கியுள்ளது. கல்வி இல்லாது விட்டால் எமது சமுதாயத்துக்கு எந்தப் பலாபலனையும் பெற்றுக்கொடுக்க முடியாது என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்கு உட்பட்ட உதயன் மூலை பாடசாலையில் வியாழக்கிழமை இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற் றிய அவர்:

இதுவரை காலமும் எமக்காக மட்டும் படித்திருந்தாலும், இனி வருழ் காலங்களில் எமது சமுதாயத் துக்காகவும் படிக்க வேண்டும். இவ்வாறு செயற் படும்போதே எமது இனத்தை முன்னிலைக்குக் கொண்டுவர முடியும். ஆசிரியர்கள் தமது கல்விப் புலமையை, தாங்கள் கற்றதை, மாணவர் களுக்கு ஊட்டி அவர்களைத் தாமாகவே முன்னேறச் செய்வதே கல்விச் செயற்பாடு. கல்வி என்பது ஏழை மாணவர்களுக்கு ஊன்றுகோலாக விளங்குகின்றது. ஏழைகளின் முக்கிய பலமும் அது. கல்வியின் மூலம் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தைப் பெறமுடியும். அது மாணவர் களுக்கு மட்டுமல் லாது, பெற் றோருக்கும் எமது சமூகத்துக்கும் பெருமையைத் தேடித் தரும். மாணவர்கள் உறுதியுடன் இதற்கான கனவைக் காண வேண்டும். நாம் வாழ்வதற்கு மட்டும் பிறந்தவர்கள் என்றல்லாமல், சாதிக்கவும் பிறந்தவர்கள் என்பதை சமூகத்துக்கு வெளிப் படுத்தும் அளவுக்கு எமது செயற்பாடுகள் இருக்க வேண்டும். பூவில் இருந்து ஒரு வண்ணத்துப்பூச்சி எவ்வாறு தேனை உறிஞ்சி எடுக்கின்றதோ, அது போல் மாணவர்களும் புத்தகம் என்ற பூவில் இருந்து கல்விஎன்ற தேனை தேடி உறிஞ்சிக் குடிக்க வேண்டும்' –என்றார். (வ)

# கிரான் வாவியில் இறந்து கரையொதுங்கும் மீன்கள்



மட்டக்களப்பு, ஏப். 7

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச வாவியில் கடந்த சில தினங்களாக பெரும் எண்ணிக்கையிலான மீன்கள் இறந்து கரையொதுங்குகின்றன. குறிப்பாக கிரான், தோணிமடு, கும்புறு மூலை மற்றும் கிண்ணையடி வரையிலான சுமார் 7 கிலோ மீற்றர் தூரமுள்ள வாவியில் மீன்கள் இறந்து கரையொதுங்கி வருவதாக மீனவர்கள் தெரிவிக் கின்றனர்.

விலாங்கு, சள்ளல், ஐதல், முரல், திரளி, கெழுத்தி மற்றும் சிலிந்தல் போன்ற மீன் இனங்கள் இறந்து கரையொதுங்குவதனால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் பிரதேச வாசிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதனைத் தொடர்ந்து கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உத விப்பணிப்பாளர் ஏ.ஏ பரீட் நேரடியாகச் சென்று நிலைமையைப் பார்வை யிட்டார். இவ்வாறு மீன்கள் இறந்து கரையொதுங்குவதற்கான காரணத்தை உடனடியாக உறுதிப்படுத்த முடி யாதுள்ளது. இறந்த மீன்கள் மற்றும் வாவி நீர் ஆகிவற்றின் மாதிரிகளை எடுத்து நாரா நிறுவனத்துக்கு பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பியுள்ளோம். அறிக்கை கிடைத்த பின்னரே மீன்கள் இறந்தமைக்கான காரணத்தை உறுதியாகக் கூற முடியும் என அவர் தெரிவித்தார். (வ–10)


**அறைகள் வாடகைக்கு**

யாழ்பல்கலைக்கழகத்துக்கு அண்மையில் பல்கலைக்கழக ஆண் மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 076 803 5262 (58415) (9.3)

**சமையலறை அமைப்பதற்கான கூறுவிலை**

எமது சங்கத்தில் சமயலறை அமைப்பதற்குரிய கூறுவிலை கோரப்படுகிறது. கூறுவிலை சமர்ப்பிப்பவர்கள் சமையலறையின் வரை படம் மற்றும் விபரங்களை அலுவலகத்தில் பெற்று மூடிய கூறு விலையை 20.04.2015ம் திகதிக்கு முன்பாக பின்வரும் முகவரிக்கு நேரடியாகவோ, பதிவுத்தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும். இதற்குத் தேவையான இரும்புத் துண்டுகள் சங்கத்தால் வழங்கப்படும் ஏனைய மூலப் பொருள்கள், ஏற்றியிறக்கல் கூலிகள் என்பவற்றை உள்ளடக்கியதாக கூறுவிலை சமர்ப்பிக்கப்பட வேண்டும். நெறியாளர் குழுவின் முடிவே இறுதியானது.

பொது முகாமையாளர்
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)
திருநெல்வேலி, கோப்பாய். (அ/17354) (9.3)

**தவறிவிட்டது**

Honda காரினுடைய இலக்கத்தகடு (NP Cab 0617) கோயில் வீதிக்கும் K.K.S. றோட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்திற்கு அறியத்தரவும்.

தொடர்பு:- 077 845 2932 (58402)(4.3.7)

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 9, 10, 11 O/L Day Class மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாடங்களில் அதி விசேட புள்ளிகளைப் பெற்றிட, குழுவாக / தனியான கல்வி கற்றிட அழையுங்கள்.

கண்ணன்: 077 579 2214 (58404)(4.3.7)

**விற்பனைக்கு**

முதிரை மேசை, கட்டில்கள், பின்னல் செற்றிகள், கதிரைகள் மற்றும் 14 " TV, சாப்பாட்டு மேசைகள் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு: 071 096 2082 (58414) (9.3)

**விற்பனைக்கு**

இரு கதவுகள் கொண்ட L.G குளிர் சாதனப் பெட்டி பாவித்த நல்ல நிலையில் உண்டு. உடனடி விற் பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 541 8864, 077 271 9323 (51945) (9.3)

**வேலை வாய்ப்பு**

V.R Advertising கம்பனியில் வேலை வாய்ப்புக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றது. O/L , A/L தகைமை உள்ள ஆண், பெண் இருபாலாரும் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம். (58463) (9.3)

தங்குமிடம் இலவசம்.

தொடர்பு: 077 676 3334, 077 144 9798

முகவரி: Point PedroRoad, Nelliady.

**ஷைலோ ஐஸ் கிறீம்**

மிகக் குறுகிய காலத்தில் யாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற Sylo Food and Bavareges Pvt Ltd நிறுவனத்தினராகிய நாம் பால், தேன், பிஸ்தா, பாதாம், முந்திரி, பேரீட்சை, திராட்சை போன்ற இயற்கையான ஆரோக்கியமான சுவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும். Sylo Ice Cream தயாரிப்புக்களின் விற்பனை நிலையத்தை யாழ். நகரத்தில் பஸ் நிலையம் முன்புறம் ஆரம்பித்துள்ளோம். என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.

ஷைலோ ஐஸ்கிறீம்
இல. 442, வைத்தியசாலை வீதி,
(வாகனத்தரிப்பிடம் எதிரில்) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 7885

**CAPS**
Regd No NADS 1354
No 52 Palaly Road Thirunelvely North Jaffna (Near Sampath Bank)

**முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி**

- பயிற்சி நெறி காலம் - 12மாதங்கள்
- வகுப்புக்கள் சனி, ஞாயிறு 9.00 - 4.00
- பேச்சு ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம்.
- சான்றிதழ் பெற 85% வரவு முக்கியம்.
- ஆங்கிலம் கற்பிக்கும் முன்பள்ளி ஆசிரியருக்கு முன்னுரிமை.
- ஏற்கனவேமுன்பள்ளி ஆசிரியரல்லாதவர்களுக்கு G.C.E(O/L) ஆங்கில சித்தி அவசியம்.
- ஓர் அணியில் 25 மாணவர்கள் மட்டும்.
- கற்கை நெறி மாதக்கட்டணம் 2000/= ஆனாலும் இம்முறை சலுகை அடிப்படையில் 600/= மட்டும் அறவிடப்படும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 12.04.2015**

வகுப்பு ஆரம்பம் : 18.04.2015
குறிப்பு - கற்பித்தல் பயிற்சி வழங்கப்படும்.

தொடர்பு: 077 386 7458, 077 656 5258, 021 205 2240

# திட்டமிட்டு அபகரிக்கப்படும் முஸ்லிம் மக்களின் காணிகள்

## மாகாண சபை உறுப்பினர் சிப்லி தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஏப்.7

உள்நாட்டுப் போர் நிலவிய காலத்தின்போதும் அதன் பின்னரும் திட்டமிட்ட வகையில் முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக் தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்;

'போர்க்காலத்தின் போது முஸ்லிம்களுடைய உயிர் மற்றும் உடைமைகள் இழக்கப் பட்டன. அத்தோடு மட்டுமன்றி திட்டமிடப்பட்ட வகையில் முஸ் லிம்களுடைய காணிகள் அபகரிக்கப்பட்டன. அபகரிக்கப்பட்ட காணிகளை சுனாமிக்கு பின்னரான காலங்களில் சமூகத் தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாகவும் அரச திட்டங்களினூடாகவும் குடியேற்றங்கள் செய்யப்பட்டன.

எந்தவிதமான உரிமைகளும் இல்லாமல் முஸ்லிம்களுடைய காணிகளை அத்துமீறி அபகரிப்பதும், இதற்கு தமிழ் அரசியல்வாதிகள் பக்கபலமாக இருப்பதும் ஆட்சி மாற்றத்துக்கு முன்னரும், பின்னரும் என எந்தப் பாகுபாடும் இல்லாமல் இன்று வரை தொடர்கின்றன.

அண்மைக்காலமாக மண்முனைப் பற்று பிரதேச முஸ்லிம்கள் தமது சொந்தக் காணிகளில் குடியேறாமல் தடுக்கப்படுகின்றனர். அதற்காகவே அந்தப் பகுதியில் எந்தவித அடிப்படை வசதிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது அங்கு வாழ்ந்த முஸ்லிம்களுடைய அடிப்படை உரிமையை மீறுகின்ற செயலாகும். இதற்குப் பின்னால் அரசியல் வாதிகளின் கரங்கள் இருப்பதென்பது கவலைக்குரிய விடயமாகும். பல விட்டுக்கொடுப்புகளுக்கு மத்தியில் தமிழ், முஸ்லிம் உறவுகள் வளர வேண்டும் என்ற எண்ணத்துக்கு இவ்வாறான செயற்பாடுகள் முட்டுக்கட்டையாகி விடுமோ என்ற அச்சம் தோன்றுகிறது.

எனவே இது தொடர்பிலான விடயங்களை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதற்கு அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும். சமாதானத்தைக் குழப்புகின்ற முன்னெடுப்புகளை யார் செய்தாலும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்' என்றார். (வ-10)

# கச்சாய் அ.த.க. பாடசாலையின் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல்



கொடிகாமம், ஏப்.7

கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கான 2015ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் மிகவும் சிறப் பான முறையில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்றது.

வன்முறைகளற்ற நற்பிரஜைகளை உருவாக்குதல், வன்முறைகளற்ற நாடாளுமன்றத் தேர்தல்களங்களை உருவாக்குதல், சிறந்த பிரஜைகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்புதல், பாடசாலை பராயத்தி லேயே தேர்தல் விதிமுறைகளைக் கற்பித்தல், சமூகத்துடன் நெருங்கிய தொடர்பை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதாக மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் அமைகின்றது.

தரம் ஆறுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில் 90 மாணவர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

90 மாணவர்களும் வேட்பாளர்களாகத் தெரிவானநிலையில் கடந்த வாரம் பாடசாலையின் வளாகத்திலேயே மாணவ வேட்பாளர்கள் தமது வாக்கை சேகரிக்கும் வகையில் தேர்தல் பரப்புரைகளை வன்முறைகளற்ற முறையில் மேற்கொண்டனர்.

மாணவ வாக்காளர்களுக்கான வாக்குச்சீட்டுக்கள் விநியோகிக் கப்பட்டு வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு வியாழக்கிழமை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலர்கள், ஆசிரியர்களின் கண்காணிப்பில் நண்பகல் 12 மணிவரை தேர்தல் மிகவும் சுமுகமான நிலையிலும் ஆரோக்கியமான முறையிலும் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றுள்ளது.

வாக்குக்களின் அடிப்படையில் முதலமைச்சர், சபாநாயகர், அமைச்சர்கள் என 25 பேரும் உறுப்பினர்களாக 35 பேரும் தெரிவு செய்யப்பட்டு 60 பேர் அடங்கிய சபை உருவாக்கப்படும்.

காப்பாளர் பாடசாலையின் அதிபர் கா.குகசிங்கம் தலைமையில் இடம் பெற்ற மாணவர் நாடாளுமன்றத் தேர்தலில் விருந்தினராக தென்மராட்சி பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம், தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேஸ்வரன் மற்றும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த வே.க.சந்திரகுமார், ஆலோசனை கூறலும் வழிகாட்டலும் தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரிகளான க.ஈஸ்வரன், தி.அபராஜிதன், பாலாவி கிராம சேவகர் த.ஜனகன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.. (வ-105)

# சர்வதேச தரத்திலான பல்கலை வடக்கில் ஆரம்பிக்க வேண்டும்

## ஜனாதிபதி, பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளாராம் மகளிர் விவகார பிரதி அமைச்சர்

கிளிநொச்சி, ஏப்.7

சர்வதேச தரத்திலான பல்கலைக் கழகம் ஒன்றை விரைவில் வடக்கு மாகாணத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். இது தொடர்பாக பிரதமர், ஜனாதிபதியிடம் வேண்டுகோளும் விடுத்துள்ளேன் என்று மகளிர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

'வடமாகாண பெண்களை வலுவூட்டும் விசேட செயல் திட்டம்' என்னும் தொனிப்பொருளி லான உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடை பெற்றது. இதன்போது கலந்து கொண்டு உரையாற் றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

"சர்வதேச தரத்திலான சகல திட்டங்களும் கட்டடங்களும் தெற்கிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. நாங்கள் ஒரு சிறுபான்மை இனம், எங்களு டைய மக்களையும் இந்த அரசின் மூலம் முன்னிலைக்குக் கொண்டு வர வேண்டும். சாதி, மத, இனம் என்ற பேதங்கள் இன்றி, கட்சி பேதம் இன்றி நாங்கள் முன்னோக்கிச் செல்வதற்கு எங்களுக்கும் சர்வதேச பல்கலைக் கழகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும்.

கடந்த பேரினவாத அரசால் அநியாய மாக சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக் கான நினைவுத்தூபி ஒன்றை வடக்கு மாகாணத்திலே கட்டி திறக்கப்பட வேண்டும். வடக்கில் பல ஊடகவியலாளர்கள் கஷ்டப்பட்டிருக்கின்றார்கள். அவர்களில் பலர் சுட்டு கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே மகளிர் தினத்தை அடுத்து வரும் ஊடகவியலாளர்களது தினத்திலே வடமாகாணத்தில் அவர்களுக்கான ஒரு நினைவுத்தூபியை கட்டி திறப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் இந்த 100நாள் திட்டத்திலே மேற்கொள்ளவுள்ளோம்" – என்றார். (வ-21)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை நவீந்திரன் (நவி)



தச்சந்தோப்பு, கைதடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை நவீந்திரன் (03.04.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், வசந்தியின் அன்புக்கணவரும், ஜனுசன், வினுதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரமணி, அன்னலட்சுமி, சந்திரமலர், தவமணி, அருமைத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2015) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றைய தினம் புவனிஅம்மன் வீதி, தச்சந்தோப்பு கைதடியிலுள்ள சகோதரியின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரர்கள்.
0033148311017,
077 945 4655

தச்சந்தோப்பு,
கைதடி.

(58407)(4.3.7)

## மரண அறிவித்தல்

### துரையப்பா தில்லையம்பலம்



இணுவில் கிழக்கைச் சேர்ந்த துரையப்பா தில்லையம்பலம் (03.04.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், இரத்தினேஸ்வரியின் அன்புக்கணவரும், புஸ்பராணி (ஜேர்மன்), காலஞ்சென்ற புஸ்பராஜா, யோகராணி, யோகராஜா (லண்டன்), யோகேந்திரன் (ஜேர்மனி), ஜெயராணி (லண்டன்), ஜெயராஜா (கொலண்ட்), ஆகியோரின் தகப்பனாரும், இன்பநாதன், சிவபாலன் (மண்டைதீவு), விஜிதா, நிரோஜினி, ஜெகநாதன், தாரணி ஆகியோ ரின் மாமனும் நிருசன், பிரசான், அனுகாசினி, கிருசன், மகிழினி, நிசாலினி, யதுசன், மிதுலன், பிரநாத், நிரோஜன், ஜனனி, ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, செல்லம்மா, இராசமணி, சுப்பிரமணியம், மற்றும் தங்கம்மா ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 07.04.2015 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பிள்ளையார் கோயிலடி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
021 3213910,077 646 2035

# நீதியான அதிகாரப்பகிர்வுக்கு கட்சிகள் உடன்பட வேண்டும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, ஏப்.7

"வடக்கு, கிழக்கு மாகா ணங்களுக்கு நீதியான முறையில் அதிகாரங்களைப் பகிர்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சியு டன் ஏனைய கட்சி களும் உடன்பட வேண்டும்" – என்று பெருந்தோட்ட அமைச்சரும், கண்டி மாவட்ட நாடாளு மன்ற.உறுப்பினரு மான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி, ஹாரகம பிரதேசத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரி வித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதா வது:

"இந்தமுறை நாடாளுமன்றத் தேர் தலின் பின்னர் தேசிய அரசு ஒன்றை அமைத்து நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுப்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவின் எதிர் பார்ப்பாகும். அந்த வகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு நீதியான முறையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டி லேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. இதற்கு ஏனைய கட்சிகளும் உடன்பட வேண்டும்" – என்றார். (வ)

## உயிரை மாய்க்க முயன்றவர் மருத்துவமனையில்

வலி.வடக்கு, ஏப்.7

வீட்டில் தனிமையில் இருந்த பெண் ஒருவர் நஞ்சு மருந்து அருந்தி ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்து வமனையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மதியம் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை சந்திரகாந்தி (வயது –54) என்பவரே மருந்து அருந்திய நிலையில் மருத்துவமனை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளவராவார்.

சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (வ-86)



## பேஸ்புக்கின் 'டிரோன்ஸ்' திட்டம்


உலகின் முன்னணி சமூகவலைத்தளமான பேஸ்புக் ஆனது கூகுள், அப்பிள் நிறுவனங்களைப் போன்று பல்வேறு முயற்சிகளிலும் காலடி பதித்து வருகின்றது.
இதன் ஒரு அங்கமாக Internet Drones எனும் திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.
இது (Drone) ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தி கடற்பரப்பு, அடர்ந்த காடுகள் உள்ள பகுதிகளுக்கு இணைய வசதியின்னை வழங்கும் திட்டமாகும்.
இந்தத் திட்டத்தை வரவுள்ள கோடை காலப் பகுதியில் பரீட்சிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
மேலும் சோலர் மின்சக்தியில் இயங்கவுள்ள Drone ரக விமானங்களின் உதவியுடன், இணையப் பாவனை வசதி அற்ற மொத்த மக்கள் தொகையில் 1.1 பில்லியன் தொடக்கம் 2.8 பில்லியன் வரையான மக்களுக்கு இணைய இணைப்பை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## உலகிலேயே மிகச் சிறிய துளையிடும் சாதனம்

இரும்பு, பலகை, சுவர்கள் என்பவற்றைத் துளையிடுவதற்கு Driller எனும் துளையிடும் சாதனம் பயன்படுத்தப்படுவது அறிந்ததே.
இந்தச் சாதனமானது தேவைக்கு ஏற்றாற்போல் பல அளவுகளில் காணப்படுகின்றது.
இவ்வாறிருக்கையில் உலகிலேயே காணப்படும் Driller சாதனங்களில் மிகவும் சிறிய Driller உருவாக்கப்பட்டுள்ளது.
17 மில்லி மீற்றர் உயரமும், 7.5 மில்லி மீற்றர் அகலமும், 13 மில்லி மீற்றர் நீளமும் கொண்ட இந்தச்சாதனத்தை நியூசிலாந்தைச் சேர்ந்த பொறியியலாளரான Lance Abernethy என்பவர் வடிவமைத்துள்ளார்.



## மனிதனின் அறநெறிக் கோட்பாட்டை தகர்க்கும் இணையப் பாவனை



சமகாலத்தின் இணையப் பாவனையானது அனைத்துத் துறைகளிலும் வியாபித்துக் காணப்படுவதுடன், இணையம் இன்றி துரும்பும் அசையாது எனும் நிலைமை தோன்றியுள்ளது.
இந்த இணையமானது கல்வித் துறைக்குப் பெரும் உதவியாக இருப்பதுடன் மனிதனின் அறநெறிக் கோட்பாடுகளைத் தகர்க்கக்கூடிய அளவிற்குப் பாதகமாகவும் காணப்படுவதாக ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
Pew Research Center எனும் நிறுவனம் மேற்கொண்ட இந்த ஆய்வுக்காக அபிவிருத்தியடைந்த 32 நாடுகளைச் சேர்ந்த 36,619 பேர் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.
இதில் 64 சதவீதமானவர்கள் இணையத்தளம் கல்வித் துறைக்குப் பயனுள்ளதாகக் காணப்படுவதாகவும், 42 சதவீதமானவர்கள் மனிதனின் அறநெறிக் கோட்பாடுகளைத் தகர்ப்பதற்கு வழிவகுக்கின்றது எனவும் தெரிவித்துள்ளனர்.

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர், பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

30 அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# நடைமுறையில் இல்லாத சட்டங்கள் ஒழிக்கப்படும்

### நீதிவான்கள் மாநாட்டில் பிரதமர் மோடி அறிவிப்பு

டில்லி,ஏப்.7
நடைமுறையில் இல்லாத ஆயிரத்து 700 சட்டங்கள் ஒழிக்கப்படும் என்று நீதிவான்கள் மாநாட்டில் இந்தியப் பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.
டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற உயர் தலைமை நீதிவான்களின் மாநாடொன்றில் பங்கேற்ற பிரதமர் மோடி மேலும் தெரிவிக்கும் போது;
நீதித்துறை பலம் வாய்ந்ததாக இருக்கின்றபோது மக்களின் எதிர் பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அது மிகச் சரியானதாக இருக்க வேண்டும். அரசுக்கும், அரசியல்வாதிகளுக்கும் பங்களிப்பு இல்லாத நிலையில், நீதித்துறைக்குள் சுய மதிப்பீடு செய்துகொள்ள ஒரு வழிமுறை தேவை.
அப்படியொரு வழிமுறையை உருவாக்காவிட்டால், நீதித்துறை மீதான நம்பிக்கை சற்றுத் தளர்ந்து போகும். எனவே மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் நடைமுறையில், செயற்பாட்டில் இல்லாத சட்டங்கள் ஒழிக்கப்படும். அந்த வகையில் ஆயிரத்து 700 சட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவை ஒழிக்கப்படுவதற் கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (14)

# ஐரோப்பிய நாடுகளுக்கு பயணமாகிறார் மோடி

## 8 நாள்கள் சுற்றுப்பயணம்



டில்லி,ஏப்.7
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முதன்முதலாக ஐரோப்பிய நாடுகளுக்கு 8 நாள்கள் கொண்ட சுற்றுப்பயணத்தை நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கவுள்ளார். பிரான்ஸ், ஜேர்மன், கனடா ஆகிய 3 நாடுகளுக்குப் பயணமாகும் பிரதமர் மோடி முதல் நாள் பயணமாகப் பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிஸுக்குச் செல்லவுள்ளார்.
பிரான்ஸ் நாட்டுக்கான தமது பயணத்தின்போது, இராணுவம், விண்வெளி, ரயில்வே, அணு சக்தி ஆகிய துறைகளில் இந்தியா வின் ஒத்துழைப்புக் குறித்து பிரான்ஸ் நாட்டின் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டேயைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளார். அதனைத் தொடர்ந்து அந்த நாட்டில் வசிக்கும் இந்தியர்கள், தொழிலதிபர்கள், வர்த்தக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கப் பிரதமர் மோடி திட்டமிட்டுள்ளார்.
அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம் திகதி ஜேர்மன் நாட்டில் உள்ள ஹனோவர் நகருக்குச் செல்லும் மோடி, அங்கு அன்றைய தினம் நடைபெறவுள்ள ஹனோவர் மெஸே–2015 என்ற வர்த்தகக் கண்காட்சியை அந்த நாட்டின் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலுடன் இணைந்து ஆரம்பித்து வைக்கவுள்ளார். அதனைத்தொடர்ந்து ஜேர்மனியின் தலைநகரான பெர்லினில் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலுடன் வர்த்தக மேம்பாடு குறித்துப் பேச்சில் ஈடுபடவுள்ளார்.
ஜேர்மன் நாட்டின் பயணத்தை முடித்துக் கொண்டு அங்கிருந்து எதிர்வரும் 14 ஆம் திகதி கனடாவுக்கு செல்லும் மோடி அங்கு 3 நாள்கள் சுற்றுப்பயணம் மெற்கொள்ளவுள்ளார். கனடாவின் ரொறான்ரோ, ஒட்டவா, வான்கூவர் நகரங்களுக்குச் செல்லும் அவர் கனடாவின் பிரதமர் ஸ்டீபன் ஹார்பரைச் சந்தித்து எரிசக்தி, உற்பத்தி, உள்கட்டமைப்பு, கல்வி, திறன் மேம்பாடு, ஆராய்ச்சி, உணவு பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இந்தியாவின் ஒத்துழைப்புக் குறித்து பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.
பிரான்ஸுக்கு 3 நாள்களும், ஜேர்மனுக்கு 2 நாள்களும், கனடாவுக்கு 3 நாள்களும் என 8 நாள்கள் சுற்றுப்பயணங்களை மேற்கொள்ளும் பிரதமர் மோடி, ஐரோப்பிய நாடுகளில் இந்தியாவின் வர்த்தக மேம்பாடு குறித்தே முக்கிய பேச்சுக்களில் ஈடுபடவுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (14)

# இந்திய எல்லைப் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவல்



டில்லி,ஏப்.7
இந்தியாவின் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் மட்டுமன்றி, சீன இராணுவமும் அவ்வப்போது இந்தியாவுக்குத் தொல்லை கொடுத்து வருகிறது.
இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே 4 ஆயிரம் கிலோ மீற்றர் நீளமான எல்லை உள்ளது. சீன இராணுவம் சில சமயங்களில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மீறி அத்துமீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.
கடந்த 2013 ஆம் ஆண்டு சீன இராணுவ வீரர்கள் காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதிக்குள் நீண்ட தூரம் ஊடுருவி அங்கு முகாம்களை அமைத்தனர். அதனால் எல்லையில் இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவானது. அந்த ஊடுருவலுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்திருந்தது. அதனைத் தொடர்ந்து இரு நாட்டு அதிகாரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன் பின்னர் சீன இராணுவம் தனது ஆக்கிரமிப்புப் போக்கை கைவிட்டு லடாக் பகுதியில் இருந்து பின்வாங்கிச் சென்றது. இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் சீன இராணுவ வீரர்கள் சிலர் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டைத் தாண்டி லடாக்கின் வடக்கே தெப்சாங் பகுதிக்குள் ஊடுருவ முயற்சித்துள்ளனர். எனினும் எல்லையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய வீரர்கள் சீன இராணுவத்துக்கு எச்சரிக்கை விடுத்தபடி, அவர்களை திரும்பிச் செல்ல கோரும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகையை பிடித்துக் கொண்டு அந்த இடத்தை நோக்கி முன்னேறியுள்ளனர்.
அதனைத் தொடர்ந்து சீன இராணுவ வீரர்கள் அங்கிருந்து பின்வாங்கித் தங்கள் நிலப்பகுதிக்குள் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# சிதறியது மலேசிய ஹெலி

## முன்னாள் தூதுவர் உட்பட 6 பேர் சாவு



கோலாலம்பூர்,ஏப்.7
மலேசியாவின் ஹெலி ஒன்று வெடித்துச் சிதறிய விபத்தில், அமெரிக்காவுக்கான முன்னாள் தூதுவர் உட்பட 6 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மலேசியாவின் பிரதமர் நஜீப் ரசாக்கின் மகளது திருமண நிகழ்வுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது அந்த விபத்து இடம்பெற்றுள்ளது. திருமணம், பெகான் என்ற இடத்தில் நடைபெற்ற போது அதில் மலேசியாவைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். திருமணம் முடிந்த பின்னர் அமெரிக்காவுக்கான முன்னாள் மலேசியத் தூதுவர் ஜமாலுதீன் ஜார்ஜிஸ், பிரதமரின் உதவியாளர் உட்பட 6 பேர் ஹெலிகொப்டரில் திரும்பிச் சென்றுள்ளனர். அதன்போது மலேசியாவின் தெற்கு மாகாணமான செமன்யீக் பகுதியில் குறித்த ஹெலிகொப்டர் திடீரென தீபிடித்து வெடித்துச் சிதறியுள்ளது. அதில் பயணித்த 6 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். தகவலறிந்த மீட்புப் படையினர் விரைந்து சென்று உடல்களை மீட்டுள்ளனர். இயந்திரக் கோளாறு காரணமாக அந்த விபத்து நடந்திருக்கலாம் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. அந்த விபத்துக் குறித்து உயர் மட்ட விசாரணைகளை மேற் கொள்ளுமாறு மலேசியாவின் பிரதமர் நஜீப் ரசாக் உத்தரவிட்டுள்ளார். (14)

# ஸ்கொட்லாந்தில் உயர் பதவிகளில் இந்தியர்கள்

ல்ண்டன்,ஏப்.7
ஸ்கொட்லாந்தில் வாழும் சிறுபான்மையினரில் இந்தியர்கள் அதிகம் படித்தவர்களாகவும், உயர் பதவிகளில் இருப்பவர்களாகவும் உள்ளனர் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. உலகிலேயே தலைசிறந்த பொலிஸாரைக்கொண்ட ஸ்கொட்லாந்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த லட்சக்கணக்கானோர் வசித்து வருகின்றனர். 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி, ஸ்கொட்லாந்தின் மக்கள்தொகை சுமார் 53 லட்சமாக இருந்தது. அதில் 84 சதவீதம் பேர் ஸ்கொட்லாந்தைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். 16 சதவீதம் பேர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களாவர் எனத் தெரியவந்தது.
இந்த நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனமொன்று ஸ்கொட்லாந்தில் வசிக்கும் சிறுபான்மையினர் குறித்து ஆய்வொன்றை நடத்தியது. ஸ்கொட்லாந்திலுள்ள இந்தியர்கள் அதிகம் படித்தவர்களாகவும், அந்த நாட்டில் உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் உள்ளனர் என அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# திருடியதற்காக மன்னிப்புக் கோரிக் கடிதம்

சைபீரியா,ஏப்.7
சைபீரியாவில் திருடன் ஒருவன் தான் திருடிய வீட்டில் மன்னிப்புக் கடிதத்தையும், தனது புகைப்படத்தையும் விட்டுச் சென்றுள்ளான்.
சைபீரியாவின் புரோகோப்வெஸ்க் நகரில் உள்ள வீடொன்றில் புகுந்த ஒருவன் அங்கிருந்த ஒரு சங்கிலியையும், சிகரெட் பக்கெற்றுக்களையும் திருடியுள்ளான். பின்னர், அந்த வீட்டில் தனது புகைப்படம் மற்றும் ஒரு மன்னிப்புக் கடிதத்தையும் வைத்து விட்டுச் சென்றுள்ளார். அந்த மன்னிப்புக் கடிதத்தில், 'நான் இன்று எனது கட்டுப்பாட்டை மீறுகிறேன். என்னை மன்னித்து விடுங்கள்' என்றும் 'இந் தச் செயலுக்காக என்னையே நான் வெறுக்கிறேன்' எனவும் குறிப்பிட்டுள்ளான். அதனைத் தொடர்ந்து திருடனின் புகைப் படத்தை வீட்டு உரிமையாளர் பொலிஸாரிடம் ஒப்படைத்ததையடுத்து அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (14)

# அத்தையின் கல்லீரலுடன் வளரும் சிறுமி

டப்ளின், ஏப்.7
அயர்லாந்து நாட்டின் தலைநகரான டப்ளின் அருகேயுள்ள டால்கே பகுதியைச் சேர்ந்த ஒரு பெண் குழந்தைக்கு, பிறப்பிலேயே கல்லீரல் பாதிக்கப்பட்டிருந்ததால் அந்தக் குழந்தையின் உடலில் உள்ள நச்சுப் பொருள்களை வெளியேற்றுவதில் சிரமம் ஏற்பட்டு உடல் முழுவதும் நஞ்சாக மாறிவிடும் அபாய நிலை ஏற்பட்டது.
யாரிடமாவது கல்லீரலைத் தானமாகப் பெற்றுத்தந்தால் அதைப் பொருத்திக் குழந்தையைக் காப்பாற்றி விடலாம் என வைத்தியர்கள் தெரிவித்தனர். ஆனால், யாருமே அதற்கு முன்வராதநிலையில் குழந்தையின் அத்தையான டெய்ர்ட்ரே கோர்மன் என்பவர் தனது கல்லீரலின் ஒரு பகுதியைத் தானமாக வழங்க முன்வந்தார். அதிர்ஷ்டவசமாக குழந்தை லாரா மெக்டொவெல்லின் இரத்தப் பிரிவுடன் அவரது அத்தையின் இரத்தப் பிரிவும் ஒத்துப்போனதால், கோர்மனின் கல்லீரலின் 23 சதவீதம் வெட்டியெடுக்கப்பட்டு லாராவின் உடலினுள் பொருத்தப்பட்டது.
எனினும். 50 வயது அத்தை 6 வருடங்களுக்கு முன்னர் தானமாக அளித்த கல்லீரல் தற்போது ஆறாவது வயதை எட்டியுள்ள லாராவின் உடலில் இன்னமும் எத்தனை நாளைக்கு இயங்கு நிலையில் இயங்கும்? என்ற அச்சம் அவளது பெற்றோரைத் தற்போது ஆட்கொள்ள ஆரம்பித்துள்ளது. அதைப் போன்று தானமாகப் பெற்றுப் பொருத்தப்பட்ட கல்லீரல்கள் 16 வருடங்கள் வரையில் துல்லியமாகச் செயற்பட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (14)






ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற போர் நினைவு தினமொன்றுக்கு வருகை தந்த பிரிட்டனின் இளவரசர் ஹரியைப் பார்ப்பதற்கு முண்டியடிக்கும் மக்கள்

## காதல் ஜோடிகளின் எலும்புக்கூடு மீட்பு

றொரண்ரோ, ஏப்.7

சீனாவின் மங்கோலியாவில் உள்ள கோபி பாலைவனப் பகுதியில் பூமிக்குள் புதைந்த நிலையில் 2 டயனோசர் எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அது குறித்து அல்பெர்டா பல்கலைக்கழகத்தின் பழங்கால ஆராய்ச்சித் துறையினர் ஆய்வு மேற்கொண்டனர். அவை பறவைகள் போன்று பறக்க கூடியவகை டயனோசர்களது எலும்புக் கூடுகள் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

மேலும் ஏழரைக் கோடி வருடங்களுக்கு முன்னர் அவை வாழ்ந்திருக்கலாம். அவற்றில் ஒன்று ஆண், மற்றொன்று பெண் எனவும் எலும்புக் கூடுகளின் படிமங்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிய நிலையில் இருந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, அவை இரண்டும் இணைந்திருந்த நிலையில் மண்ணில் புதைந்து அழிந்திருக்கலாம் என்பதால் அந்த டயனோசர்களை காதல் ஜோடிகளாக ஆய்வாளர்கள் கருதியுள்ளனர். (14)

# காணாமற்போன மலேசிய விமானம்: அதிர்ச்சியான புதிய தகவல்கள்



கோலாலம்பூர்,ஏப்.7

கடந்த வருடம் காணாமல்போன மலேசிய விமானம் குறித்து தற்போது அதிர்ச்சியளிக்கும் புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வருடம் மார்ச் 8ஆம் திகதி கோலாலம்பூரில் இருந்து 239 பயணிகளுடன் பிஜீங் சென்ற ஆர்–370 விமானம் திடீரென நடுவானில் மாயமானது.

அதனையடுத்து இந்தியப் பெருங்கடலில் அந்த விமானம் விழுந்ததாக மலேசிய அரசு அறிவித்ததன் பேரில் சர்வதேச நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் நீர்மூழ்கிக் கப்பல்கள் மூலம் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன.

தற்போது ஒரு வருடம் கடந்து விட்ட நிலையிலும், இன்று வரை தேடுதல் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் மாலைதீவில் உள்ள குடகுவாகோ என்ற பகுதியில் வசிக்கும் மக்கள் ஓர் அதிர்ச்சியான தகவலை வெளியிட்டுள்ளனர்.

அதாவது, மலேசியா விமானம் காணாமல்போன அதே நாளில் அவர்கள் வசிக்கும் பகுதியில் சற்று மேலே ஒரு பெரிய விமானம் தாழ்வாகப் பறந்து சென்றதாகத் தெரிவித்துள்ளனர்.

தற்போது ஆஸ்திரேலியாவின் மேற்குக் கடற்பகுதியில் தேடுதல் பணி நடந்து வருகிறது. அதனடிப்படையில் தேடுதல் பணி நடைபெறும் இடத்துக்கும் குறிப்பிட்ட பகுதி மக்கள் வசிக்கும் குடகுவாகோ என்ற இடத்துக்குமான இடைவெளி சுமார் 5 ஆயிரம் கிலோ மீற்றர் தூரமாகும்.

தாழ்வாகப் பறந்து வந்த விமானத்தின் சிவப்பு மற்றும் நீல நிறங்களை தம்மால் தெளிவாகக் காண முடிந்ததாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். அது மட்டுமல்லாமல், பெரும்பாலான மக்கள் அந்த பகுதியில் ஒரு விமானம் தாழ்வாகப்பறந்து சென்றதைப் பார்த்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆனால், அந்த விமானம் காணாமற்போன நாளன்று அந்தப் பகுதியில் எந்த விமானமும் சென்றதாகத் தங்களது ராடரில் பதிவாகவில்லை என்று மாலைதீவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

குடகுவாகோ பகுதி மக்கள் புதிய தகவல்களை வெளியிட்டதுடன் மலேசிய விமானம் குறித்து விசாரணை நடத்தும் அதிகாரிகள் தங்களை வந்து சந்தித்தால், விமானம் காணாமற்போன நாளன்று நடந்த அனைத்து விவரங்களையும் பகிர்ந்து கொள்ளத் தாம் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

மலேசியவிமானம்காணாமற்போய் ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், தற்போது அந்த விமானம் குறித்து அதிர்ச்சியான புதிய தகவல்கள் வெளியாகியுள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (14)

## 35 வருடங்களாக பெண்களுக்கிருந்த தடை நீக்கம்

டெஹ்ரான், ஏப்.7

எண்ணெய் வளம் மிக்க அரேபிய நாடுகளில் ஒன்றான ஈரானில் நடைபெறும் ஆண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடவும், சில விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கவும் அந்த நாடுபெண்களுக்குத்தடைவிதித்திருந்தது.

கடந்த வருடம் ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நடைபெற்ற ஆண்களுக்கான கைப்பந்துப் போட்டியைப் பார்வையிட மைதானத்துக்கு வருகைதந்த 26 வயதுடைய இங்கிலாந்துப் பெண்ணை ஈரான் பொலிஸார்கைது செய்தனர். சுமார் 5 மாதங்கள் சிறைத்தண்டனையின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அந்தத் தடையை நீக்கிப் பெண்களும்விளையாட்டுப்போட்டிகளைப் பார்வையிடஅனுமதியளிக்கவேண்டும் எனச் சர்வதேச கால்பந்து சம்மேளனமான பிபா, அண்மையில் ஈரான் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. அதற்கமைவாக ஆண்கள் பங்குபற்றும் குறிப்பிட்ட சில விளையாட்டுப் போட்டிகளை மட்டும் பார்வையிட பெண்களையும், குடும்பங்களையும் அனுமதிப்பது என ஈரான் அரசு முடிவு செய்துள்ளது.

சுமார் 35 வருடங்களின் பின்னர் இந்தத் தடை நீக்கப்பட்டுள்ள போதிலும் எல்லாப் போட்டிகளுக்கும், எல்லா மைதானங்களுக்கும் அது பொருந்தாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (14)

## உலக சாதனை படைத்த 100 வயதான ஜப்பான் பாட்டி

மட்சுயாமா, ஏப்.7

ஜப்பானில் உள்ள மட்சுயாமா நகரில் நடைபெற்ற மாஸ்டர்ஸ் நீச்சல் போட்டியொன்றில், பெண்கள் பிரிவுக்கான 1500 மீற்றர் பின்புற நீச்சல் போட்டியில் 100 வயதான மீக்கோ நகோகா என்றபாட்டிஉலகசாதனை படைத்துள்ளார்.

100 முதல் 104 வயதுக்குரியவர்களுக்கான அந்தப் போட்டியில் அவர் மட்டுமே கலந்து கொண்ட போதிலும், 1500 மீற்றர் தூரத்தை ஒரு மணி நேரம் 15 நிமிடம் மற்றும் 54 விநாடிகளில் பின்புறமாக நீச்சலடித்து உலக சாதனை படைத்துள்ளதாக ஜப்பான் மாஸ்டர்ஸ் நீச்சல் சங்கம் தெரிவித் துள்ளது.

அவரது சாதனையை கின்னஸ் சாதனையாக அங்கீகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1914 ஆம் ஆண்டு பிறந்தவரான மீக்கோ 2002 ஆம் ஆண்டு நியூஸிலாந்தில் உள்ள கிரைஸ்ட்சர்ச் நகரில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் முதல் முறையாக பங்குபற்றியுள்ளார். அங்கு 50 மீற்றர் தூரம் பின்புற நீச்சல் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று மீக்கோ சாதனை படைத்தார்.



அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற 50 மீற்றர், 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் பின்புற நீச்சல் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார். அவர் 90 வயதை எட்டிய போது அவருக்கு ஜப்பான் நாட்டின் தேசிய நீச்சல் வீராங்கனை என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டது.

நீச்சல் போட்டிகளில் இது வரை 24 உலக சாதனைகளை மீக்கோ படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## பிரான்ஸில் மசூதிகளை அதிகரிக்க இஸ்லாமியத் தலைவர்கள் முடிவு

பாரிஸ்,ஏப்.7

பிரான்ஸ் நாட்டில் உள்ள மசூதிகளின் எண்ணிக்கையை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் இரட்டிப்பாக்க முடிவு செய்துள்ளதாக அந்த நாட்டிலுள்ள இஸ்லாமியத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் மில்லியன் எண்ணிக்கையில் இஸ்லாமிய சமுதாயத்தினர் வசித்து வருகின்றனர். பிரான்ஸ் நாட்டில் அதிக எண்ணிக்கையில் இஸ்லாமிய மக்கள் வசித்து வந்தாலும், அவர்கள் வழிபாடுகளை மேற்கொள்வதற்குப் போதுமான மசூதிகள் இல்லை என்பது நீண்டகாலமாக நிலவி வரும் ஒரு குறைபாடாகும்.

பிரான்ஸில் தற்போது 2 ஆயித்து 200 மசூதிகள் உள்ளன. ஆனால், இஸ்லாமிய மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, அந்த மசூதிகளில் வழிபாடுகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேலும், நாட்டில் புதிதாக மசூதிகள் கட்டப்படும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றை விரைந்து முடிப்பதுடன், தற்போதுள்ள மசூதிகளின் எண்ணிக்கையை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் இரட்டிப்பு ஆக்கப்படும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.



## பங்களாதேஷில் புயல் தாக்கம்: 40 பேர் சாவு; 50 பேர் காயம்

டாக்கா, ஏப்.7

இந்தியாவின் அண்டை நாடான பங்களாதேஷில் நேற்று முன்தினம் கடும் புயல் தாக்கியுள்ளது. அதனால் வட பகுதியில் உள்ள போக்ரா மாவட்டம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், புயல் காரணமாக பலத்த சூறாவளிக் காற்றுடன் மழையும் பெய்துள்ளது.

அதன் காரணமாக வீடுகளின் இடிபாடுகள் மற்றும் வெள்ளத்தில் சிக்கி 40 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

பலத்த சூறாவளியால் வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன் வெள்ளத்தால் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன. அதன் காரணமாக ஏராளமானோர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. பங்களாதேஷின் இளவேனில் பருவத்தில் தற்போது தான் முதன் முறையாக கடுமையாகப் புயல் தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## ஒபாமாவால் வீதியில் குழந்தைப் பிரசவித்த தாய்

வொஷிங்டன்,ஏப்.7

அமெரிக்காவில் ஒபாமா பயணம் செய்தபோது ஏற்பட்ட போக்குவரத்து நெரிசலில் சிக்கிய கர்ப்பிணிப் பெண்ணொருவர் வீதியிலேயே குழந்தைப் பிரசவித்த சம்பவம் பரிதாபத்தை ஏற்படுத்தியுள்ளது.

கெண்டகி மாகாணத்தில் உள்ள தனியார்நிறுவனமொன்றில்வேலை வாய்ப்புக் குறித்த நிகழ்வொன்றில் அமெரிக்காவின் ஜனாதிபதி ஒபாமா பங்கேற்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக அந்தப் பகுதி வீதிகள் அனைத்தும் போக்குவரத்துக்காக சில மணி நேரங்கள் மூடப்பட்டன. அந்த நிகழ்வுக்கு முன்னதாக ஈரான் நாட்டுடன் அணு ஆயுதம் குறித்த பேச்சுவார்த்தையில் ஒபாமா ஈடுபட்டிருந்ததால், அவரால் குறித்த நேரத்தில் அந்த வீதியால் பயணிக்க முடியவில்லை.

அதனால் சுமார் 3 மணி நேரம் குறித்த வீதியொன்றில் வாகனங்கள் செல்வது இடைநிறுத்தப்பட்டது. அந்த வீதியால் பயணித்த கார் ஒன்றில் நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணொருவரும் மேற்கொண்டு பயணிக்க இயலாததால் குறித்த நேரத்துக்கு அவரால் வைத்திய சாலைக்குச் செல்ல முடியவில்லை.

சிறிது நேரத்தில் அந்தக் கர்ப்பிணி பெண் வலியால் துடிக்க ஆரம்பித்துள்ளார். அதன் போது வீதியில் தரித்து நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு காரில் இருந்த பெண்ணொருவர் உதவியதால் வலியால் துடித்த அந்தப்பெண் காருக்குள்ளேயே குழந்தையைப் பிரசவித்தார். சிறிது நேரத்தின் பின்னர் ஒபாமா அந்த வீதியைக் கடந்து சென்றதும், போக்குவரத்து சீராக்கப்பட, அந்தப் பெண் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (14)

# குறிகாட்டுவானில் அவலப்படும் நெடுந்தீவு பயணிகள்



வந்தியத் தேவர்

திரும்பவும் நெடுந்தீவுக்கே கொண்டு செல்லுங்கள் எனப் பயணிகள் கூச்சலிடுவதில் நியாயம் உள்ளது. தொடர்ந்தும் இம்சைகள் என்றால் அதை எப்படித்தான் அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியும்?

நெடுந்தீவில் இருந்து பயணிகளுடன் குறிகாட்டுவான் துறைமுகத்துக்கு வரும் படகுகளை துறைமுகத்தில் நிறுத்தவிடாது தாமதிக்கச் செய்வது தொடர்கதையாகவே உள்ளது. குறிகாட்டுவானில் துறைமுகம் ஒன்று உருவானதற்கு நெடுந்தீவு மக்களே அடித்தளம் இட்டார்கள். நெடுந்தீவில் கிராமத் தலைவர்களினதும் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகவே குறிகாட்டுவான் பாலம் உருவானது. எனினும் இன்று நெடுந்தீவு மக்களுக்கு சகிக்கமுடியாத அளவுக்கு வெறுப்பேற்றிக்கொண்டிருக்கும் ஒன்றாக அது மாற்றப் பட்டுள்ளது.

இந்த மாறுதல்களுக்குக் காரணமானவர்கள், அங்கு வீணாக நிறுத்தப்பட்டிருக்கும் கடற்படையின்ரும் தென்பகுதி மக்களை நயினாதீவு நாகவிகாரைக்கு ஏற்றிச்செல்லும் படகுகளுமேயாகும்.

இந்தப் பாலத்தில் நெடுந்தீவுப் படகுகளுக்குமுன்னுரிமைவழங்கி, அதன் பிற்பாடுதான் ஏனைய படகுகளுக்கு இடம்வழங்கப்பட வேண்டும். வீதி அபிவிருத்தி அதிகார சபையும் இந்த நியதியை ஒப்புக்கொள்ளும். ஆனால் நிலைமை தலைகீழாக மாறியுள்ளது: தற்போது நெடுந்தீவில் இருந்துவரும் படகுகளைத்துறைமுகப் பாலத்தில் நிறுத்த விடாது. தாமதிக்க வைத்து நெடுந்தீவுப் பயணிகளுக்குச் சிரமங்களை உண்டுபண்ணுவதே அங்கு அதிகாரத்தில் உள்ளவர்களின் பொழுது போக்காகிவிட்டது. துறைமுகப் பாலத்தில் ஏனைய படகுகளை நிறுத்தி வைத்து நெடுந்தீவுப் பயணிகள் அவற்றில் ஏறித் துறைமுகத்தில் இறங்க வைப்பது, முதல் படகிலேயே நீண்டநேரம் காத்திருக்க வைத்து இறங்க அனுமதிப்பது போன்ற நடவடிக்கைகள் அந்த மக்களைத் திட்டமிட்டே இம்சைக்குட்படுத்துவதாகவே கருத முடிகிறது.

நோயாளர்கள், பெண்கள், முதியவர்கள் குழந்தைகள் என்று வரும் பல தரப்புப் பயணிகளின் சிரமங்கள் குறித்து அவர்கள் சிந்திப்பது கிடையாது. அத்துடன் பயணிகள் எடுத்துவரும் பொருள்களுடன் துறைமுகத்தில் இறங்க முடியாத நிலைக்கு உள்ளாக வேண்டியுள்ளது. இதேவேளை, நெடுந்தீவுப் படகுகள் வரும்போது துறைமுகப் பாலத்தில் நிறுத்தப்பட்ட படகுகள் வெளியேறி அதற்கு வழிவிட வேண்டும் என்று பொலிஸார் படையினர், பொதுமக்கள் தரப்பினர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப் பட்டிருந்தது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு சட்டத்தைக் கையாள்பவர்களே எதிரிகளாகியுள்ளனர். கடற்படையினர், பொலிஸார் எவருமே இதைக் கண்டு கொள்வதில்லை. கடந்த சனிக்கிழமை காலை நெடுந்தீவில் இருந்து பயணிகளுடன் வந்த படகு துறைமுகத்தில் அணைக்க முடியாதபடி துறைமுகப் பாலத்தில் வடதாரகையும் நயினை நாகவிகாரைக்குரிய படகும் துறைமுகப்பாலத்தின் இரண்டு பகுதிகளை ஆக்கிரமித்து நிற்க மற்றையபகுதியில் நயினாதீவுப் படகுகளும் கடற்படைப் படகுகளும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

நாகவிகாரைக்கான படகு சுமார் 400 பயணிகளை ஏற்றக் கூடியது. அந்தப் படகில் தென்பகுதியில் இருந்துவரும் உல்லாசப் பயணிகள் நிரம்பிய பின்னரே அது அங்கிருந்து அகற்றப்பட்டு ஏனைய படகுகளில் மக்களை ஏற்றும் எழுதாத விதி குறித்து நயினை படகுச் சொந்தக்காரர்களே வருந்துவதுண்டு. சனிக்கிழமை துறைமுகப் பாலத்தில் நிறுத்தப்பட்டிருந்த குறிப்பிட்ட படகில் பயணிகள் நிரம்பும் வரை நெடுந்தீவுப் பயணிகள் படகு தாமதிக்க வைக்கப்பட்டே பின்னர் பயணிகள் துறைமுகத்தில் இறங்க அனுமதிக்கப்பட்டனர். நெடுந்தீவுப் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்கென நிறுத்தப்பட்டிருந்த பொலிஸாரும் சரி கடற்படையினரும்சரி பயணிகளை இறங்கக் கூடிய எந்த ஒரு செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. தென்பகுதி மக்கள் சௌகரியமாக போகட்டும் என்பதற்காக நெடுந்தீவுப்படகை நீண்டநேரம் தாமதிக்கச் செய்துள்ளனர். அரசு நல்லாட்சி என்று பறைசாற்றிக் கொண்டிருக்க, படையினரும் பொலிஸாரும் திட்டமிட்டே இனவாதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஓர் அடையாளமாக குறிகாட்டுவான் துறைமுகத்தில் இடம்பெறும் சம்பவங்கள் விளங்குகின்றன.

தொடர்ந்தும் இவ்வாறு நெடுந்தீவு மக்கள் சிரமங்களை எதிர்கொண்ட வண்ணமே உள்ளனர். படையினரினதும் பொலிஸாரினதும் இந்த நடவடிக்கைகளால் மக்கள் படும் சிரமங்கள் குறித்து நெடுந்தீவில் உள்ள அதிகாரிகள் கவலைப்படுவது கிடையாது. அங்குள்ள அதிகாரிகள் மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் மௌனிகளாகவே உள்ளனர். தென்பகுதி மக்களின் சௌகரியங்களுக்காக ஒரு தீவு மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கட்டும் என்று கட்டாயப்படுத்துகின்ற நிலை மாறாத வரையில் நல்லாட்சியை எதிர்கொள்வது சிரமமே.

## சொஃப்ட்லொஜிக் பினான்ஸ் உரிமை வழங்கல் மிகைக் கொடை முனைவுடன் நிறைவு

சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் நிறுவனத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருந்த உரிமை வழங்கல்கள் 150 சதவீதத்தால் மிகைக் கொடை முனைவுடன் நிறைவடைந்திருந்தது.

இதன் மூலம் 401 மில்லியன் ரூபாய் புதிய உரிமை முதல் உட்பாய்ச்சல் பெறுமதியை எய்தியிருந்ததுடன், கம்பனியின் மொத்தப் பங்கு நிலைப்படுத்தல் 1.9 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.

உரிமை வழங்கல் பிரகாரம், 2015 பெப்ரவரி 26 ஆம் திகதியன்று காணப்பட்டவாறு, பங்குதாரர்கள் கொண்டிருந்த ஒவ்வொரு 28 சாதாரண பங்குகளுக்கும் 10 சாதாரண பங்குகள் வீதம் பங்கொன்றுக்கு 30 ரூபா வீதம் வெளியிடப்பட்டிருந்தன.

இவை மொத்தமாக 20.1 மில்லியன் பங்குகளுக்கான விண்ணப்பங்களை கவர்ந்திருந்ததுடன், மேலதிக கோரல் 6.7 மில்லியன் பங்குகளையும் விட அதிகரித்திருந்தன. 13,376,411 பங்குகள் தலா 30 ரூபா வீதம் கம்பனியின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், 2015 மார்ச் 16 ஆம் திகதி இந்த உரிமை வழங்கலுக்கான விண்ணப் கோரல் பூர்த்தி செய்யப்பட்டன.

சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் மூலதன இருப்பை விஸ்தரித்திருந்தமைக்கு மேலதிகமாக, உரிமை முதல் உட்பாய்ச்சல் (Equity Infusion) என்பது கம்பனியின் உயர் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியமானதாக அமைந்திருந்தது. இதன் மூலமாக மொத்த சொத்துக்களின் பெறுமதி 20 பில்லியன் ரூபாவாக அதிகரித்திருந்தது.

சொஃப்ட்லொஜிக் குழுமம் இந்நிறுவனத்தை கையகப்படுத்தியிருந்த போது காணப்பட்ட 1.8 பில்லியன் ரூபா பெறுமதியை விட, 41ஆம் ஆண்டு காலப்பகுதியில் 10 மடங்கு அதிகரிப்பாக இது பதிவாயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வழங்கல் மூலமாக மூலதன கட்டமைப்பை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கம்பனியின் கடுமையான வியாபார திட்டங்களுக்கு பக்க பலமாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மூலதன உட்பாய்ச்சல் என்பது பொருத்தமான காலப்பகுதியில் கிடைத்துள்ளதாகவும், தனியார் துறை என்பது கடன் மீது அதிகளவு கவனம் செலுத்தும் நிலையில், கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வட்டி வீதங்களும் குறைந்துள்ள நிலையில் இது உட்செறிவு கிடைத்துள்ளமை சாதகமாக அமைந்துள்ளதென கம்பனி அறிவித்துள்ளது.

கொழும்பு பங்குச்சந்தையில் கரடியர் சந்தை சூழல் காணப்படும் நிலையில், சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி மீது தற்போதைய பங்குதாரர்களும், புதிய முதலீட்டாளர்களும் அதிகளவு ஈடுபாட்டை வெளியிட்டுள்ளமையின் மூலம் கம்பனியின் மீது காணப்படும் நம்பிக்கை உறுதி செய்யப்பட்டுள்ளது என சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி தலைவர் அசோக் பதிரகே தெரிவித்தார்.

மூலதன உட்செறிவின் மூலமாக சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் கம்பனியின் செயற்பாடுகளுக்கு மேலும் வலுச் சேர்க்கப்படும் என்பதுடன், இலங்கையில் காணப்படும் அதிகளவானோர் நாடும் வங்கி சாரா நிதிச்சேவைகளை வழங்கும் நிறுவனமாக திகழ் எனும் நோக்கத்தை எய்துவதற்கு உதவும் வகையில் அமைந்துள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

2014 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் பதிவாகியிருந்த நிதிப்பெறுபேறுகளுக்கமைய, கம்பனியின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி 23 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், கடன் முற்கொடுப்பனவுகள் 21 சதவீதத்தால் அதிகரித்து 14.3 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.


வாடிக்கையாளர்களின் வைப்புகளில் பெருமளவு அதிகரிப்பை காணக்கூடியதாக இருந்ததுடன், இந்தப் பெறுமதி 11.7 பில்லியன் ரூபாவாகவும் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்தப் பெறுமதி 54 சதவீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. துறைசார்ந்த ஏனைய நிறுவனங்களைப் போலவே, கம்பினியின் லீசிங் மற்றும் வாடகை கொள்வனவு பிரிவு பின்னடைவை எதிர்நோக்கியிருந்தது. வரிக்கு பிந்திய இலாபம் நிதியாண்டின் முதல் ஒன்பது மாத காலத்தில் 153 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்தது.

இது கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 38 சதவீத அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. தேறிய வட்டி வருமான என்பது, 23 சதவீதத்தால் அதிகரித்து 1.1 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

மொத்த வருமானம் 32 சதவீதத்தால் அதிகரித்து 1.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. சரியான நேரத்தில் கம்பனி கடன் வழங்கல் பிரிவில் மேற்கொண்டிருந்த மாற்றம் காரணமாக சிறந்த பெறுபேறுகளை பதிவு செய்யக்கூடியதாக இருந்தது.

சொஃப்ட்லொஜிக் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமாக சொஃப்ட்லொஜிக் ஃபினான்ஸ் பிஎல்சி செயலாற்றி வருவதுடன், சுகாதாரத்துறை, விற்பனை, நிதிச் சேவைகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஓய்வுநேரம், வாகனங்கள் மற்றும் உணவகங்கள் ஆகிய துறைகளில் ஈடுபாட்டைக் கொண்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க நிதி வியாபார சட்டத்துக்கமைய பதிவு செய்யப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் கம்பனியாக திகழ்வதுடன், 2000 ஆம் ஆண்டு வெளியாகிய 56 ஆம் இலக்க நிதி குத்தகை சட்ட மூலத்துக்கமைய இலங்கை மத்திய வங்கியின் அனுமதியைப் பெற்ற விசேட லீசிங் கம்பனியாகவும் திகழ்கிறது. (த)

# வாசகர் திருமுகம்



## மேலதிக நிதி தருவார்களா?

போர் காரணமாக இடம் பெயர்ந்து வசித்த எனது குடும்பம் தற்போது சொந்த இடமான கட்டுவனில் மீள்குடியமர்ந்துள்ளது.

இந்த நிலையில் இந்திய வீட்டுத் திட்டத்தில் எனது குடும்பமும் உள்வாங்கப்பட்டது. மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் அவர்கள் வழங்குகின்ற ஐந்தரை லட்சம் ரூபாவைக் கொண்டு வீட்டைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றோம். நான் கூலிவேலை செய்தே எனது குடும்பத்தின் சகல செலவுகளையும் சமாளித்து வருகின்றேன். சில நாள்களில் வேலை கிடைக்காததால் வருமானமும் கிடைப்பதில்லை. இந்த நிலையில் பணத்தைச் சேமிக்க முடிவதில்லை.

தற்போது புதிதாகக் கட்டிவரும் வீட்டுக்கு கூரை போடவேண்டியுள்ளது. சாமான்கள்சில உள்ளன. ஆனால்கூரைவேலைகளைப் பூரணமாக முடிக்க வேண்டுமென்றால் இன்னமும் 50ஆயிரம் ரூபாவாவது தேவைப்படுகின்றது. இங்கு வசிக்கும் அனேக குடும்பங்களுக்கும் இந்தியவீட்டுத்திட்டத்தில் இடம் கிடைத்துள்ளதால் அவர்களும் வீடுகளைப் பூர்த்தி செய்வதில் என்னைப் போன்றே சிரமப்படுகின்றனர். இதனால் இவர்களிடமும் உதவிகேட்கமுடியவில்லை. எமது குடும்பம் தற்போது சிறியதொரு கொட்டிலில் வசித்து வருகின்றது. மழை, வெயில் காலங்களில் அதில் வசிக்க முடியாது அவதிப்படுகின்றோம். புதிய வீட்டுக்குக் கூரையைப் போட்டுவிட்டால் அதில் ஓரளவு சிரமமின்றி வசிக்க முடியும். ஆனால் அதற்குத் தேவையான பணம் என்னிடம் இல்லை.

தற்போது வீட்டைப் பூர்த்தி செய்யுமாறு நெருக்குதலும் வழங்கப்படுகின்றது. ஏதாவது மேலதிக நிதி வழங்கப்படுமாயின் இந்த ஏழையின் துன்பங்கள் நீங்கிவிடும்.

*பா.ஸ்ரீதரன், கட்டுவன்.*

## புண்ணியவான்கள் முன் வருவார்களா?

மந்திகையில் மருத்துவமனைக்கு அருகில் உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் காத்து நிற்கும் பயணிகள் கடும் வெயில் காரணமாகப் பாதிக்கப்பட்டு வருகின் றனர்.


மஞ்சள்கோடு இடப்பட்டதன் காரணமாக முன்பு பஸ்தரிப்பிடம் அமைந்திருந்த இடத்தில் பஸ்கள் நிறுத்தப்படுவதில்லை. அத்துடன் பொலிஸாரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்துவருவதைக் காண முடிகின்றது.

ஆனால் அனேகமானவர்கள் பழைய பஸ்தரிப்பு நிலையத்தில் அமைந்துள்ள கட்டடத்தையே நிழலுக்குப் பயன்படுத்தி வருகின்றனர். பஸ்கள் வந்ததும் எழுந்து புதிய பஸ்நிலையத்தை நோக்கி ஓடுகின்றனர். சிலவேளைகளில் பஸ் சாரதிகள் சிலர் இரண்டு பஸ் நிலையங்களிலும் பஸ்களை நிறுத்துவதைக் காண முடிகின்றது. இதனால் பயணிகளின் நிலைதான் பரிதாபகரமாக மாறியுள்ளது.

ஆகவே புதிய பஸ் தரிப்பு நிலையத்தில் தங்கு மண்டபம் ஒன்றை அமைப்பதன் மூலமாக பயணிகளின் துன்பங்களைக் குறைக்க முடியும். புண்ணியவான்கள் யாராவது இதனைச் செய்வதற்கு முன் வருவார்களா?

*ராஜன், சுன்னாம்*

கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# தெற்கு மீனவர்களின் அடாவடி நீங்குமா?

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் அத்துமீறிக் குடியேறி மீன்பிடி நடவடிக்கைளில் தெற்கு மீனவர்கள் ஈடுபட்டு வருவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபின்னர், வடக்குக் கடல் பகுதிகளில் தெற்கு மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. போர் நடைபெற்ற வேளையில், வடக்குக் கடலில் பிரவேசிக்க முடியாமல் இருந்த அவர்கள், போர் முடிந்த பின்னர் சர்வசாதாரணமாக வந்து வடக்குக் கடல் வளத்தை அள்ளிச்செல்லும் நிலை தொடர்கிறது. தெற்கு மீனவர்களின் இந்த நடவடிக்கைகளுக்கு அரசினதும், அரச படைகளினதும் ஒத்துழைப்பு போதிய அளவு வழங்கப்படுகின்றது.

தெற்கு மீனவர்களின் இந்த அத்துமீறலைத் தடுத்துநிறுத்துமாறு வடக்கு மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றபோதும், அது தொடர்பில் அரசு நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதனால், ஒரு புறம் இந்திய மீனவர், மறுபுறம் தெற்கு மீனவர் வடக்குக் கடலில் வளங்களை சூறையாடிச்செல்ல வருமானம் இழந்து அன்றாட வாழ்வாதாரத்துக்கே வழியின்றி தவித்து வருகிறார்கள் வடக்கு மீனவர்கள்.

தெற்கு மீனவர்களின் இந்த அத்துமீறல் நடவடிக்கைகள் வடமராட்சி கிழக்கு கடல் பகுதிகளிலேயே அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. மீன்பிடிப் பருவ காலங்களில் வடமராட்சி கிழக்குக்கு வருகைதரும் தெற்கு மீனவர்கள் அங்கு வாடிகளை அமைத்து, மாதக்கணக்கில் தங்கி நின்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 5 வருடங்களாக இந்தச் சட்டவிரோத நடவடிக்கை தொடர்கிறது.

இம்முறையும் இவ்வாறு வருகை தந்திருக்கின்றனர் தெற்கு மீனவர்கள். வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் பகுதியில் வாடிகளை அமைத்து தங்கியிருந்து அவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு வடக்கு மீனவர்கள் எதிர்ப்பு வெளியிடலாம் என்ற அச்சம் காரணமாக தெற்கு மீனவர்களின் வாடிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறித்து அப்பகுதியில் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். சுண்டிக்குளம் பகுதி சட்டவிரோதமாக மரம் வெட்டுதல், மணல் அகழ்வு என்பவற்றைத் தடுப்பதற்காக அமைக்கப்பட்ட பொலிஸ் நிலையம் அங்குள்ள தென்னிலங்கை மீனவருக்கு பாதுகாப்பு கொடுப்பதற்காகவே செயற்படுகிறது என மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுண்டிக்குளம் பகுதியில் வெற்றுக் காணிகளாகக் காணப்படும் இடங்களில் அத்துமீறிச் குடியேறியுள்ள தெற்கு மீனவர்கள் தமது வாடிகளைச் சுற்றி, முட்கம்பி வேலிகளை அமைத்துள்ளனர். இவ்வாறு குடியேறியுள்ளவர்களை வெளியேற்றுவதற்குச் செல்லும் காணி உரிமையாளர்கள் பொலிஸாரினால் விரட்டப்படுகின்றனர்.

இந்தப் பகுதியில் அத்துமீறிச் குடியேறியிருக்கும் தெற்கு மீனவர்கள் தினமும் பிடிக்கப்படும் கடல் உணவுகளை குளிரூட்டப்பட்ட வாகனங்களில் எடுத்துச் செல்வதாகவும் மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர்.

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த மைத்திரி அரசும் இந்த மீனவர் அத்துமீறல் விடயத்தில் பாரபட்சமாகவே செயற்பட்டு வருகிறது. தெற்கு மீனவர்கள் என்பதால் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு அனைத்தும் அரச படைகளால் வழங்கப்படுகின்றன. இதனால், அந்தப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் பெரும் பாதிப்பையும், பொருளாதார இழப்பையும் சந்தித்துள்ளார்கள்.

இதனைப் புரிந்துகொள்ளாமல் புதிய அரசும் தமிழர்களுக்குத் தொடர்ந்தும் அநீதி இழைக்கவே வகை செய்கின்றது. தமிழ் மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அக்கறை கொள்ளாமல் தொடர்ந்தும் இழுத்தடித்து வருகிறது. இந்த நிலைமை உடனடியாக மாற்றப்படவேண்டும். வடக்குக் கடலில் தெற்கு மீனவர்களின் ஊடுருவல் தவிர்க்கப்படவேண்டும். இதன்மூலம் வடக்கு மீனவர்களின் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்படவேண்டும். புதிய அரசு, இதனைச் செய்யாவிட்டால் தொடர்ந்தும் தமிழர்களை மைத்திரி அரசும் புறக்கணிக்கிறது என்றே சிந்திக்கத் தோன்றும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 19 ஆவது திருத்தச் சட்டமூலம் முளைத்து எழுமா?.....!!

இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் சில முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுவதற்கும், அந்த முடிவுகளுக்கேற்ப செயற்படுவதற்குமான காலகட்டத்தை, சூழ்நிலையை நாம் கடந்து கொண்டிருக்கின்றோம்.

தேசிய அரசு ஒன்று உருவாக்கப்பட்டதன் விளைவாக எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற சிக்கலைத் தீர்த்து வைக்கும் முடிவொன்று சபாநாயகரினால் இன்று அறிவிக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவராக இருந்து கொண்டு, எதிர்க்கட்சித் தலைவராகவும் செயற்பட்டு வந்தவரான நிமால் சிறிபால டி சில்வா தேசிய அரசு உருவாக்கப்பட்ட பின்னரும் அந்தப் பதவியை விடமாட்டேன் என்று அடம்பிடித்து வருகிறார்.

இதற்கு மாறாக, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவையே எதிர்க் கட்சித் தலைவராக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். அதற்கு ஆதரவாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரது கையெழுத்துக்களையும் பெற்று சபாநாயகரிடம் வழங்கியுள்ளனர். சபையில் மூன்றாவது பெரும்பான்மையுடன் விளங்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அந்தப் பதவி போய் விடக்கூடாதென்பது இவர்களது முக்கிய விருப்பு.

இப்போதுள்ள நிலைமையில் ஐ.தே.கவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசமைத்திருப்பதால், ஜே.வி.பி போன்ற கட்சிகளின் ஆதரவு கிடைக்குமானால், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்கும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. ஆயினும் இது விடயத்தில் சபாநாயகரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

அரசின் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் இந்த வாரமே, 9, 10 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. 19ஆவது திருத்தம் அரசமைப்புடன் ஒத்துப் போகின்றதா என்பதுடன், அது சார்பான விடயங்கள் உயர் நீதிமன்றின் தலைமை நீதியரசர் சிறிபவன் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயத்தால் ஆராயப்பட்டுள்ளன. அதன் விளக்கம் அனேகமாக இன்று (செவ்வாய்) நாடாளுமன்றத்தில் வழங்கப்படலாம்.

19ஆவது திருத்தச் சட்டத்தில் காணப்படும் பல விடயங்களில் ஜனாதிபதிக்கு தற்போது இருக்கும் பல அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் மாற்றப்படுகின்றன. அமைச்சரவையின் தலைவராக இருப்பவர் பிரதம மந்திரி என்பதால், ஜனாதிபதியின் அதிகாரங்கள் முழுவதும் பிரதமருக்கு கிடைக்கும் வகையில் இந்த திருத்தம்கொண்டு வரப்படுவதாக ஜாதிக ஹெலஉறுமய கட்சி குற்றஞ்சாட்டி வருகிறது. இது, ஐ.தே.கட்சியின் சதி முயற்சி எனவும், 19ஆவது திருத்தத்தில் மாற்றம் கொண்டு வர முயல்வோம்; எந்த வகையிலும் அதை நிறைவேற்ற விடமாட்டோம் என்றும் அந்தக் கட்சியின் பிரமுகரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க சூளுரைத்துள்ளார். இருப்பினும், ஜாதிக ஹெல உறுமய ஒரு சிறிய கட்சியே. அதன் எதிர்ப்பு எம்மை ஒன்றும் செய்துவிடப்போதில்லை. மிகப் பெரும்பான்மையுடன் அதை நிறைவேற்றுவோம் என்று ஐ.தே.க.வின் ஊடகப்பேச்சாளரும், கல்வி அமைச்சருமான அகிலராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். கிடைக்கும் செய்திகளின்படி ஐ.தே.க. சிறிலங்கா சுதந்திரக்கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜனதாவிமுக்தி பெரமுன மற்றும் சில கட்சிகளின் ஆதரவு இந்தத் திருத்தத்துக்கு கிடைக்கும் என்று தெரிகின்றது. அதனால் 19 ஆவது திருத்தம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்படலாம் என்று அரசும் அதன் தலைவர்களும் நம்புகிறார்கள்.

எந்த வகையிலும் இத்திருத்தம் நிறைவேறாது போனால் நிலைமை என்னவாகும்? ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரை உடனடியாக பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்ற நிலைப்பாட்டில் அந்தக் கட்சி உள்ளது. திருத்தம் நிறைவேற்றப்பட்டு அரசின் ஏனைய வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்ட பின்னரே தேர்தல் நடத்தப்படும் என்பது ஜனாதிபதியினதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிடமும் உள்ளூரும் நம்பிக்கை.

19ஆவது திருத்தம் இப்போது இருக்கும் வடிவிலேயே நிறைவேற்றப்படுமானால் ஜாதிக ஹெல உறுமயவின் நிலை என்னவாகும் என்பது கேள்விக்குரியது. அரசில் இருந்து வெளியேறி விடுவார்களா? அல்லது அரசில் இருந்து கொண்டே தொடர்ந்து போராடுவார்களா? அதுவும் இல்லையென்றால், எதிர்த்தரப்பில் முன்னாள் ஜனாதிபதியின் ஆதரவாளர்களுடன் சமமாக அமர்ந்து கொண்டு அரசை எதிர்ப்பார்களா? இவையாவும் இந்த வாரத்தில் இல்லாவிட்டாலும், அடுத்த வாரம் நிச்சயம் தெரிந்துவிடும்.

# தமிழர்களை எட்டாத மைத்திரியின் நல்லாட்சி



■ ராஜராஜன்

போர் ஓய்ந்து 6 வருடங்கள் நிறைவு பெறவுள்ள நிலையிலும் தமிழர்கள் அச்சத்துடன் வாழுகின்ற நிலையே காணப்படுகின்றது. புலிகளை மீள உருவாக்குவதற்கு உதவினார் என்று தெரிவிக்கப்பட்டு கைதாகி தடுத்து வைக்கப்பட்ட அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டு ஜெயக்குமாரியும் அவரது மகளும் தங்குவதற்கு எவராலும் இடம் வழங்கப்படாத நிலையில் ஆலயத்தின் மடம் ஒன்றில் தங்கி உள்ளமை இதற்குச் சிறந்த ஒரு உதாரணம் ஆகும்.

அச்சம் காரணமாகவே இவர்கள் தங்குவதற்கு எவரும் இடம் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களுக்கு இடம் வழங்கக் கூடாது என எவராவது அச்சுறுத்தல் விடுத்தார்களா என்பதும் தெரியவரவில்லை. ஆனால் அவர்களை அரவணைத்து உதவி செய்வதற்கு மற்றவர்கள் அஞ்சுவது தெளிவாகத் தெரிகின்றது.

முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு சுதந்திரமாக வாழ்வதற்கு அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களின் சொந்த வாழ்க்கையில் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. குறிப்பாக சமுதாயத்தில் உள்ள சிலர் இவர்களைப் புறம் ஒதுக்கி வைப்பதில் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். சொந்தப் பிரச்சினைகள் எழும்போது முன்னாள் போராளிகளின் கடந்த கால வாழ்வு தொடர்பாக இவர்கள் சுட்டிக்காட்டத் தவறுவதில்லை. இதனால் இந்தப் போராளிகள் மன உளைச்சலுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நாட்டில் வேரூன்றி இருந்த பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டதாக அரசு மார் தட்டிக் கொள்கின்றது. இதற்குக் காரணமானவர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்றும் போற்றிப் புகழப்படுகின்றார். ஆனால் மறு பக்கத்தில் தமிழர் பகுதிகளில் புலிகள் மீள் உருவாக்கம் பெறுவ தாகப் பரப்பு ரைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. சிலவேளை அரச படைகள், தமிழர் பகுதிகளில் இருந்து விலக்கிக் கொள்ளப்படாது இருப்பதற்கான அரசின் தந்திரோபாய முயற்சியாகவும் இதனைக் கொள்ள முடிகின்றது. ஆனால் இவற்றினால் தமிழ் மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

“ நாட்டில் வேரூன்றி இருந்த பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாக அரசு மார் தட்டிக் கொள்கின்றது. இதற்குக் காரணமானவர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இன்றும் போற்றிப் புகழப்படுகின்றார். ஆனால் மறு பக்கத்தில் தமிழர் பகுதிகளில் புலிகள் மீள் உருவாக்கம் பெறுவதாகப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


அண்மையில் ஐரோப்பிய நீதிமன்றம் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு பரிந்துரை செய்தபோதிலும், ஐரோப்பிய ஒன்றியம் இதனைக் கருத்தில் கொள்ளாது தடையை நீடித்துள்ளது. இலங்கை அரசின் கடுமையான நெருக்குதல் மற்றும் பரப்புரை காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் இந்த முடிவை எடுத்ததாகவும் கூறப்படுகின்றது. வெளிநாடுகளைப் பொறுத்தவரை மஹிந்த ஆட்சி ஒழிந்து போய் மைத்திரி தலைமையில் புதியதொரு நல்லாட்சி மலர்ந் துள்ளதாகவே கணிக்கப்படுகின்றது. ஆனால், நாட்டின் தேசியக் கொள்கைகளைப் பொறுத்தவரை யில் மஹிந்த ஆட்சிக்கும் மைத்திரி ஆட்சிக்கும் பெரிய வேறுபாடு இல்லை என்பதை இந்த நாடுகள் உணர்ந்து கொள்ளத் தவறி உள்ளன.

கீரிமலையில் மஹிந்தவால் அமைக்கப்பட்ட ஆடம்பர மாளிகையை வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைப்பதற்கு ஜனாதிபதி விரும்பியதாகச் செய்திகள் வெளிவந்தன. இதனால் வடபகுதி தமிழர்கள் அதனை நல்ல தொரு சமிக்ஞையாகக் கருதி ஆறுதல் அடைந்தனர். ஆனால் இங்கு வருகை தந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியின் விருப்பத்துக்கு மாறான கருத்துக்களை வெளியிட்டுச் சென்றுள்ளார். அந்த ஆடம்பர மாளிகையை ஓர் ஆறு நட்சத்திர விடுதியாக மாற்றுவதே அவரது நோக்கம். வடக்கு மாகாண சபையை அவர் சிறிதளவும் கருத்தில் கொள்ள வில்லை.

இராணுவத் தளபதியின் அண்மைய கூற்றின் பிரகாரம் வடக்கில் இருந்து இராணுவத்தினர் மற்றும் படை முகாம்கள் அகற்றப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது. இந்த நிலையில் இராணுவத்தால் பிடித்து வைக்கப்பட்டுள்ள பொது மக்களின் காணிகளை அவர்கள் விடுவிப்பார்களா என்பதும் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

என்னதான் நல்லாட்சி என வாய் கிழியக் கூறினாலும் இதில் தமிழருக்கான நல்லாட்சி எனக் கூற முடியாத நிலை தான் இங்கு உருவாகி உள்ளது. தமிழர்களின் அச்ச உணர்வை நீக்க முடியாத ஆட்சியை நல்லாட்சி என்று அழைப்பது எவ்வாறு?

● மு. தமிழ்மணி



# மஹிந்தவை இந்த நாடு மீண்டும் ஏற்றுக்கொள்ளுமா?

> “ மஹிந்தவின் தோல்விக்குப் பின்னர் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. மஹிந்தவை இதில் இருந்து மீட்பதற்காகவும் தாமும் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவதற்காகவும் அவருடன் கூட இருந்தவர்கள் அவரை அரசியலில் சேருமாறு நெருக்கடிகள் கொடுத்து வருகின்றனர்.

இன்று வரையில் மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமார ரணதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர ஆகியோர்களது பெயர்களும் செய்திகளுமே ஊடகங்களில் இடம்பெற்று வருவதைக் காணமுடி கிறது.

நூறுநாள் வேலைத் திட்டம் முழுக்க முழுக்க அரசியல் சம்பந்தப்பட்ட நகர்வே ஆகும். அவற்றில் ஒன்றுகூட முழுமை பெறாது, ஆமை வேகத்தில் நகர்ந்து செல்வதாகவே ஆளும் தரப்பாலும், எதிர்க்கட்சித் தரப்பாலும், கடுமையான விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. பிரதமரான ரணில் விக்கிரமசிங்க ஏப்ரல் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைப்பேன் என்கிறார். இல்லை; விகிதசார தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவந்த பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதற்கு முன் நாடாளுமன்றம் கலைக்கப்படல் ஆகாது என்று மைத்திரி சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், மஹிந்த சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து முழங்குகின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ, அவரது சகோதரர்கள், புதல்வர்கள் மற்றும் மஹிந்தவின் உறவினர்கள் மீது மைத்திரி அரசு அடுக்கடுக்காக ஊழல் மோசடிகள், கப்பம் பெற்றமை, இரகசியக் கொலைகள், இலஞ்சம் வாங்கியமை, ஆள் கடத்தல்கள், ஆட்சியில் தொடர்ந்திருக்க சதி செய்தமை உட்பட பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்தபோதிலும், விசாரணைகள் மந்தகதியில் இடம் பெற்று வருகின்றன. இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி அடைந்த மஹிந்த ராஜபக்ஷவைப் பற்றியும், அவரது எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பது பற்றியுமே செய்தித் தாள்களிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் தினமும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தன, சந்திரிகா குமாரதுங்க, டி.பி. விஜயதுங்க ஆகியோர் தமது ஓய்வின் பின்னர் அரசியல் நடவடிக்கைகளில், அரசியலில் ஒதுங்கியே இருந்தார்கள். காலப்போக்கில் மக்கள் இவர்களை மறந்திருந்தார்கள். ஆனால், தேர்தலில் தோல்வி அடைந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தென்னிலங்கை மக்களில் ஒரு பகுதியினர் இன்னமும் மறக்கவில்லை. அவரது ஆட்சியில் அவருக்கு நெருக்கமாகக் காணப்பட்ட அரசியல்வாதிகளும் அவரால் வழி நடத்தப்பட்ட இன வாதிகளும் மஹிந்தவை அரசியலில் இருந்து ஒதுங்கியிருக்கவும் விட மாட்டார்கள். மஹிந்தவாலும் அப்படி ஒதுங்கியிருக்க முடியாது.

அவர் ஜனவரி 9 ஆம் திகதி அலரி மாளிகையில் இருந்து தனது சொந்த இருப்பிடமான தங்காலை மெதமுலன கிராமத்துக்குச் சென்றபோது, அங்கு திரண்டிருந்த மக்களிடம் பேசியபோது; நாட்டில் உள்ள மக்களின் பெரும்பான்மையோர் தமக்கு வாக்களித்திருந்தனர். வடக்கு, கிழக்கு மக்களே என்னைத் தோற்கடித்தனர் என்று வேதனையோடு கூறியிருந்தார். வடக்கு, கிழக்கு மக்கள் தம்மை இப்படி ஏமாற்றி விட்டார்களே, ஏன் அப்படிச் செய்தார்கள் என்ற கேள்வியையும் அண்மையில் அவர் எழுப்பத் தவறவில்லை. ஆனால் மஹிந்தவுக்கு அன்றிலிருந்து தான் அரசியல் ரீதியில் வெறுமனாகி விடுவேனோ என்ற பயம் ஏற்பட்டுள்ளது.

மேலும் புதிய ஆட்சியாளர்களால் தமக்கு ஏற்படப் போகின்ற நெருக்கடிகள், விசாரணைகள் போன்றவையும் மஹிந்தவைக் குழப்பத்துக்குள் ஆழ்த்தி உள்ளன. தேர்தல் பரப்புரையின்போது மஹிந்த ராஜபக்ஷவுடன் கூட இருந்த அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தக்க வைத்துக் கொள்வதற்காக அவர்களது தகவல் அடங்கிய கோப்பு களை அம்பலப்படுத்துவதாக பகிரங்கமாக அறிவித்தி ருந்தார்.

மஹிந்தவின் தோல்விக்குப் பின்னர் அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. மஹிந்தவை இதில் இருந்து மீட்பதற்காகவும் தாமும் குற்றச்சாட்டுக்களில் இருந்து தப்புவதற்காகவும் அவருடன் கூட இருந்தவர்கள் அவரை அரசியலில் சேருமாறு நெருக்கடிகள் கொடுத்து வருகின்றனர்.

இன்றைய நிலையில் மஹிந்த ராஜபக்ஷவை அரசியலுக்குள் கொண்டுவர வேண்டும். பிரதமராக்க வேண்டும் என்ற மிதமிஞ்சிய கற்பனா வாதத்தில் அவரது அரசின் அமைச்சர்களாக இருந்தவர்களும் சிங்களதேசிய வாதிகளுமானதினேஷ் குணவர்த்தன, விமல்வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, புத்திஜீவியான தயான் ஜெயதிலக, சிங்கள இனவாதிகள் மற்றும் பௌத்த பிக்குகள் சிலரும் முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி நுகேகொடவில் மஹிந்த ராஜபக்ஷவை அரசியலுக்குள் கொண்டு வருகின்ற திட்ட நகர்வு தீவிர சிங்கள தேசியவாதிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சிங்கள தேசியவாதம், இனவாதம் இந்த இரண்டையும் சிங்கள மக்கள் மத்தியில் பயன்படுத்தியே மஹிந்த ராஜபக்ஷவை மீண்டும் உயர்ந்த இடத்துக்கு கொண்டு வருவதற்கு சிங்கள தேசியவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

நுகேகொட பேரணியில் சிங்கள தேசியவாதிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் யாவும் இனவாதத்தைத் தூண்டுவதாகவே அமைந்துள்ளன. மஹிந்த ஆட்சியின் போது மூச்சுக்கு முந்நூறு தடவை யாவது தமிழருக்கு எதிரான இனவாதக் கருத்துக்களை சிங்கள இனவாதிகளான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் உச்சரிப்பார்கள். அதையே நச்சு விதையாக சிங்கள மக்கள் மத்தியில் இவர்கள் விதைக்கின்றனர். இப்படிப்பட்ட இனவாத அரசியல் வாதிகள் இன்றும் உயிர்ப்புடன் உள்ளனர்.

சிங்கள தேசியவாதிகளுக்கு வேண்டியதெல்லாம் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிறுத்துவது மட்டும் தான்.

சிங்கள தேசியவாதிகள் கண்டியிலும் இதே இனவாதக் கொள்கையுடன் மஹிந்தவை அரசியலுக்குள் இழுப்பதற்கான கூட்டத்தை நடத்தி இருந்தனர். மஹிந்தவும் வாழ்த்துச் செய்தி அனுப்பத் தவறவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் அளித்த 58 லட்சம் வாக்குகளே சிங்கள தீவிர வாதிகளுக்கும் இனவாதிகளுக்கும் துரும்புச் சீட்டாக அமைந்துள்ளன. 58 லட்சம் வாக்குகள் தனிச் சிங்கள மக்களால் மட்டும் அளிக்கப்பட்டதல்ல. ஓரளவு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாக்குகளும் அவற்றில் அடங்கும். 58 லட்சம் வாக்குகளை நம்பியே சிங்கள தீவிரவாதிகள் மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் அரங்குக்குக் கொண்டு வருவதற்குப் படாதபாடு படுகின்றனர்.

இன்றைய அரசியல் நிலையில், மக்கள் தங்காலையில் மஹிந்த தங்கியிருக்கின்ற வீட்டுக்குச் சென்று அவரைச் சந்தித்து வருகின்றனர். வெளிநாட்டு ஊடகவியலாளர்களும் மஹிந்தவைச் சந்திக்கின்றனர். அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியும் மஹிந்தவைச் சந்தித் திருந்தார். தான் அரசியலில் இருந்து ஓய்வுபெற மாட்டேன் என 'இந்து' நாளிதழுக்கு மஹிந்தா





பேட்டி அளித்துள்ளார். வடக்கு, கிழக்கு தமிழ் வாக்களார்களின் நிலைப்பாட்டையும் அவர் தெரிவித்திருந்தார். தெற்கில் நான் வெற்றி பெற்றுள்ளேன். வடக்கு, கிழக்கு வாக்காளர்களை தவறாகப் புரிந்துகொண்டு விட்டேன். வடக்கு, கிழக்கு வாக்காளர்கள் இப்படி ஏமாற்றுவார்கள் என எண்ணவில்லை என்றும் புலம்பி உள்ளார்.

சுதந்திரக் கட்சியும் மைத்திரியின் தலைமைத்துவத்துக்குள் சென்றுள்ளது. சந்திரிகாவும் சுதந்திரக் கட்சியில் முக்கிய வகிபாகத்தை ஏற்றுள்ளார். தான் இருக்கும் வரையில் மஹிந்தவுக்கு கட்சியில் இடமில்லை என்கிறார் சந்திரிகா. மஹிந்தவிடம் தான் பட்ட அவமானங்களையும், தமது உள்ளக் குமுறல்களையும் தாம் கலந்துகொள்ளுகின்ற அரசியல் நிகழ்வுகளில் வெளிப்படையாகவே பகிரங்கப்படுத்துகிறார். தேர்தலின் தான் தோற்றிருந்தால் தமக்கும், தமது குடும்பத்தினருக்கும் மஹிந்தாவால் என்ன நடந்திருக்கும் என்பதையும் மக்கள் மத்தியில் இன்றும் மைத்திரி பரப்புரையாக முன்வைத்து வருகிறார்.

முன்னாள் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினரும், புதியஹெல உறுமயவின் தலைவரும் மேல் மாகாண சபை உறுப்பினரும், சிங்கள தேசிய தீவிரவாதிகளில் ஒருவருமான உதயகம்மன்பில, மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து ஒதுங்குவதை நாங்கள் விரும்ப மாட்டோம். 30 வருடகால கொடிய போரை நிறைவு செய்த வீரத் தலைவனுக்கு நாங்கள் கடன் பட்டவர்களாக உள்ளோம். நாங்கள் தற்போது அனுபவிக்கின்ற சுதந்திரத்துக்கு காரணமானவர் அவரே. அவர் பொதுத் தேர்தலில் பிர்தம வேட்பாளராக சுதந்திரக் கட்சி சார்பில் களம் இறங்குவார் என அண்மையில் பத்திரிகைக்கு அளித்த செவ்வியில் தெரிவித்திருந்தார்.

மஹிந்தவும் சிங்கள தீவிரவாதிகளின் பலம், பலவீனம் இரண்டையும் நன்கு அறிந்தே வைத்துள்ளார். சுதந்திரக்கட்சி தமக்கு வேட்பாளர் பட்டியலில் இடம் தராது போனால், போட்டியிலிருந்து விலகலாம். அரசியலில் இருந்தும் தூரப் போகலாம்.

இன்றைய கால கட்டத்தில் மஹிந்தவும், புதல்வர்களும், சகோதரர்களும் மனப் பதற்றத்துடனும், நிம்மதியற்ற நிலையிலும் காணப்படுகின்றனர். தற்காலிகமாக ஓய்வெடுத்தாலும் அவர் அரசியலிலிருந்து ஒதுங்கமாட்டார் என்பது ஒரு சில மாதங்களில் வெளிப்படையாகத் தெரிந்துவிடும்.

புதிய அரசியல் கட்சி ஒன்று சிங்கள தீவிரவாதிகளால் உருவாக்கப்பட்டு, மஹிந்தவை அதன் தலைமைத்து வத்தை ஏற்கச்செய்யும் முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

தாய் மண்ணை மீட்டவர் என்ற போற்றுதலுக்குரிய மஹிந்த ராஜபக்ஷவை எதிர்வரும் காலங்களில் அந்த மண்ணே மதிக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. மீண்டும் மஹிந்த தலைமையிலான ஆட்சியை நாடு அங்கீகரிக்குமா என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது.

# காலம் கை கொடுக்கும்


## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



பயத்தை அகற்றிவிட்டு, அதற்கு அப்பால் நீ சென்று விடு. இன்று முதல் அறவே பயமற்றவனாக இரு. உன்னால் சாதிக்க முடியாத காரியம் ஒன்று இருப்பதாக ஒருபோதும் எண்ணாதே.

கொள்கைக்காக உன்னை அர்ப்பணிக்கக் கற்றுக்கொள். பொறுமையுடன் முயற்சித்தால் உனக்கு ஆதரவாக காலம் கைகொடுக்கும். தனி மனித வாழ்வு தூய்மையாக இருந்தால், உலக வாழ்வும் தூய்மையாகி விடும். கடவுளுக்குச் சமமான நல்லவர்கள் இன்னும் இந்த உலகில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

# தலைவலி, வாந்தி பிரச்சினைகளுக்கு; ஏலக்காய்



வாசனைத்திரவியங்களில் அரசி என்று இதைச் சொல்வார்கள். இது செரிமான சக்தியைக் கூட்டி, பசியைத் தூண்டும். ஏலக்காயை நசுக்கி, சும்மாவே வாயில் போட்டு மெல்வது சிலருக்குப் பழக்கம். நாவறட்சி, வாயில் உமிழ்நீர் ஊறுதல், வெயிலில் அதிகம் வியர்ப்பதால் ஏற்படும் தலைவலி, வாந்தி, குமட்டல், நீர்ச்சுருக்கு, மார்புச்சளி, செரிமானக் கோளாறு என பல பிரச்சினைகளிலிருந்து, ஏலக்காயை சும்மா மெல்லுவதாலேயே நிவாரணம் பெறமுடியும். எனினும் இதை அதிகமாக, அடிக்கடி சேர்த்துக்கொள்வது நல்லதல்ல. ஏலக்காய்க்கும் மூக்கடைப்பு சிகிச்சைக்கும் சம்பந்தம் இருக்கிறது. தடிமனால்; பாதிக்கப்பட்டு மூக்கடைப்பில் அவதிப்படும் குழந்தைகளுக்கு ஏலக்காய் நிவாரணம் தருகிறது. நான்கைந்து ஏலக்காய்களை நெருப்பில் போட்டு, அந்தப் புகையை சுவாசித்தால், மூக்கடைப்பு உடனே திறக்கும். வெயிலில் அதிகம் அலைவதால் சிலருக்கு தலைசுற்றல், மயக்கம் உண்டாகும். நான்கைந்து ஏலக்காய்களை நசுக்கி, அரை ரம்ளர் தண்ணீரில் போட்டு, நன்கு கஷாயமாகக் காய்ச்சி, அதில் கொஞ்சமாக பனைவெல்லம் போட்டு சாப்பிட்டால், இந்த மயக்கம், தலைச்சுற்றல் உடனே நீங்கும். விக்கலை உடனே நிறுத்தும் சக்தி ஏலக்காய்க்கு உண்டு. இரண்டு ஏலக்காய்களை நசுக்கி, அத்துடன் நான்கைந்து புதினா இலைகளைப் போட்டு, அரை ரம்ளர்; தண்ணீரில் நன்கு காய்ச்சி, வடிகட்ட வேண்டும். மிதமான சூட்டில் இந்தக் கஷாயத்தைக் குடித்தால், விக்கல் உடனே நின்றுவிடும். மன அழுத்தப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டவர்கள், 'ஏலக்காய் தேநீர்' குடித்தால் இயல்பு நிலைக்கு வருவார்கள். வாயுத் தொல்லையால் பொது இடங்களில் அவமானத்தைச் சந்திக்கிறவர்கள், கூச்சமின்றி நாட வேண்டிய மருந்து ஏலக்காய். ஏலக்காயை நன்கு காயவைத்து பொடியாக அரைத்துக்கொள்ள வேண்டும். இந்தப் பொடியில் அரைக்கரண்டி எடுத்து, அரை டம்ளர் தண்ணீரில் கொதிக்கவிட வேண்டும். உணவு உட்கொள்வதற்கு முன்பாக, இந்த ஏலக்காய் தண்ணீரைக் குடித்தால் வாயுத் தொல்லை எப்போதும் இருக்காது. குழந்தைகளுக்கு வாந்தி பிரச்சினை இருந்தால் பயப்படாமல் ஏலக்காயை மருந்தாகத் தரலாம். இரண்டு ஏலக்காய்களை பொடியாக்கி, அந்தப்பொடியை தேனில் குழைத்து குழந்தையின் நாக்கில் தடவுங்கள். இப்படி மூன்று வேளை செய்தால், வாந்தி உடனே நிற்கும்.

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதி கள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண் டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**பங்குனி-25**
**புதன்கிழமை**
**08.04.2015**

திதி: சதுர்த்தி மு.இ.09.08 வரை
நட்சத்திரம்: அனுசம் பி.இ.04.55 வரை
சுபநேரம்: 04.37–06.07 வரை
இராகுகாலம்: 12.07–01.37 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | 2 | | 1 | | | | |
| | | | 5 | | 4 | | | |
| 1 | | 9 | | 2 | | 7 | | |
| 8 | 2 | 5 | | | 7 | | 6 | |
| 9 | 1 | | 2 | | 6 | | 5 | 7 |
| | 6 | | 3 | | | 9 | 2 | 8 |
| | | 8 | | 4 | | 1 | | 2 |
| | | | 1 | | 5 | | | |
| | | | | 3 | | 5 | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 8 | 7 | 4 | 1 | 3 | 2 | 5 | 6 |
| 2 | 4 | 5 | 6 | 9 | 8 | 7 | 1 | 3 |
| 1 | 3 | 6 | 5 | 7 | 2 | 8 | 9 | 4 |
| 3 | 1 | 4 | 2 | 5 | 7 | 9 | 6 | 8 |
| 8 | 5 | 2 | 3 | 6 | 9 | 4 | 7 | 1 |
| 6 | 7 | 9 | 1 | 8 | 4 | 3 | 2 | 5 |
| 5 | 2 | 3 | 9 | 4 | 6 | 1 | 8 | 7 |
| 4 | 6 | 8 | 7 | 2 | 1 | 5 | 3 | 9 |
| 7 | 9 | 1 | 8 | 3 | 5 | 6 | 4 | 2 |




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 40 | 20 | 40 | 30--40 |
| கத்தரி | 30 | 30 | 30 | 30 | 30 | 40 | 50–70 |
| கரட் | 100 | 100 | 100 | 100 | 80–90 | 120 | 100–120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 35–40 | 50 | 40–50 |
| பயிற்றை | 70 | 70 | 50 | 60 | 50–60 | 100 | 60 |
| பாகல் | 80 | 80 | 100 | 80 | 100–120 | 80 | 80–100 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 50 | – | – | 60–80 |
| பெ.வெங்காயம் | 80 | 90 | 90 | 80 | 90 | 90 | 80–100 |
| சி.வெங்காயம் | 60 | 50–80 | 50 | 70 | 50–80 | 80 | 80–100 |
| பூசணி | 50 | 40 | 40 | 30 | 30–40 | 40 | 60–80 |
| தக்காளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 60–80 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 60 | 60 | 60–80 |
| கீரை | 20 | 40 | 30–40 | 15 | 25–30 | 20 | 30–35 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 25–30 | 30–40 | 10–15 |
| பச்சை மிளகாய் | 40 | 60 | 40 | 50 | 40–50 | 60 | 60–80 |
| புடோல் | 40 | 40 | 30 | 40 | 30–40 | 30 | 60–80 |
| கோவா | 40 | 40 | 30 | 30 | 25–30 | 50 | 60–80 |
| வெண்டி | 50 | 40 | 40 | 50 | 40–50 | 40 | 40–50 |
| போஞ்சி | 120 | 100 | 80 | 100 | 70–80 | 120 | 80–100 |
| லீக்ஸ் | 140 | 180 | 130–150 | 140 | 140–150 | 140 | 120–130 |
| தேங்காய் | 60 | 40–50 | 60 | 50–60 | 45–50 | 60–70 | 35–45 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90 | 80 | 90 | 90 | 80–90 |
| தேசிக்காய் | 80 | 80 | 100 | 50 | 70–80 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 120 | 100 | 50–90 | 120 | 80–100 | 80 | 120–140 |
| இராசவள்ளி | 120 | 120 | 120 | 100 | 100–120 | 120 | 120–180 |
| பனங்கிழங்கு | – | – | – | – | 03–05 | | 08 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 700 | 700 | 600 | 600 |
| நண்டு | 400 | 300 | 300 | 100 | – |
| கணவாய் | 500 | 450 | 500 | 600 | 400 |
| பாரை | 400 | 500 | 600 | – | 350 |
| சுறா | 550 | 500 | 650 | – | 400 |
| சீலா | 350 | 400 | 450 | – | 300 |
| விளை | 350 | 400 | 450 | – | 350 |
| முரல் | 350 | 300 | 350 | – | 250 |
| கும்பிளா | 400 | 200 | 500 | – | – |
| கிழாக்கன் | 350 | 600 | 400 | – | – |
| ஒரா | 300 | 300 | – | – | – |
| திரளி | 300 | 200 | 250 | 100 | – |
| நகரை | 200 | 200 | 300 | – | – |
| சூடை | 100 | 100 | 160 | 100 | 70 |
| ஒட்டி | 150 | 150 | 250 | 100 | 250 |
| திருக்கை | 150 | 250 | 250 | – | 250 |
| பாலை | 300 | 200 | 450 | 250 | – |
| வாழை | 100 | 100 | 250 | – | 200 |
| கொய் | 60 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 180 | 200 | 230 | 150 | 200 |



2015 | ஏப்ரல் 07 | செவ்வாய்க்கிழமை | உதயன்

# சித்திரை மாத ராசி பலன்கள்



## கன்னி

வீடு, வாசல் என்று அடங்கிவிடாமல் நாடு, நகரம் என யோசிப்பவர்களே! ஆர்ப்பாட்டம் செய்யாமல் அகிம்சை வழியில் சென்று நினைத்ததை அடையும் நீங்கள், ஆறாவது அறிவுக்கு அடிக்கடி வேலை கொடுப்பவர்கள். பணப் பற்றாக்குறை அதிகரிக்கும். செலவினங்களும் அதிகமாகும். ஆரோக்கியம், அழகும் கூடும்.

முன்கோபம் அதிகமாகும். அநாவசியமாக மூக்கை நுழைக்காதீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. திடீர் பயணங்கள் அதிகரிக்கும். சுபச் செலவுகள் கூடிக் கொண்டே போகும்.



நீண்டநாள்களாகச் சந்திக்க வேண்டும் என்று நினைத்திருந்த நண்பர்கள், உறவினர்களையெல்லாம் சந்தித்து மகிழ்வீர்கள். குல தெய்வப் பிரார்த்தனையை நல்ல விதத்தில் முடிப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வழக்குகளில் இருந்த தேக்கநிலை மாறும். உங்களைப் பற்றிய வதந்திகள் அதிகமாகும். சிலர் உங்களைப் பற்றித் தவறாக எல்லோரிடமும் சொல்வார்கள். கவனமாகச் செயற்படுங்கள்.

**மாணவர்கள்**

உங்களுடைய தனித் திறமையை வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பயணங்கள் மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

**பெண்கள்**

காதல் விவகாரத்தைத் தள்ளி வையுங்கள். எதிர்காலத்தைப் பற்றி யோசியுங்கள். பெற்றோரைக் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்க வேண்டாம்.

**உத்தியோகம்**

உத்தியோகத்தில் கூடுதல் நேரம் ஒதுக்கி வேலை பார்க்க வேண்டி வரும். விரும்பத்தகாத இடமாற்றங்களும், சிறுசிறு அவமானங்களும் வந்து நீங்கும். எங்களைவிட வயதில் குறைவானவர்கள், தகுதியில் குறைவானவர்கள், திறமையில் குறைவானவர்களுக்கெல்லாம் பதவி உயர்வு கிடைக்கின்றதே! எமக்கொன்றும் கிடைக்கவில்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொள்வீர்கள்.



# அலுவலகத்தில், ஆண்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இன்றைய சூழலில் ஆணும், பெண்ணும் சேர்ந்து வேலை செய்வது என்பது, தவிர்க்க இயலாதது. இப்படிப்பட்ட சூழலில், சக ஆண்களிடம் இருந்து பிரச்சினைகள் வராமல் இருக்க வேண்டுமெனில், அவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? பழக்கத்தின் எல்லை எதுவரை இருக்கலாம்? இதோ, உங்களுக்கு உதவ சில பயனுள்ள ஆலோசனைகள்:

நம் உடைகள், எதிரிலிருப்பவர், நம்மை உற்று நோக்காத வகையில் இருப்பது முக்கியம். 'மொடேர்ன்' ஆக உடுத்தினாலும் கூட, நேர்த்தியாக உடுத்துங்கள்.

முக்கியமாக, உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம், நம்முடைய, தனிப்பட்ட விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். சொந்த, குடும்ப விடயங்களுக்கு, 'ஐடியா' கேட்காதீர்கள். தனிப்பட்ட மொபைல் எண்களை யாருக்கும் கொடுக்காதீர்கள்.

பிரச்சினை வரும்போது, 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று கையாளாமல், பிரச்சினை தீரும் வகையில் ஜாக்கிரதையாக அணுகுவது நன்மை பயக்கும்.

நீங்கள் சிலருடன் ஒத்துழைக்கவில்லை என்றால், அவர்களின் பழி வாங்கும் படலம், உங்கள் வேலைகளில் குறை கண்டுபிடிப்பதில் ஆரம்பிக்கும். அதனால், முடிந்தவரை, வேலைகளில் தவறு செய்யாதீர்கள்.

ஆண் நண்பர்களிடம் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக, எல்லாவற்றுக்கும் கைகொடுப்பது, தொட்டுப் பேசுவது கூடாது.

உங்களின் பொருளாதார இயலாமை மற்றும் குடும்ப நிலைமையை, உடன் பணி புரியும் ஆண்களிடம் கூறுவதில் தவறில்லை. ஆனால், அவர் உண்மையான நட்புடன் பழகுபவராக இருக்க வேண்டும்; எல்லை மீறுபவர் எனத் தெரிந்தால், ஒதுங்க வேண்டும். நட்பு ரீதியாக புன்னகைக்கலாம். ஆனால், காரணமில்லாமல் எல்லாவற்றுக்கும் ஆண்களிடம் சிரிக்காதீர்கள். எந்த ஆணுடனும் இரகசியக் குரலில் பேசாதீர்கள். இது கேட்பவருக்கும், பார்ப்பவருக்கும் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். 'ஜல் ஜல்' என அதிக ஓசை கொண்ட கொலுசும், கண்ணாடி வளையலும் அணிவதைத் தவிர்க்கலாம்.

ஆடை பற்றியோ அல்லது உங்களுக்கு உள்ள திறமை பற்றியோ பாராட்டும் போது, நன்றி என்று நேரடியாகச் சொல்லுங்கள்; தேவையில்லாமல் வெட்கப்படுவதைத் தவிருங்கள்.

எவரிடம் பேசினாலும் கண்ணைப் பார்த்துப் பேசுங்கள்; அவர்களையும் அப்படியே பேச அனுமதியுங்கள். அரட்டையில், ஜோக்ஸ் என்ற பேரில் விரச ஜோக்குகளை அனுமதிக்காதீர்கள். எந்த ஆணாவது உங்களிடம் தவறாக நடந்து கொண்டால், முதலில் நீங்களே, இரண்டொரு முறை எடுத்துச் சொல்லி கண்டித்துப் பாருங்கள். மீறியும் தொடர்ந்தால், உங்கள் மேலதிகாரியிடம் புகார் செய்யலாம்.

எந்தப் பிரச்சினைகளுக்காகவும் அழாதீர்கள்; அழும் பெண்களைச் சுலபமாக ஆண்கள் திசை திருப்பி விடுவர். தேவையே இல்லாமல், எதற்கெடுத்தாலும் சத்தமாகச் சிரிக்காதீர்கள்.

உடன் வேலை பார்க்கும் ஆணை விழா, விசேடம் தவிர தேவை இல்லாமல் வீட்டுக்கு அழைக்காதீர்கள்; நீங்களும் செல்லாதீர்கள்.

ஆண்கள், தன் மனைவியை உங்களோடு ஒப்பிட்டுப் பேசுவதையோ அல்லது அவளுக்கு ஒன்றுமே தெரியாது என்று மதிப்பை குறைத்துப் பேசுவதையோ அனுமதிக்காதீர்கள்.

பெண்களுக்கு தங்கள் விடயங்களைப் பகிர்ந்து கொள்ள, நட்பு ரீதியிலான பழக்கம் ஆணிடமோ, பெண்ணிடமோ ஏற்படுவது இயல்பானது தான். ஆனால், அது அவளது கௌரவத்தை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். அதுவே பாதிப்புக்களை ஏற்படுத்தாது. நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில்எவருக்கும் அஞ்சாத நெறிகளும்...' பாரதியார் பாடலை கொஞ்சம் நினைவுக்கு கொண்டு வந்து, உங்கள் மதிப்பு, மரியாதையை காப்பாற்றிக் கொள்ளுங்கள் தோழிகளே...



# பெண்மையின் பெருமை காப்போம்

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றார் மகாகவி பாரதி. காலம் காலமாக பெண்களைப் பெருமைப்படுத்தி வருகிறார்கள். கல்வி, செல்வம், வீரம் என்று மனிதனின் மாண்புக்குத் தேவையான மூன்றையும் வழங்கும் கடவுள்களையும் பெண்களாகவே உருவகப்படுத்தி இருக்கிறார்கள். இயல்பு வாழ்க்கையிலும் தாய், தந்தை, ஆசான் என்று பெண்ணுக்கே முதல் இடம்.

மனிதனை வாழ வைக்கும் நதிகளை நமது நாடு தாயாகப் போற்றி வழிபடுகிறது. ஏன் உலகமே அவரவர் நாட்டைத் தாய்நாடு என்றுதான் அழைக்கிறது. இந்த அளவு பெண்கள் பெருமைப்படுத்தப்பட்டாலும், எந்த நாட்டுக்கும் இல்லாத உயர்ந்த பாரம்பரியமும் கலாசாரமும் நமது நாட்டுப் பெண்களுக்குத்தான் இருக்கிறது.

ஆணும் பெண்ணும் சமமாகத்தான் படைக்கப்பட்டார்கள் என்று எல்லா மதமும் சொல்கிறது. என்றாலும் காலப் போக்கில் ஆண் ஆதிக்கம் தலை தூக்கியது. இயற்கை சூழல் மற்றும் உடல் அமைப்பு, வளர்க்கப்பட்ட விதம், விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அவர்களை 2ம் இடத்துக்கு கொண்டு வந்தது. ஆண்தான் எல்லாம் என்று உருவாக்கப்பட்ட மனோபாவம் ஆணைச் சார்ந்துதான் பெண் இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியது. அதையும் மீறி சரித்திரம் படைத்த, சாதனை நிகழ்த்திய பெண்கள் ஏராளம்.

வெளியே தலைகாட்டக் கூடாது என்ற காலத்திலேயே ஆட்சி செய்த அரசிகள், அரசவையை அலங்கரித்த புலவர்கள், உரிமைகளைப் போராடி மீட்டுக்கொடுத்த, அறிவியலில், கணிதத்தில் கரைகண்ட பெண்கள் பலர். கலைத் துறையில் கொடி கட்டிப் பறந்தவர்கள் ஏராளம். இத்தனையும் நடந்த பிறகும் பெண்களுக்கும் சம உரிமை உண்டு என்று சொல்ல பல நூற்றாண்டுகளை கடந்து வர வேண்டியிருந்தது.

இன்று ஆணும் பெண்ணும் சமம் என்று ஆயிரம்தான் சொல்லிக் கொண்டாலும் நமது நாட்டில் இந்த இலக்கு இன்னும் முழுமையாக எட்டப்படவில்லை என்பது சொல்லாமலேயே தெரியும் உண்மை.

தலைமைப் பொறுப்பிலும் சாதித்தவர்கள், சாதிப்பவர்கள் வரிசையில் பெண்கள் முக்கிய இடம் பிடித்திருக்கிறார்கள். சரித்திரத்தை மாற்றும் சக்தியும் படைத்திருக்கிறார்கள். என்றாலும் மேலை நாட்டு கலாசாரம் புகுந்ததால் ஒருசில தடுமாற்றங்கள் எழுந்துள்ளதையும் மறுக்க முடியாது. ஒருசிலர் அதை விளையாட்டாக எடுத்துக் கொண்டு எல்லையைத் தாண்டும்போது சிக்கல் வந்து விடுகிறது. பெண்களை மதிப்பவர்கள் அதிகம் இருக்கிறார்கள்.

கிடைத்த வாய்ப்பை தவறாகப் பயன்படுத்தி சுதந்திரம் என்ற பெயரில் எல்லைக் கோட்டைத் தாண்டும்போது தான் விபரீதங்கள் ஏற்படுகின்றன. முடிவு... சேலை மேல் முள் விழுந்தாலும் முள்ளின் மீது சேலை விழுந்தாலும் பாதிப்பு சேலைக்குதான்... இல்லை சுடிதாருக்குத்தான் என்ற நிலை உருவாகி விடுகிறது. தவறு செய்தவர்கள் அதை நியாயப்படுத்தும் அளவுக்கு காலம் மாறிக் கிடக்கிறது. அதற்கு ஏற்ப பெண்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய அவசியம் வந்திருக்கிறது.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் ஆண்களுக்குச் சமம் என்பதை நிரூபித்து விட்டார்கள். இருவரும் சமம் என்கிற நிலையைக் கடந்து, எதுவும் தவறில்லை என்ற போக்கு ஆண்பெண் இருவரிடமும் வளரும் போது, பெண்களை மதிக்க வேண்டும் என்ற மனநிலை மாறி விடுகிறது. அதன் பாதிப்பு முழுவதும் பெண்களுக்குத் தான் என்பதில் போய் முடிகிறது. முதலில் நமது கலாசாரத்துக்கு, நம்நாட்டு பெண்களுக்கு இருக்கும் பெருமை காப்பாற்றப்பட வேண்டும். அது போன்ற மனப்பான்மையை இருபாலாரும் வளர்க்க வேண்டியது அவசியம்.

சுயகட்டுப்பாடு இருந்தாலும் வரம்பு மீறுபவர்களைக் கடுமையாக கட்டுப்படுத்தி, மீண்டும் அதுபோன்ற விபரீதங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்ல, சம்பந்தப்படலாமா என்று நினைப்பவர்கள் கூட மனம்மாறும் அளவுக்கு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கான கொள்கைகளை வகுத்து முறைப்படி செயல்படுத்த வேண்டும் என்பதே பெண்கள் நலம் காக்க விரும்புவோரின் விருப்பம். தாய் இல்லாமல் யாரும் இல்லை. அந்தப் பெருமையைப் பெற்ற பெண்மையைப் போற்றுவோம்.





# நாம் வெற்றி பெற...

இரு குட்டித் தவளைகள் ..குதித்து விளையாடிக்கொண்டிருந்தன...அவற்றுக்கு அருகே ..ஒரு ஆழம் அதிகமான பாத்திரத்தில் பால் பாதி அளவு இருந்தது. தாவிக் குதித்த இரண்டு தவளைகளும் பாலில் விழுந்தன.பால் என்று தெரிந்ததும் தன்னால் பிழைக்க முடியாது என்று நம்பியது ஒரு தவளை.. இது மிகவும் அவநம்பிக்கை கொண்டது. ஆதலால்..தப்பிக்க முயற்சி ஏதும் செய்யாது ..பாலிற்கு அடியில் போய் உயிரை விட்டது... மற்ற குட்டித் தவளையோ நம்பிக்கை உள்ளது. பால் என்று தெரிந்தும் கால்களைப் போட்டு அங்கும் இங்கும் அடித்து உதைத்தது. நீச்சல் போட்டது...உந்தி..உந்தி கலக்கியது. பால் கலங்க ஆரம்பித்து அதில் ஆடை படர்ந்தது...மேலும்..மேலும் .. அதைத் தவளை உதைக்க..சிறிது..சிறிதாக வெண்ணைய் பந்து போல உருண்டு பாலில் மிதந்தது. நம்பிக்கை கொண்ட தவளை வெண்ணைய் மீது சற்று அமர்ந்து இளைப்பாறி...பின் வெளியே தாவிப் பாய்ந்தது... எந்த சந்தர்ப்பத்திலும் நம்பிக்கையை இழக்காதவன் தோல்வியைச் சந்திக்கமாட்டான்... நாம் ஒரு காரியத்தில் வெற்றி பெற வேண்டுமானால் நம்பிக்கையுடன் அக்காரியத்தில் ஈடுபட்டால் வெற்றி நிச்சயம்.

## வர்ணம் தீட்டலாம் வாங்க...



## ஆ.ஆ.கவிதை



அன்பு பெருக்கு
ஆசை சுருக்கு
இன்னல் ஒடுக்கு
ஈகை பெருக்கு
உழைத்து வாழ்
ஊழ்வினை நீக்கு
எளிமை பேண்
ஏமாற்றம் தவிர்
ஐயம் அகற்று
ஒற்றுமை வளர்
ஓர்குலம் என்றாக்கு
ஔவை போற்று
அஃதே நன்று.

## நம்பினால் நம்புங்கள்!

- சென்ற நூற்றாண்டைவிட, இப்போது குழந்தைகள் உறங்கும் நேரம் .73 நிமிடங்களால் குறைந்துள்ளது.
- 10 சதவீதம் மனிதர்கள் நுளம்புகளை கவர்ந்து இழுக்கும் வகையிலான வியர்வையை வெளிப்படுத்துகிறார்கள். அந்த வியர்வை வாசனையை நுளம்புகளால் 30 மீற்றர் தொலைவிலிருந்தே அறிய முடியும்!
- ஆபிரிக்க நாடுகளில் ஐந்தில் ஒரு குழந்தையின் சாவு, மலேரியா நுளம்புகளால் ஏற்படுகிறது. ஒரு நிமிடத்துக்கு ஒரு குழந்தையைக் கொல்லும் அளவுக்கு, நுளம்புகள் மலேரியாவைப் பரப்புகின்றன. அங்கு நுளம்புகளால் ஏற்படும் பொருளாதார இழப்பு மட்டுமே ஆண்டுக்கு 8 பில்லியன் யூரோ!
- இரத்தத்தின் கொந்தளிப்புப் பற்றி ஆராய்வதற்காக, லியனார்டோ டாவின்சி கண்ணாடி இதயங்களை உருவாக்கினார்.
- 130 டெசிபலுக்கு அதிக ஒலியைக் கேட்கும்போது மனிதர்களுக்கு காதுவலி ஏற்படும்.
- பூமியில் உள்ளதைவிட 100 மடங்கு இயற்கை வாயு, சனி கிரகத்தின் துணைக்கோளான டைட்டனில் இருக்கும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

# வாழ்க்கையில் கவலையில்லை தெரிந்துகொள்

இன்றைய இளைஞர்கள் பலர் பெரிய அளவில் படிப்புகளை படித்தும் அவர்களுக்கு தகுந்த வேலை வாய்ப்புகளும், அங்கீகாரமும் கிடைக்கவில்லை என்பதை இன்றைக்கு நிலவி வரும் நாடு தழுவிய நிதிநெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் மூலம் தெரியவருகிறது. உள் நாட்டில் திறமைக்கான மதிப்பு இல்லாததால் வெளிநாடு சென்று சம்பாத்தியம் செய்யும் சூழ்நிலை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. சில இளைஞர்கள் படிப்பதில் கவனம் செலுத்தாமல் ஆட்டம், பாட்டு, நடிப்பு, பேச்சு, விளையாட்டு போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனாலும் உண்மையான திறமை மற்றும் அறிவுஜீவிகளுக்கு இடமில்லாமல் போகிறது. இது இப்படியிருக்க அதிகம் படித்தவர்கள் கடைசியில் படிப்பு இல்லாத அல்லது குறைந்த படிப்பு உள்ளவர்களிடம் போய் வேலை செய்யும் நிலை உண்டாகின்றது. இது எதனால்? இப்போதுள்ள இளைஞர்கள் படிப்பதோ ஏட்டுக் கல்வி. அதாவது வெறும் மனப்பாடம் செய்யும் படிப்பு. இதனால் உண்மையில் ஒரு வித உபயோகமும் இல்லை. ஆடுவதற்கு, பாடுவதற்கு, விளையாடுவதற்கு, நடிப்பதற்குத் தேவையானது வெறும் அடிப்படை கல்வியே போதுமானது. ஆனால் தினப்பயிற்சி தான் வெகு முக்கியம். அந்த மாதிரியான துறைகளில் வாரிசுகள் நுழைந்து வருவதால் மற்றவர்களுக்கு வாய்ப்பு அதிகபட்சமாக கிடைத்தாலே அதிகம் தான். இளைஞர்கள் தங்களின் வருங்கால வாழ்க்கைக்கு, வாழ்க்கையில் உபயோகப்படும் தொழில் கல்வியே முக்கியம் என்பதை இப்போதாவது தெரிந்து கொள்வது அவசியம். வெறும் புத்தகப் பூச்சிகளாக இருப்பதால் அவர்களின் எதிர்காலத்தில் குனிந்து நிமிர்ந்து ஒரு சிறு வேலை செய்வதற்குக்கூட மிகவும் சிரமப்படுகிறார்கள். அதனால் வேலை கிடைத்தாலும் அங்கு நிரந்தரமாக தங்குவது கேள்விக் குறியாகவே இருக்கின்றது? என்னதான் படிப்பு இருந்தாலும் வேலை செய்யத் தெரிந்தால் தான் மதிப்பு என்று தாமதமாகத் தெரிந்து கொள்கிறார்கள். அதற்குத் தனியாக நேரம் செலவிடத் தேவையில்லை. இளம் வயது முதற்கொண்டு சிறு சிறு தொழில்களைச் சுயமாகக் கற்பதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுங்கள். அதுவே அவர்களுக்கு புதிய அறிவையும், தொழில் நுணுக்கத்தையும், கடின உழைப்போடு விடாமுயற்சி, தன்னம்பிக்கை, பொறுமையும் , வாழ்க்கையில் முன்னேற்றத்திற்கான வழியும் தெரியும். இந்த அனுபவமே பிற்காலத்தில் வெற்றிகரமாக தொழில் நடத்துவதற்கு பெரிதும் உதவும். அவ்வாறு தொழிலில் ஈடுபடும்போது தன்னம்பிக்கையோடு வேறு தவறான சிந்தனைகள் வருவது தவிர்க்கப்படும். உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்கும். இதை ஒரு பழக்கமாகப் பழகி விட்டால் அவர்களின் எதிர்கால வாழ்க்கையில் வெற்றி கிடைப்பது நிச்சயம்.





# குலநாயகத்தை ஏன் பதவி நீக்கவில்லை?

## மாவையிடம் கேட்கிறார் அனந்தராஜ்

யாழ்ப்பாணம், ஏப். 7

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற அனந்தி சசிதரன், இளைஞர் அணித் தலைவர் க.சிவகரன் மற்றும் வலிகாமம் பிரதேச சபையின் உறுப்பினர் எஸ்.கௌரிகாந்தன் ஆகியோர் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியதாகக் குறிப்பிட்டு அவர்களை கட்சியில் இருந்தும் தன்னிச்சையாக இடைநிறுத்திய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சே. சேனாதிராசா, கடந்த 4 வருடங்களாக வல்வெட்டித்துறை நகர சபையில் பதவியைக் குறிவைத்துக் குழப்பத்தை ஏற்படுத்திக் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிய சூ.சே.குலநாயகத்தின் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என வல்வெட்டித்துறை நகர சபையின் முன்னாள் தலைவர் ந.அனந்தராஜ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:–

வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் ஆறாவதாக மிகக் குறைந்த விருப்பு வாக்குகளையே பெற்று வல்வெட்டித்துறை மக்களால் மட்டுமல்லாது, கடந்த பொதுத் தேர்தலில் யாழ் மாவட்ட மக்களாலேயே நிராகரிக்கப்பட்ட சூ.சே.குலநாயகம் என்பவர் 2011 ஆம் ஆண்டில், தனக்கு நகரசபை தலைவர் பதவியை விட்டுக் கொடுக்கவில்லை என்பதற்காக சிவாஜிலிங்கத்துடன் சேர்ந்து வல்வெட்டித்துறை நகர சபையைக் குழப்பியதுடன், அதனை இயங்கவிடாது தடுத்து கட்சிக்கும், பல்வேறு தியாகங்களைச் செய்ததன் மூலம் தமிழ் தலைவர்களைப் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப உதவிய தலைவர் வாழ்ந்த வல்வெட்டித்துறைக்கே பெரும் களங்கத்தையும், அபகீர்த்தியையும் ஏற்படுத்தியுள்ளார். அவரைத் தங்கள் நிர்வாகச் செயலாளராகவே தொடர்ந்தும் வைத்திருப்பதுடன், நீங்கள் போகும் அரசியல் மேடைகளில் எல்லாம் அவரையும் ஏற்றி அவருக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் எல்லோரும் வெறுக்கத்தக்க வகையிலான அருவருக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றீர்கள்.

தமிழரசுக் கட்சி என்பது எவரதும் தனிப்பட்ட சொத்து அல்ல என்பதை முதலில் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.ஏனெனில் 1967ஆம் ஆண்டில் இருந்தே என்னைப் போன்ற அந்த நேர பலநூற்றுக் கணக்கான இளைஞர்களினாலும், சுயநலமற்ற தலைவர்களினாலும் தந்தை செல்வாவின் தலைமைத்துவத்தில் கட்டி வளர்க்கப்பட்ட ஒரு மாபெரும் கட்சிதான் தமிழரசுக் கட்சி.அது பின்னர் தமிழர்களின் ஒற்றுமை கருதி தலைவர் பிரபாகரன் அவர்களின் முயற்சியினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு மாபெரும் தமிழ்தேசிய இயக்கமாக உருவாக்கப்பட்டு, மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சியாக விளங்குகின்றது. அதனையும் கூட இன்று உடைத்துச் சின்னாபின்னப்படுத்துவதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றீர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தனியான அரசியல் கட்சியாகப் பதிவு செய்யவிடாது, அதனை அழித்துவிடும் முயற்சிகளில் ஒருசிலர் ஈடுபட்டும் வருவதும் கவலையைத் தருகின்றது.

ஆனால் அத்தகைய ஜனநாயகச் சிதைவில் இருந்து எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் காப்பாற்ற வேண்டிய கடமை என்னைப் போன்ற தமிழ்தேசிய உணர்வார்களுக்கு உள்ளது. அதற்கு முன்னர் நீங்கள் செய்யவேண்டிய முக்கியமான கடமை, ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன்.

கடந்த 4 வருடங்களாக வல்வெட்டித்துறை நகரசபையில் சிவாஜிலிங்கம், குலநாயகம் குழுவினரால் நகரசபையை முடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்த அடாவடித்தனங்களுக்கு ஒரு தீர்வைக் காணுமாறு உங்களுக்குப் பல கடிதங்களை எழுதிக் களைத்துப் போன நிலையில், பின்னர் முதலமைச்சருக்கு நான் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. இதில் ஓய்வு பெற்ற நீதிபதி க. அரியநாயகத்தினால், சூ.சே.குலநாயகம் தலைமையிலான ஆறுபேர் கொண்ட குழுவினர் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், அவர்களே சபையில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு எல்லாம் காரணம் என்று தெரிவித்து குற்றவாளிகளாக இனங்காணப்பட்டனர் என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால், அவரால் கையளிக்கப்பட்ட அறிக்கை இதுவரை பகிரங்கப்படுத்தப்படுவதற்கு நீங்கள் தடைபோட்டு வருவதாக அறிய வருகின்றது. எனவே, தாங்கள் முதலில் அந்த அறிக்கையை வெளியிட அனுமதிப்பதுடன், அந்த அறிக்கையின் பிரகாரம் குற்றம் இழைத்தவர்கள் மீது பாரபட்சமற்ற முறையில் உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

குலநாயகம் தொடர்பாக உங்களிடம் தாயகத்தில் உள்ளவர்களாலும், புலம் பெயர்ந்த மக்களாலும் பல தடவைகள் முறைப்பாடுகள் செய்து, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அழுத்தங்களைத் தந்தபோதும் அவற்றையெல்லாம் உதாசீனம் செய்து குலநாயகம் என்ற கபடத்தனமான ஒரு தனிமனிதனை முதன்மைப் படுத்திவருவதால், உங்கள் மீதான நம்பிக்கையும் பொதுமக்களிடத்தில் தளர்ந்து வருகின்றது. இவ்வாறான தங்கள் செயற்பாடுகள் கட்சியையும், தமிழினத்தையும் அழிக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகின்றது. ஆயினும் அவர் தொடர்பான முறைகேடுகள் மற்றும் கட்சிக் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்ட பல சம்பவங்களை தாங்கள் மறந்திருக்கலாம் என்பதற்காக சிலவற்றை மட்டும் நினைவுபடுத்த விரும்புகின்றேன். அதன் பின்னராவது அவர்மீது உரிய நடவடிக்கையை எடுத்து உங்களுடைய நம்பகத் தன்மையையும் வெளிப்படைத் தன்மையையும் காட்டுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

எனவே குலநாயகம்,.க.சிவாஜிலிங்கம் மற்றும் அவர்களது கையாள்களாகச் செயற்பட்டு வரும் க.சதீஸ், க.ஜெயராசா, ச.பிரதீபன், கோ.கருணானந்தராசா மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் போட்டியிட்ட ம.மயுரன் ஆகியோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களில் எவரும் எதிர்காலத்தில் எந்தத் தேர்தலிலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சார்பிலோ அல்லது தமிழரசுக்கட்சியின் மற்றும், கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக்கட்சிகளின் சார்பிலோ அல்லது ஏனைய தமிழ்க் கட்சிகளின் சார்பிலோ போட்டியிடாத வகையிலும் தடுத்து, அவர்களைக் கறுப்புப் பட்டியலில் இட்டு தர்மத்தைக் காக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். –என்றுள்ளது. (த)

# இடமாற்றத்தில் முறைகேடு ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப். 7

ஆசிரியர் இடமாற்றச் சபை இன்றியும், உரிய விதிமுறையின்றியும் தனக்கு வேண்டிய சில ஆசிரியர்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்து மாகாணக் கல்விப் பணிப்பாளராகச் செல்லும் செ.உதயகுமார் இடமாற்றம் செய்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

7 வருடங்கள் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாகப் பணியாற்றியவர்களே இடமாற்றம் செய்யப்பட வேண்டும். அதுவும் ஆசிரியர் இடமாற்றச் சபை ஊடாகவே மேற்கொள்ள வேண்டும். இந்த நிலையில் 7 வருடங்கள் பணியாற்றியிருக்கவுமில்லை. அதில் ஒருவர் முதுகெலும்பு பாதிப்பு என்று கூறப்பட்டுள்ளது. அத்தகைய பாதிப்பு உள்ளவர்களுக்கான இடமாற்றங்களை இடமாற்றச் சபை முன்னெடுப்பதில்லை. அவ்வாறிருக்க எதற்காக இரகசியமாக இடமாற்றம் செய்ய வேண்டும்?

யாழ்.வலயத்துக்குள் பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடம் இல்லையென்று உதயகுமார் கூறி வருகிறார். அவ்வாறிருக்கையில் எப்படி யாழ். வலயத்துக்குள் ஆசிரியர்களை இடமாற்றம் செய்துள்ளார்? ஆனால் வன்னியில் பணிக்காலத்தை நிறைவு செய்து யாழ்.வலயத்தில் இடமாற்றம் கோரியபோது, யாழ்.வலயத்தில் வெற்றிடம் இல்லை என்றும், வெற்றிடம் ஏற்படும்போது இடமாற்றம் வழங்குவதாகவும் அந்த ஆசிரியர்களுக்குக் கூறிவிட்டுத் தற்போது தனக்கு வேண்டியவர்களை மாத்திரம் விதிமுறையெதுவுமின்றி, இடமாற்றச் சபை இன்றி அவர் இடமாற்றம் செய்துள்ளார்.

ஒழுக்காற்று நடவடிக்கை, சேவை அவசியம் ஆகிய காரணங்களுக்காக மாத்திரமே இடமாற்றச் சபை இன்றி இடமாற்றம் செய்ய முடியும்.

இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களுக்கான இடமாற்றக் கடிதங்கள் வழமையாகப் பாடசாலை அதிபர்கள் ஊடாகவே அனுப்பட்டு வருகிறது. ஆனால் சில பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அவ்வாறு அனுப்பாது அந்த ஆசிரியர்கள் நேரடியாக வலயத்துக்குச் சென்று அத்தகைய கடிதங்களை எடுத்துச் செல்கின்றனர். ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட பின்னர் அது பற்றிய கடிதம் அதிபருக்கு அனுப்பப்படும்போதே இடமாற்றம் செய்யப்பட்ட விடயம் பாடசாலையின் அதிபருக்குத் தெரிய வருகிறது என்று சங்கம் குற்றம் சுமத்தியுள்ளதோடு, இந்த முறைகேடுகள் நீக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாருடன் தொடர்பு கொண்டபோது, மாணவர்களுக்கு பாட ஆசிரியர்கள் தேவை ஏற்படும்போது உடனடியாக நியமிக்கவேண்டும். வன்னிக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதனால் ஏற்படும் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். அதுவரை இடமாற்றச் சபையை எதிர்பார்த்திருக்க முடியாது. இடமாற்றக் கடிதங்கள் பாடசாலை ஆசிரியர்களுக்கு அனுப்பப்படுகின்றது. இடமாற்றம் செய்யப்படுபவர்கள் பற்றிய தகவல்கள் தம்மிடம் உள்ளதால் அதிபர்களை அழைக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்தார். (த–4)

# கைவிடப்பட்ட காணியில் நேற்று காணப்பட்ட சடலம்

வலி வடக்கு, ஏப் 07

அநாதரவான நிலையில் காணப்பட்ட சடலம் ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை காலை சுன்னாகம்– புன்னாலைக் கட்டுவன் வீதியில் உள்ள பராமரிப்பற்ற தனியார் காணியில் கண்டுபிடிக்கப்பட்டது.

சுன்னாகம் றொட்டியாலடிப் பகுதியில் உள்ள தனியார் காராஜுக்கு அண்மையாக உள்ள காணியில் சடலம் காணப்பட்டதைத் தொடர்ந்து சுன்னாகம் பொலிஸாருக்குப் பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் அது பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள். (த–86)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# மஞ்சள் கோட்டில் கடந்தவரை மோதியது மோட்டார் சைக்கிள்

வலி.வடக்கு, ஏப். 7

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியில் அமைக்கப்பட்ட மஞ்சள் கோட்டின் ஊடாக வீதியைக் கடக்க முற்பட்டவரை மோதியதில் பெண் ஒருவர் காயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரும் காயங்களுக்கு உள்ளாகினார்.

சுன்னாகம் நகரப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயத்துக்கு உள்ளாகியவர் சூராவத்தை, சுன்னாகத்தைச் சேர்ந்த எஸ்.ஜெயந்தி (வயது44) என்பவராவார். சுன்னாகம் பொலிஸார் விபத்து குறித்து விசாரனைகளை மேற் கொண்டுள்ளனர். (த–86)

**அறை வாடகைக்குதேவை**

A/L மாணவர்கள் இருவருக்கு உணவுடன் பல்கலைக்கழக சுற்றாடலில் அறை வாடகைக்குத் தேவை. தொடர்பு:-
075 5312574, 077 312 4241

யாழ்ப்பாணம் வேலணை மேற்கு பெரிய புலம்பதி
அருள்மிகு மகா கணபதிப் பிள்ளையார் கோயில் (முடிப்பிள்ளையார்)

**மணவாளக் கோல விஞ்ஞாபனம்- 2015**

மெய்யடியார்களே!

இலங்கை மணித்திருநாட்டின் வடபால் புனித பூமியாகிய யாழ்ப்பாண நகருக்கு அண்மித்ததாக சப்த தீவுகளின் நடு நாயகமாக விளங்கும் வேலணையில் மேற்கூரிலே பெரியபுலம் என்னும் திவ்விய ஷேத்திரத்தில் வீற்றிருந்து அருள்பாலித்து வரும் முடிப்பிள்ளையாரின் ஜய வருட கும்பாபிஷேக தின மணவாளக்கோல உற்சவம் எதிர்வரும் பங்குனித்திங்கள் 25 ஆம் நாள் புதன்கிழமை (08.04.2015) அனுஷ நட்சத்திரமும் கூடிய சுப வேளையில் நடைபெறும்.

அன்றைய தினம் காலை 08.00 மணியளவில் விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி விசேட திரவ்ய அபிஷேகங்கள், திரவ்ய ஹோமங்கள் நடைபெற்று மூலமூர்த்திக்கு சகஸ்திரசத சங்காபிஷேகமும், உற்சவ மூர்த்திக்கு அஷ்டோத்திரசத சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன கலச அபிஷேகமும் நடைபெற்று தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை, திரு ஊஞ்சல் என்பன நடைபெறும்.

தொடர்ந்து நடைபெறும் மகேஸ்வரப் பூசையில் (அன்னதானம்) அடியார்கள் பங்குபற்றுவதோடு தங்களால் இயன்ற பால், தயிர், இளநீர், பூக்கள், அறுகு, அபிஷேக பொருள்களை வழங்கி பெரியபுலத்தார் பேரருளுக்கு பாத்திரமாகுமாறு வேண்டுகின்றோம்.

விழா உபய காரர்கள் 01, சண்முகலிங்கம் குடும்பம், 02, செந்தில்நாதன் குடும்பம், 03, பொன்னுச்சாமி குடும்பம், 04, மணிவாசகம்பிள்ளை குடும்பம், 05, துரைராசா குடும்பம்

பரிபாலன சபையினர்,
முடிப்பிள்ளையார் கோயில்.

**BARATHY**
**சித்தன்கேணி**

அண்மையில் வெளிவந்த O/L பரீட்சையில் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்ற எம் மாணவர்களை வாழ்த்தி இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிட

**O/L DAY CLASS**

நாளை ஆரம்பம் 08.04.2015 புதன் 8.00 am

நீங்கள் நன்கு அறிந்த இப் பிரதேசத்தின் மிக பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினால்

NOTE:- இம் முறை 80 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும். உங்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

A/L 2017 கலை வர்த்தக புதிய பிரிவுகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

**மக்கள் வங்கி அறிவித்தல்**

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் வார இறுதி மற்றும் வங்கி விடுமுறை நாள்களில் 23.05.2015 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
| --- | --- |
| யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை | நாவலர் வீதி<br>மானிப்பாய் |
| காங்கேசன் துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர்<br>பண்டத்தரிப்பு |
| சங்கானை | கோப்பாய் |
| சுன்னாகம் | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம்<br>கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| யாழ். கன்னாதிட்டி | கல்வியங்காடு |
| பருத்தித்துறை | இணுவில்<br>புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

# மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகக் குமாரவடிவேல்

யாழ்ப்பாணம், ஏப். 7

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் உறுப்பினராக யாழ்.பல்கலைக்கழகப் பௌதிகவியல் தகை சால் ஓய்வு நிலைப் பேராசிரியர் இ.குமாரவடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருந்த முன்னைய பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சானிக்கா கிரும்புருவேகம கடந்த பெப்ரவரி மாதம் பதவி விலகியதைத் தொடர்ந்து புதிய பல்க லைக் கழக மானிய ஆணைக்குழுவின் தலைவராக சத்திர சிகிச்சை நிபுணரும் ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகப் பேராசிரியருமான வைத்திய கலாநிதி மொஹான் டீ சில்வா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டார்.

அவரது பரிந்துரையின் பேரிலேயே பேராசிரியர் இ.குமாரவடிவேல் மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினராக தற்போது ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பேராசிரியர் இ.குமாரவடிவேல் யாழ்.பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட பீடாதிபதியாக 11 வருடங்கள் தொடர்ந்து கடமையாற்றியவர். 2006–2007 காலப் பகுதியில் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரில் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக ஒன்றரை வருடங்கள் கடமையாற்றினார்.


மேலும் 2003, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழக துணைவேந்தருக்கான பேரவையின் முதலாவது தெரிவாகப் பேராசிரியர் குமாரவடிவேல் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் அரசியல் தலையீடு காரணமாக அப்போதைய ஜனாதிபதி அவரை துணைவேந்தராக நியமிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த–5)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# ஆசிரியப் பணியே மிக உயர்ந்த சேவை

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 7

இந்த நாட்டில் பொலிஸார் சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நாட்டப் பாடுபடுகின்றார்கள் அது போல முப்படையினர் நாட்டின் பாதுகாப்புக்காக தங்களை அர்ப்பணித்து சேவை செய்கின்றார்கள். ஆனால் இவர்கள் எல்லோரையும் விட உயர்ந்த இடத்தில் இருக்கின்றவர்கள் ஆசிரியர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு 30 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டு இந்த ஆண்டை 2015 தேசிய கல்வியியல் கல்லூரிகள் ஆண்டாக பிரகடனப்படுத்தும் தேசிய நிகழ்வு நேற்று சிலாபம் இங்கிரியவில் அமைந்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்றது.

இதன்போது கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொணடனர்.

அங்கு தொடர்ந்து பேசிய இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன்,

அரசு பல கோடி ரூபாக்களை செலவு செய்து ஆசிரியர்களை உருவாக்குகின்றது. அதற்கு காரணம் சிறந்த ஆசிரியர்கள் உருவாகினால் மாத்திரமே அவர்களால் சிறந்த ஒரு கல்விச் சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் இதனை அரசு முன்னெடுக்கின்றது.

எனவே ஆசிரியர்களாக கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறுகின்றவர்கள் ஆசிரியர் தொழிலை தொழிலாக மாத்திரம் கருதாமல் அதனை ஒரு சேவையாகவும் குறிப்பாக நாட்டிற்காகச் செய்யும் ஒரு பெரும் சேவையாக கருதி செயற்பட்டால் மாத்திரமே உரிய பயனை பெற்றுக்கொள்ள முடியும்.

முன்னாள் கல்வி அமைச்சரும் தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் செயற்திட்டமே இந்த கல்வியியல் கல்லூரிகள். 30 ஆண்டுகளுக்கு முன்பே அவர் இது பற்றி சிந்தித்து செயல்பட்டமையானது அவருடைய சிறந்த திட்டமிடலை நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. எனவே இந்த கல்லூரிகளில் பொறுப்பாளர்களாகவும் தலைவர்களாகவும் செயற்படுகின்றவர்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளது. அவர்களும் அதனை உணர்ந்து செயற்பட வேண்டும். ஆசிரியர்கள் என்பவர்கள் உயர்ந்த இடத்தில் வைக்கக்கூடியவர்கள்.எனவே அவர்கள் நல்ல சமுதாயத்தை உருவாக்க அர்ப்பணித்து செயற்பட வேண்டும்– என்றார்.

(த)

# 19 ஆவது திருத்தத்துக்கு சு.கட்சி ஒத்துழைக்காது

கொழும்பு, ஏப் 7

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் 19 ஆவது அரசமைப்புத்திருத்தத்துக்கு ஒத்துழைப்பை வழங்காதிருப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜாதிக ஹெல உறுமயவும் தீர்மானித்திருப்பதாக அக்கட்சிகளின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த திருத்தச் சட்டவரைவுக்குப் பதிலாக வேறொரு திருத்தச் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு சுதந்திரக் கட்சியும் ஜாதிக ஹெல உறுமயவும் செயற்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 19 ஆவது அரசமைப்புத் திருத்த சட்டவரைவு எதிர்வரும் 09 ஆம், 10 ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேலும் இந்த 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரப் பிரதமர் பதவியொன்றை உருவாக்குவதற்கும், விருப்புவாக்கு முறைமையை மாற்றிவிடாதிருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதைக் கவனத்தில் எடுத்தே சுதந்திரக் கட்சியும் ஹெல உறுமய கட்சியும் அதற்கு ஒத்துழைப்பு வழங்காதிருப்பதற்கு தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதற்குப் பதிலாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல், சுதந்திர ஆணைக் குழுக்களை நியமித்தல் மற்றும் விருப்பு வாக்குத் தேர்தல் முறைமையை மாற்றி புதிய தேர்தல் முறைமையொன்றை உள்ளடக்கிய புதிய அரசமைப்புத் திருத்தமொன்றையே சுதந்திரக் கட்சியும் ஜாதிக ஹெல உறுமய கட்சியும் இணைந்து தயாரித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

(த–22)

# பூட்டான் பிரதமர் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஏப் 7

பூட்டான் பிரதமர் சேரிங் டொப்கே இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார்.

மூன்று நாள் பயணமாக அவர், எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கை வருவதாக அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கை வரும் பூட்டான் பிரதமர், இலங்கை ஜனாதிபதி, பிரதமர் உட்பட்ட முக்கியஸ்தர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

(க)

## மரண அறிவித்தல்

# மேரி ஜெசிந்தா பரமேஸ்வரன்



உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும், மானிப்பாய் கட்டுடைடையை வசிப்பிடமாகவும் கொண்ட மேரிஜெசிந்தா பரமேஸ்வரன் நேற்று (06.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணநாயகம்– எலிசபெத் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தர்மபாலன் – இராசசிலோன்மணி தம்பதியினரின் மருமகளும், பரமேஸ்வரனின் அன்பு மனைவியும், ரகுரதன், ஹிமாஜினி, தேனுகா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.04.2015) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் உரும்பிராய் சென் மைக்கல் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0766186525

## மரண அறிவித்தல்

# அன்னபூரணி தியாகராசா ஐயர்

பொற்பதி பிள்ளையார் கோயில் கொக்குவில் கிழக்கு பிரதான குருக்களின் மனைவி அன்னபூரணி தியாகராசா ஐயர் நேற்று (06.04.2015) திங்கட்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னாரின் கிரியைகள் நாளை (08.04.2015) புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு வவுனியாவில் உள்ள இல. 50/18 குருமன்காடு காளி கோயில் வீதி முதலாம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : தி. சேகர் ஐயா

## மரண அறிவித்தல்

# யோசவ் யூலியன் மேரி றீற்றா (மதுரம்)



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோசவ் யூலியன் மேரி றீற்றா (மதுரம்) நேற்று (06.04.2015) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கபிரியேற்பிள்ளை– திரேசம்மா தம்பதியரின் மகளும், அந்தோனிப்பிள்ளை –அக்னஸ் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற யோசவ் யூலியன் அவர்களின் அன்பு மனைவியும், பாணுஜியின் பாசமிகு தாயாரும், லோறா கிறேஸ் (லண்டன்), மேரி சுசிலா,சாசங்கன் (நோர்வே), சுதர்மினி (கொழும்பு), லொறோய் (லண்டன்),மேல்றோய் (லண்டன்), மெல்றோணி (கனடா), அனுஷா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2015) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு புனித கதிரை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# செல்லப்பா கணேசலிங்கம்

(ஓய்வுநிலை அதிபர் யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்)



வடமராட்சி கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கணேசலிங்கம் (02.04.2015) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா– தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு –அன்னம்மாதம்பதியினரின் அன்பு மருமகனும், வள்ளியம்மாளின் பாசமிகு கணவரும், 'காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், ஆறுமுகம் மற்றும் பொன்னம்மா சிவக்கொழுந்து தங்கவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ராஜினி (கனடா), கணேசரூபன் (லண்டன்), உமா, அகிலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகுமார் (கனடா),சாந்தினி (லண்டன்), சிறீதரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தருண், தருஸ், கவின், மைத்திரேயா ஆகியோரின் பாசமிகு பேரனும், வல்லிபுரநாதனின் மைத்துன்னும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2015) புதன்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரணவாய்– கிராய் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மூத்தவிநாயகர்கோயிலடி,
கரணவாய், கரவெட்டி

தகவல்:
குடும்பத்தினர்.
0772511059

## மரண அறிவித்தல்கள்



### திருமதி ஆச்சிப்பிள்ளை கந்தையா
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கலாநிதி பவனம் சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆச்சிப்பிள்ளை கந்தையா கடந்த (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா,கந்தையா, அருணாசலம் மற்றும் சபாரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் பொன்னம்மா, கனகம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், கலாநிதி (ஆசிரியை, யா/ விக்கினேஸ்வரா ம.வி. , மீசாலை), தபோநிதி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயகுமாரன் (அதிபர் யா/ மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்), நிர்மலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஸிகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன், தரம் 09), யாதுரி (தரம் 05, மாணவி, சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை), அபிநயன் (சுவிஸ்), ஆத்மிகன் (சுவிஸ்), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. ஒரு மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. ஜெயகுமாரன்
(அதிபர் யா/ மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம்)

சாவகச்சேரிவடக்கு,
சாவகச்சேரி.



### திருமதி கமலாதேவி சடகோபன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சடகோபன் நேற்று முன்தினம் (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியயோகத்தர் இ.சடகோபனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம் -யோகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் -கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், நந்தகோபன், ரேவதி, பத்மாவதி, புஸ்பவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2015) புதன்கிழமை 30/02 நிக்களஸ் லேன் கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:இ. சடகோபன்
(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்).



### பஞ்சரத்தினம் கனகரத்தினம்

மானிப்பாய் கட்டுடையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சரத்தினம் கனகரத்தினம் (இராசையா) கடந்த (05.04. 2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா (சின்னத்தம்பி) -பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற கனகரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசலட்சுமி, சின்னத்தங்கச்சி, சிவசுப்பிரமணியம், பரஞ்சோதி, ஐயாத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற யோகம்மா தம்பிஐயாவின் அன்பு மைத்துனியும், திலகவதி, ஜெகதீஸ்வரி, தர்மசேகரம் (வர்த்தகர் - சுதுமலை), காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் துரைசிங்கம் (இராசா மினிவான், பாடசாலைசேவை, சுதுமலை), தர்மசோதி (ஆசிரியை-யாழ்/ சுது மலை சிந்மய பாரதி வித்தியாலயம்), பால சிங்கம் (பாலு, வர்த்தகர், உரும்பிராய்), சிவநாதன் (ஆசிரியர்- புனித செபஸ்தியான் முஸ்லிம் மகா வித்தியாலயம், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.04.2015) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மதவடி லேன், சுதுமலைதெற்கு,
மானிப்பாய்.

## மரண அறிவித்தல்கள்



### மேரி யோசேப்பின் செல்வநாயகம்
(உரிமையாளர் ராஜ்கோ அழகு சாதன விற்பனை நிலையம், அச்சுவேலி)

ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும், சக்கடத்தார் ஒழுங்கை, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி யோசேப்பின் செல்வநாயகம் (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருச்செல்வம்-சூசானம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற யோசேப் செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், லூசினா, செல்வரஜனி (பிரான்ஸ்), செபஸ்தியன் ஆகியோரின் அன்புத் தாயும், சிறிகாந், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சிறிமதி, றொசான், கிறீஸ்ரினா, ஜெயகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜய்சனினி அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.04.2015) புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பி.ப. 2.45 மணியளவில் புனித சூசையப்பர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செபஸ்தியன் (மகன் - 077 5925489).

சக்கடத்தார் ஒழுங்கை,
அச்சுவேலி.



### வேலுப்பிள்ளை கனேஸ்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.10.1930 | 04.04.2015 |

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கணேஸ் கடந்த (04.04.2015) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துவேலு -லக்ஸ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், சர்வேஸ்வரி (ராசாத்தியின்) அன்புக் கணவரும், செல்லத்துரை, காலஞ்சென்றவர்களான பகவதி, குமாரசுவாமி (மதிப்பர்) மற்றும் பூரணம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரேஸ்வரி, தியாகராஜா மற்றும் சரஸ்வதி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், லோகேந்திரன் (முன்னாள், புவிதா கிறீம் ஹவுஸ் உரிமையாளர்), மகேந்திரன் (நாரந்தனை), ராஜேந்திரன் (முன்னாள் கீதா கிறீம் ஹவுஸ் உரிமையாளர்), காலஞ்சென்றவரான தெய்வேந்திரன், சுரேந்திரன் (ஒந்தி, கனடா), ரவீந்திரன் (பிரான்ஸ்), சசிகலா ஆகியோரின் தந்தையும், லோகேந்திரராணி (சியாமளா), புஸ்பராணி (தேவி), கீதா, இந்திராணி (பிறேமா, கனடா), சந்திரகலா (வசந்தா பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரன் (முன்னாள் சந்திரா கச்சான் அல்வா உரிமையாளர்) ஆகியோரின் அன்பு மாமனும், புவிதா (கனடா), புவிந்தன் (கனடா), சுரேஸ்குமார், சதீஸ்குமார், அனுஸ்ரலா, சங்கீதா (கனடா), மாறன் (கனடா), மகிந்தன் (கனடா), கீர்த்தனா, மகீபா, மயூரன் (கனடா), கார்த்திக் (கனடா), லக் சனா (கனடா), செந்தூரன் (பிரான்ஸ்), நிரோஜினி (பிரான்ஸ்), நிதுர்சன் (பிரான்ஸ்), நிதுர்ஷா (பிரான்ஸ்), ஜெகதா, நவலோஜினி (கனடா), சுதர் சன் (கனடா), பகீரதன் (மலேசியா) ஆகியோரின் பேரனும், அனோஜ் (கனடா), அனோஜா (கனடா), அஸ்வின் (கனடா), அனுஸ் (கனடா), அபிசன் (கனடா), அஸ்மிதா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.04.2015) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மாதா கோயிலடி,
கோப்பாய் தெற்கு.



### திருமதி இராசம்மா சுப்பிரமணியம்

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் இல. 77, குமரபுரம் பரந்தனில் வசித்தவரும், தற்போது கொழும்பு வெள்ளவத்தையில் வசித்து வந்தவருமாகிய திருமதி இராசம்மா சுப்பிரமணியம் நேற்றுமுன்தினம் (05.04. 2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லப்பா-சின்னம்மா தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி, சண்முக சுந்தரம் மற்றும் கணேசன், சகுந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வே. வல்லிபுரம், வே. செல்லையா, தங்கம்மா, குஞ்சுப்பிள்ளை மாணிக்கம், முத்துப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், ரதிதேவி, சுசிலாதேவி, விமலாதேவி, பேரின்பநாதன், இந்திராதேவி, சாரதாதேவி, சிவகுமார், சிவாஜினி, சுகிர்தா, கௌரி, சுரேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும், இ. கந்தசாமி (ஓய்வுபெற்ற சிறாப்பர்), ம. பத்மநாபன் (கிளி/ பரந்தன் இ. ம. வி ஓய்வு நிலை அதிபர்), காலஞ்சென்ற சு. பரமநாதன் மற்றும் சாந்தினி, பரராஜசிங்கம், பாலேந்திரன், நிரோஜினி, ஜெயக்குமார், கணே சலிங்கம், முருகானந்தன், மிதுனா ஆகியோரின் அன்பு மாமியும், தமி ழரசி-பரதன், இளவரசி-ரஞ்சுதன், பிரதீபா-திருஹரன், அனுக்கீர்த்தா -சஞ்சயன், பிரசன்னா -சுவர்ணா, பிரார்த்தனா -திரேஸ், கவிதா- கோணேஸ்வரன், நிருபன், விதுரா, பூஜா, நிர்த்திகா, ஆரபி, வைகரி, லக்ஸனா, அனுருத்தன், அபிரா, மயூரா, அனோஜன், அஜிதன், வர்ணன், சபேஸ், ஆதித்தியா, சாகித்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அரங்கன், மகிமா, துளசி, யாதவி, ஸ்ரீமன், கண்ணன், அஸ்வின், சஞ்சனா, நிலா, முகில், கிருத்திக் ஆகியோரின் ஆசைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.04.2015) புதன்கிழமை மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் காலை 9.00 மணிக்கு பார்வைக்கு வைக்கப்பட்டு மு.ப. 11.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. 1.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. கந்தசாமி (மருமகன்-ஓய்வு பெற்ற சிறாப்பர்) 071 8618382,
ம. பத்மநாபன் (கிளி/ பரந்தன் இந்து ம.வி ஓய்வு நிலை அதிபர்) 077 6798266

## 19 - இறுதி நேரத்தில் காலைவாருமா ஐ.ம.சு.முன்னணி?

"அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய செயற்பாட்டை அரசு முன்னெடுத்துவரும் சூழ் நிலையில், கடைசி நேரத்தில் காலை வாரி விடுவதற்குரிய செயற்பாடுகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஈடுபட்டு வருகிறது எனஐக்கியதேசியக்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது."

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:

"நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கருத்துகளைப் பெற்ற பின்னரே 19ஆவது திருத்தச்சட்டம் சபைக்குக் கொண்டுவரப்பட்டது. அத்துடன், அமைச்சரவை, கட்சித் தலைவர்கள், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பின் ஆலோசனையும் பெறப்பட்டது. தற்போது 19ஐ இழுத்தடிக்கும் செயற்பாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஈடுபட்டுள்ளது. இது வேதனைக்குரிய விடயமாகும்.

1978ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டுவந்தது. எனினும், இந்த முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்றே அதற்கு பின்னர் ஆட்சிக்கு வந்தவர்கள் சூளுரைத்தனர். இவ்வாறு தெரிவித்தே ஆட்சியைக் கைப்பற்றினர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த விடயத்தை முன்வைத்தே ஐக்கிய தேசியக் கட்சி களமிறங்கியது. இதற்கு ஜனாதிபதியும், ஹெல உறுமயவும் ஆதரவு தெரிவித்தே, எமது கட்சியுடன் கூட்டமைத்தனர். இதன்பிரகாரமே, நிறைவேற்று ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு வழிவகுக்கும் 19ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கிறோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி வந்தவர்கள் தற்போது அதற்கு எதிராக செயற்படுவது கவலையளிக்கிறது.

குறிப்பாக, 19 தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானம் கிடைக்கப்பெற்றதும், 8, 9, 10 ஆம் திகதிகளில் 19 மீது விவாதம் நடத்தப்பட்டு அது நிறைவேற்றப்படும். சட்டவரைபு தோல்வியடைந்தால் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு அரசு தயாராகவே இருக்கிறது" –என்றார்.

## மயூரனின் இறுதிக்கட்ட மேன்முறையீடும் நிராகரிப்பு

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட இலங்கை வம்சாவழித் தமிழரான மயூரன் சுகுமாரன் உட்பட இரு ஆஸ்திரேலிய பிரஜைகளினதும் இறுதிக்கட்ட மேன்முறையீடுகளையும் இந்தோனேசிய நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

போதைமருந்து கடத்தியதாக இவர்கள் குற்றங்காணப்பட்டார்கள்.

அண்ட்ரூன் மற்றும் மயூரன் சுகுமாரன் (இலங்கை வம்சாவளி தமிழர்) ஆகிய இருவரும் இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடொடொ, தமக்கு மன்னிப்பு வழங்க மறுத்ததை எதிர்த்துமேன்முறையீடுசெய்திருந்தனர்.

ஆனால், அவர்களுக்கு ஜனாதிபதியின் முடிவை கேள்விக் குள்ளாக்குவதற்கு அதிகாரம் கிடையாது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

2005 இல் ஆஸ்திரேலியாவுக்கு ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்த முயன்ற போது கைது செய்யப்பட்ட 9 பேர் கொண்ட குழுவில் இவர்கள் இருவரும் அடங்குகிறார்கள்.

அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று ஆஸ்திரேலியாவில் ஒரு பரப்புரைப் போராட்டம் நடக்கிறது. ஆனால், இவர்கள் இருவரும் தூக்குத் தண்டனைக்கான ஏற்பாடுகளுக்காக ஏற்கனவே இந்தோனேசிய தீவு ஒன்றுக்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டார்கள்.

# ‘19’ஐ விவாதத்துக்கு எடுக்கும் திகதி குறித்து பலத்த சர்ச்சை

## அரச கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று சூடான வாதப்பிரதிவாதங்கள்

கொழும்பு, ஏப்.7

அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் மீதான விவாதத்தை ஒத்திவைக்குமாறு எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஆளுங் கட்சி நிராகரித்ததையடுத்து, கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று சூடானவாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றுள்ளன.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் கூட்டம் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது, அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தை விவாதிப்பதற்கும், நிறைவேற்றுவதற்கும் அரச தரப்பு உத்தேசித்துள்ள திகதியில் மாற்றம் வேண்டும் என எதிர்க் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன், பரந்துபட்ட கலந்துரையாடலுக்கும், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்கும், மேலும் சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் காலம் தேவையென்பதால், நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்திலிருந்து, மேற்படி விடயத்தை விலக்கிக்கொள்ளுமாறும் எதிர்க் கட்சிகள் வேண்டுகோள் விடுத்தன.

எனினும், இதற்கு ஆளுங்கட்சி இணக்கம் தெரிவிக்கவில்லை. ஒழுங்குப் புத்தகத்தில், விடயதானம் அப்படியே இருக்கட்டும்.

சபை அமர்வு நடைபெறும் தினத்தன்று, சபாநாயகரிடம் கேள்வியெழுப்பி, இதுபற்றி அவரின் முடிவை அறியு மாறும் இடித்துரைத்தது.

இவ்வாறு திகதி நிர்ணயம் தொடர்பில் இருதரப்புக்குமிடையில் சூடான வாதப்பிரதிவாதங்கள், இடம்பெற்று, உறுதியான முடிவின்றி கூட்டம் முடிவடைந்துள்ளது.(ற–சி)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் சபாலிங்கம் நினைவாக அமைக்கப்பட்ட ‘அதிபர் சபாலிங்கம் நினைவு மண்டபம்’ கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஓய்வுபெற்ற மூத்த அதிபர் எஸ்.பொன்னம்பலத்தால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கே.சயந்தன் ஆகியோரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர்களான அ.பஞ்சலிங்கம், ச.ஸ்ரீக்குமரன், வீ.கணேசராசா ஆகியோரும் குறித்த கல்லூரியின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வின் இறுதியில் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்றது. (ற–ரி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### ‘19’ஐ

சட்டத்தரணிகளின்வாதங்கள்கடந்த புதன், வியாழக்கிழமைகளில் நடைபெற்றன. பிரதம நீதியரசர் கே.சிறிபவன் தலைமையிலான நீதியரசர்களான சந்ரா ஏக்க நாயக்க, பிரியசாத் டெப் ஆகிய மூவரடங்கிய குழு முன்னிலையில் இந்த விசாரணைகள் இடம் பெற்றன.

19ஆவது திருத்தச் சட்டமூலத்தை சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக நிறைவேற்ற வேண்டும் என்று ஒருதரப்பு சட்டத்தரணிகளும், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இதை நிறைவேற்றலாம் என்று மறுதரப்பு சட்டத்தரணிகளும் கடந்த வாரம் இடம்பெற்ற 19ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விசாரணைகளில் வாதங்களை முன்வைத்திருந்தனர்.

இரண்டு நாள்களும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்களை கவனத்திலெடுத்த பிரதம நீதியரசர், திங்கட்கிழமை (நேற்று) சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கோரப்படும் என கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார். இதையடுத்து, சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை பிரதம நீதிரயரசர் நேற்று பெற்றுக்கொண்டுள்ளார்.

அமைச்சரவையின் பிரதானியாக பிரதமர் நியமிக்கப்படும்போது ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்படுவதில்லையா என்றும், மக்களால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரத்தை மற்றொருவர் அனுபவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியுமா என்பது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பிரதம நீதியரசர், சட்டமா அதிபரிடம் கோரியுள்ளார். அந்த சரத்தினூடாக ஜனாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட மாட்டாதெனசட்ட மா அதிபர் தமது அபிப்பிராயத்தில் பிரதம நீதியரசருக்குப் பதிலளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கோரப்பட்டதன் பின்னர், 19ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பான தமது அபிப்பிராயத்தை நாடாளுமன்றத்துக்கும், ஜனாதிபதிக்கும் மிகவும் இரகசியமான முறையில் உயர்நீதி மன்றம் அனுப்பிவைத்துள்ளது என்றும் குறிப்பிடப்படுகின்றது. (ற–சி)

### மாந்தை

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பாக பொறுப்பதிகாரி ஐ.பி.ரணசிங்க தலைமையில் சார்ஜண்ட் சொய்சா உட்பட நான்கு குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர். அவர்களுடன் மன்னார் மாவட்ட நில அளவையாளர் ஏ. திலீப்குமாரும் முன்னிலையாகியிருந்தார்.

காணாமற்போனோர் சார்பாக சட்டத்தரணி இராஜகுலேந்திரா தலைமையில் சட்டத்தரணிகள் வீ.எஸ்.நிறைஞ்சன், செல்வி ரனித்தா ஞானராஜா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

குற்றவியல் திணைக்களம் சார்பாக தோன்றிய சார்ஜன்ட் சொய்சா மன்றில் தெரிவிக்கையில் ஏற்கனவே அகழ்வுப் பணி நடைபெற்ற பகுதியில் 1950 ஆம் ஆண்டுக்கு முன்பு இருந்து மயானம் இருந்ததாகவும் அந்தப் பகுதியில் இருந்த பொது மக்களிடம் இருந்தும் பெரியவர்களிடம் இருந்தும் தாங்கள் தகவல்கள் சேகரித்ததாகவும் அந்த இடத்தில் ஒரு பொது மயானமும் அத்துடன் அவ்விடத்தில் ஒரு பொது வைத்தியசாலை இருந்ததாகவும் தங்களுக்கு தெரியவந்ததாகவும் தெரிவித்தார்.

அதுமட்டும் இன்றி தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் எல்லாம் சமயமுறைப்படி புதைக்கப்பட்டுள்ளதாக அதன் ஆதரமாக கைகள் கால்கள் கட்டப்பட்டிருந்ததாகவும் அவர் மன்றில் தெரிவித்ததுடன் தோண்டப்பட்ட எலும்புக் கூடுகள் சமய ஆசாரப்படியே புதைக்கப் பட்டிருந்தாகவும் இதனால் இப் பகுதியில் தொகையாக எவரும் புதைக்கப்படவில்லை என அவர் தெரிவித்து ஒரு அறிக்கை சமர்ப்பித்தார்.

இதற்கு பதில் வாதம் புரிந்த காணாமற் போனவர்கள் சார்பாக முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி இராஜகுலேந்திரா தனது வாதத்தில் தற்பொழுது குற்றப்புலனாய்வு பிரிவால் முன்வைக்கப் படும் இந்த கருத்து இதுவரைக்கும் இந்த நீதிமன்றில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் அறிக்கை சமர்ப்பிக்கப் படவில்லை எனவும், மன்னார் நகர சபை தலைவரால் இந்த நீதி மன்றுக்கு ஒரு சத்தியக் கூற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அதாவது அந்த இடத்தில் ஒரு பொது மயானம் இருக்கவில்லை, இதற்கான எவ்வித சான்றுகளும் எமது நகர சபை பதிவு ஏடுகளில் காணப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் அப்பகுதி பங்கு தந்தையால் இந்த மன்றுக்கு சமர்பிக்கப்பட்டிருக்கும் சத்தியக் கூற்றிலும் மயானம் இருக்கவில்லை என்றும், எமது பங்கு தேவாலயம் இது சம்பந்தமான எந்த சான்றும் கொண்டிருக்கவில்லையெனவும் சத்தியக் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் மன்றுக்குத் தெரியப்படுத்தினார்.

இரு பகுதியினர்களினதும் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த நீதிவான் அலெக்ஸ்ராஜா ஆசீர்வாதம் கிரேசியன், குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் அடுத்த தவணைக்குள் இந்தப் பகுதியில் ஒரு மயானம் இருப்பதாக நீங்கள் தெரிவித்திருப்பகால் இதை உறுதிப்படுத்தும் வண்ணம் சகல ஆதாரங்களுடன் இந்த மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள எலும்புக் கூடுகளின் நிலைமையின் அறிக்கையும் சமர்ப்பிக்கும்படியும் அத்துடன் சட்ட வைத்தியர் வைத்தியரத்னவின் அறிக்கையையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இது 06.07.2015 அன்று மன்றில் சமர்ப்பிக்கும்படியும்

இதைத் தொடர்ந்து 17.08.2015 ருந்து 21.08.2015 வரையான காலப்பகுதியில் அடையாளம் காட்டப்படும் இடத்தில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும் என உத்தரவிட்டார்.

### எதிர்க்கட்சி

நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபால டி சில்வா நியமிக்கப்பட்டார். ஆனால், அதன் பின்னர் தேசிய அரசு அமைக்கப்பட்டது.

தேசிய அரசில், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர்களும் உள்வாங் கப்பட்டிருந்தனர். அதனால் எதிர்க் கட்சித் தலைவர் யார் என்ற பிரச்சினை எழுந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கே வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் சிங்கள பெரும் பான்மை கட்சிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

நிமல் சிறிபால டி சில்வா தானே தொடர்ந்தும் எதிர்கட்சித் தலைவர் என்று தெரிவித்திருந்தார். ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 58 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு, தினேஷ் குணவர்த்தனவை எதிர்கட்சித் தலைவராக நியமிக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்பட்டால் அதனை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேசிய அரசில் பங்கெடுத்துள்ளது. அதனால், அந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரையும் எதிர் கட்சித் தலைவராக நியமிக்க முடியாது என்று ஜே.வி.பி. சபாநாயகருக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில், சபாநாயகர் நாடாளுமன்றதில் இன்று பதிலளிப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது. நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், நடைமுறை, மரபு, விதிமுறைகளை அடிப்படையாக வைத்தே எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதை சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–5)

### மக்கள்

ஆஸ்திரேலியத் தூதுவர் ரொபின் மூடி, பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். முதலில், யாழ்.மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்தை ஆயர் இல்லத்தில் சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த யாழ்.மறைமாவட்ட ஆயர், “ஆட்சி மாற்றத்தின் பின் வடக்கில் பெரியளவு மாற்றம் ஏற்படாவிட்டாலும், சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள், மக்கள் மத்தியில் சில நம்பிக்கைகளை ஏற்படுத்தியுள்ளது என்று அவரிடம் குறிப்பிட்டேன்.”– எனக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனை, ஆஸ்திரேலியத் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடினார். முதலமைச்சர் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் தெரிவிக்கையில்,

“ஆஸ்திரேலிய தூதுவர் தமது நிதியுதவியில் இங்கு மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களைப் பார்வையிட வந்ததாகத் தெரிவித்தார். இதன்போது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் தொடர்பிலும் ஆஸ்திரேலிய தூதுவர் வினவினார். தமிழ் மக்களுக்கு புதிய அரசு மீது எதிர்பார்ப்பு இருக்கின்ற அளவுக்கு, நடைமுறையில் விடயங்களைப் பார்க்க முடியவில்லை என்பதை தெரிவித்தேன்.’’ என்று குறிப்பிட்டார்.

ஆஸ்திரேலியதுதுவர், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனையும் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில், புதிதாக விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள தேவைகள் தொடர்பில் அரச அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார். தமது உதவிகள் தொடரும் என்று ஆஸ்திரேலிய தூதுவர் இதன் போது பதிலளித்ததாக அரச அதிபர் தெரிவித்தார். (ற–5)

### வேலி

வில்லை என்றும் எந்தப் பொலிஸார் மீதும் நடவ டிக்கை எடுப்பதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவிக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தகைய முறைப்பாடு ஏதா வது இருந்தால் பயப்படாமல் சம்பந்தப்பட்டவர்கள் தன்னிடம் நேரடியாக முறையிட முடியும் என்று வடமாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதி பர் லலித் ஜெயசிங்க தெரிவித்தார். (உ)

### கைபேசி

வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்ததற்குஅமைய இந்த சலுகை இன்று முதல் நடைமுறைக்கு வருகின்றது.

எனினும் பிற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களின் அழைப்புக்கான கட்டணங்களில் மாற்றம் ஏற்படப் போவதில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற–ரி)

### பாகிஸ்தானுடன்

இத்னை, இரு நாடுகளின் தலைவர் களும் உறுதிப்படுத்தியுள்ள போதிலும், உடன்பாட்டின் விவரங்கள் ஏதும் உடனடியாக வெளியிடப் படவில்லை.

ஏற்கனவே, இந்தியப் பயணத்தின் போதும், அணுசக்தி ஒத்துழைப்புக் குறித்த உடன்பாடு ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இந்த நிலையில், பாகிஸ்தானுடனும் இத்தகைய உடன்பாடு கையெழுத்திடப்பட்டுள்ளது.

இடர்முகாமைத்துவம், விளையாட்டு, கப்பல்துறை, அணுசக்தி, போதைப் பொருள், கல்வி ஒத்துழைப்பு ஆகியன குறித்தே இந்த உடன்பாடுகள் கையெழுத்திடப்பட்டுள்ளன. அதேவேளை இந்தியா – பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இலங்கை அணுசக்தி உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ள நிலையில், இலங்கை முதலாவது அணு உலையை நிர்மாணிக்கக் கூடும் என்ற எதிர் பார்ப்பு ஏற்பட்டுள்ளது. (ற–5)

### ஆணைக்குழு

அதேவேளை, ஆணைக்குழுவின் அமர்வு நடைபெற்ற கல்முனை தமிழ் பிரிவு பிரதேச செயலகத்தின் முன்பாக நேற்று வாய்களை மூடிக் கருப்புப் பட்டிகள் அணிந்தவாறு அமைதிப் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. அம்பாறை மாவட்ட காணாமல் போகச் செய்யப்பட்டோரின், படுகொலை செய்யப்பட்டோரின் உறவுகள் அமையத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

அவர்கள் ஆணைக் குழுவின் தலைவரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர். ஆணைக்குழுவின் விசாரணைகள் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன என்றும் நீண்ட கால விசாரணைக்கு முகம் கொடுக்க காணாமல் போகச் செய்யப்பட்டோரின், படுகொலை செய்யப்பட்டோரின் உறவுகள் தயாராக இல்லை என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆணைக்குழு மீது நம்பிக்கை இல்லை என்றும், சர்வதேச தரத்திலான நிபுணர்கள் கொண்ட விசாரணையை எதிர்பார்க்கின்றோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. (ற–30)

### நல்லிணக்கத்தை

மற்றும் அதன் வினைத்திறனை அதிகரிப்பதற்காக, பால்நிலை மற்றும் பாலியல் வன்முறை சார்ந்த விடயங்களை எதிர்கொள்ளும் வகையில் அரச மற்றும் அரசு சாரா அமைப்புக்களை வலுப்படுத்தல், சமூக ஒருமைப்பாடு, இன நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் என்பவற்றுக்கு தொடர்ச்சியாக உதவிகள் வழங்கப்படும் என்று ஸூ இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (ற–5)

# நன்னீரோடையில் மணல் அகழ்வு

## மூதூர், இறால்குழி கிராம மக்கள் விசனம்

திருகோணமலை, ஏப்.7

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இறால்குழி கிராம நன்னீரோடையில் இடம்பெறும்சட்டவிரோதமணல்அகழ்வால் அந்தக் கிராமமே பாதிக்கப்படுவதாக கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மணல் அகழ்வால் ஒவ்வொரு முறையும் வெள்ளத்தால் பாதிக்கப்படும்முதலாவது கிராமமாகவும் [illegible]ல்குழி ஆற்றால்தமது கிராமம் அரிக்கப்பட்டு வருவதையும் சுட்டிக்காட்டுகின்றனர். இந்தநிலைதொடருமானால்இறால்குழி கிராமத்தில் தாம் வசிக்க முடியாது என்று கவலை தெரிவிக்கின்றனர்.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் அங்கு மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. மணல் அகழ்வுக்காக பிரதேசசெயலகம் மூவருக்கு அனுமதி வழங்கியுள்ளது. இதில் 235 கியூப் மணல் மட்டுமே மாதம் ஒன்றுக்கு அகழ முடியும் என்றுதான் அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் நன்னீரோடையில் 35 கியூப், பரவிபாய்ந்தான் ஆற்றில் 100 கியூப், முள்ளியோடையில் 100 கியூப் என்பதாகும். இதற்காக அனுமதிக்கப்பட்ட படகுகள் 13 மட்டுமே ஆனால் 54 படகுகள் மூலம் ஒரே நாளில் 100 கியூப் மணலை அகழ்வதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கொடுக்கப்பட்ட அனுமதிக்கு மாறாக சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விடயம்தொடர்பில்பலதடவை மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் பல அதிகாரிகளுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் கடிதங்கள் மூலம் தெரியப்படுத்தியும் எவ்வித தீர்வும் எட்டப்படாத நிலையில் கடந்த மாதம் இவ்விடயத்தை கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனன் மற்றும்மூதூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.நாகேஸ்வரன் ஆகியோரை அழைத்து கிராம மக்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தி தெரியப்படுத்தினர்.

எனவே உடனடியாக இவ்விடயம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெ.ஜெனார்த்தனனால் மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதை அடுத்து அந்தப்பகுதியில் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் மணல்அகழ்வுக்கு தற்காலிகமான தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச அதிபரால் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எனினும் கொடுக்கப்பட்ட அனுமதியை விட மேலதிகமான மணல் அகழ்வால் அந்தப்பகுதி ஆழமாகி மீன் வளம் அற்றுப்போய் காணப்பட்டுள்ளது.

எனவேஅங்கு மீன்பிடியில் ஈடுபட்டு வந்த மீனர்களின் தொழில் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-40)




சிறுபோகநெற் செய்கைக்கு அனுமதிக்குமாறு கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டது.

## சிறுபோகத்துக்கு அனுமதிகோரி மட்டு. விவசாயிகள் கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, ஏப்.7

சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ள அனுமதிக்குமாறு கோரி மட்டக்களப்பு நகரில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு காந்திபூங்கா முன்றிலில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பாதிக்கப்பட்ட பெருமளவு தமிழ், முஸ்லிம் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

குறித்த மாவட்டத்தில் பிரதான குளங்களில் ஒன்றான உறு காமம் குளத்திலிருந்துநீர்ப்பாசன வசதியைப்பெறும் விவசாயிகள், குறித்த குளத்திலிருந்து நீரைவழங்காமையால் சிறுபோக நெற் செய் கையை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரியாவெளி, தளவாய், பூமாச்சோலை, கரடியனாறு, பவள வெட்டுவான் உட்பட பல கிராமங்களைச்சேர்ந்த500விவசாய குடும்பங்களும்1500விவசாயதொழிலாளர்களும் சிறுபோக நெற் செய்கை தடை செய்யப்பட்டுள்ளதால்தொழில் வாய்ப்பை இழந்துள்ளதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர்.

1420 ஏக்கரில் செய்கை பண்ணப்படும் சிறுபோக நெற் செய்கை இதனால் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

2014 ஆம் ஆண்டு குறித்த உறுகாமம் குளத்தில் நீர்மட்டம் 8 அடியாக இருந்தபோது சிறுபோக விவசாய செய்கைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது 16 அடியாக நீர்மட்டம் காணப்படுகின்றபோதும், சிறுபோக செய்கைக்கு அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஜனாதிபதி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ஆகியோருக்கு மனுக்களையும் அனுப்பி வைத்தனர். (வ)

## சாவகச்சேரி நகரில் இரு வீதிகளுக்கு விமோசனம்

தென்மராட்சி, ஏப்.7

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ளகுண்டும்குழியுமாகக்காணப்பட்ட2வீதிகள்நீண்டகாலங்களின் பின்னர்புனரமைக்கப்படவுள்ளன.

சாவகச்சேரி டச்சு வீதி மற்றும் சாவகச்சேரி ரயில் நிலைய வீதியிலிருந்து தனங்களப்பு வீதி வரையிலான நகரசபையின் சந்தையை அண்மிக்கும் வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.

[illegible] அபிவிருத்தித் திணைக்களத்தால் வீதிகள் புனரமைப்பதற்கான கற்கள் பறிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனன.

சந்தையை அண்மிக்கும் வீதி யில் சாவகச்சேரி நகரசபை அலுவலகம், பொது நூலகம், தொலைத்தொடர்பு அலுவலகம், ஆகியவையும் பொதுச்சந்தையும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வீதி சாவகச்சேரி பஸ் நிலை யத்தி லிருந்து ரயில் நிலையம், சிவன் கோவில், முத்துமாரி அம்பாள் ஆலயம் தென்மராட்சிகலைமன்றகலாசார மண்டபம் ஆகியவற் றுக்குச் செல்வதற்கு குறுகிய தூரம் கொண்ட வீதி என்பது குறிப்பிடத்[illegible]து. (வ-9)



சுன்னாகம் பொலிஸாரால் வீதி ஒழுங்கு சம்பந்தமான விழிப்புணர்வு தெரு வழி நாடகம் பொது மக்கள் கூடும் சந்தைகள் மற்றும் பொது இடங்கள், பாடசாலைகளில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. (வ-86)

## அம்பாறையில் நடைபெற்ற கிழங்குப் பயிர் கண்காட்சி

மட்டக்களப்பு, ஏப்.7

தேசிய கிழங்கு பயிர் ஊக்குவிப்புத் தினத்தை முன்னிட்டு அம்பாறையில் கிழங்குப் பயிர்க் கண்காட்சியும் விற்பனையும் பெண்கள் தொழில் முயற்சி மேம்பாட்டு நிலைய வளாகத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அம்பாறை விவசாயத் திணைகளத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கண்காட்சியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கண்காட்சியை திறந்துவைத்தார். இதன்போது உணவில் கிழங்கின் பயன்பாடு, கிழங்கின் மூலம் உணவுகள் தயாரிக்கும் முறைகள், கிழங்குப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் முறைகள் மற்றும் அதற்காக விவசாயத் திணைக்களம் வழங்கி வரும் உதவிகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. (வ)

## யாழ்.மாநகர பகுதியில் கடந்த வாரம் டெங்கு ஒழிப்பில் 6774 வீடுகள் தரிசிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.7

யாழ்.மாநகர சபைப் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்ற டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டின் போது 6774வீடுகள்தரிசிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரிசிப்பின் போது 51 குடியிருப்புப் பகுதியில் நுளம்பு பெருகுவதற்கு வழி ஏற்படுத்தியோருக்கு எதிராகசட்டநடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாக மாநகர சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 26ஆம் திகதி தொடக்கம்இந்தமாதம்முதலாம் திகதிவரை டெங்கு ஒழிப்பு வாரமாக அனுட்டிக்கப்பட்டது.

குருநகர் பிரதேசத்தில் 1174 வீடுகளும் நாவாந்துறையில் 1059 வீடு களும் யாழ்.நகர் ஒன்றில் 685 வீடுகளிலும் யாழ்.நகர் இரண்டில் 983 வீடுகளும் நல்லூரில் 918 வீடுகளும் வண்ணார் பண்ணையில் 967 வீடுகளும் கொழும்புத் துறை மற்றும் அரியாலையில் 988 வீடுகளுமாக மொத்தம் 6774 வீடுகளின் சுற்றாடல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அனேகமான இடங்களில் மக்க ளின் குடியிருப்பு சுற்றாடல் போதிய சுகாதாரம் இன்றி அவை நுளம்பு பெருகுவதற்கு வழி அமைத்தும் காணப்பட்டன.

இவ்வாறான நிலையிலுள்ள சுற்றாடல்களைப் பேணியோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதிகமாக வண்ணார்பண்ணை பிரதேசத்தில் 18 குடியிருப்பாளர்களின் சுற்றாடல் நுளம்பு பெருகுவதற்கு ஏதுவாகக் காணப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டது.

ஒரு வாரகாலம் இடம்பெற்ற டெங்கு செயற்பாட்டு நடவடிக்கையின் போது பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், சுகாதார பாதுகாவலர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொலிஸார், கிராம உத்தியோகத்தர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இடம்பெற்ற டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டின் போது யாழ்.மாநகர சபைப் பகுதியில் கழிவு நீர் வழிந்தோடும் கால்வாய்களுக்கு அபேற் என்ற கிருமிநாசினி விசிறப்பட்டு நுளம்பு குடம்பிகள் அழிக்கப்பட்டன. (வ-17)

## தனியார் கட்டடத்தில் இயங்கும் முன்பள்ளி

கைதடி ஏப்.7

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் மின்னொளி முன்பள்ளி நேற்று தொடக்கம் கைதடிச் சந்தியில் ஏ-9வீதியில் கைதடி பல நோக்குக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்குதெற்குப் பக்கமாக வுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகின்றது.

மேற்படி முன்பள்ளி இதுவரை காலமும் சனசமூக நிலையக் கட்டடத்தில் இயங்கி வந்ததாகவும் தற்போது கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருவதன் காரணத்தாலேயே தற்காலிகமாக தனியார் கட்டடத்தில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-288)

## மட்டக்களப்பில் திருமுறை மாநாடு

மட்டக்களப்பு, ஏப்.7

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும் இந்து சமய கலாசார அலுவல்கள்திணைக்களமும் இணைந்து நடத்தும் திருமுறையும் சைவத்திரு நெறியும் எனும் திருமுறை மாநாடு நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (வ)

# ஆவரங்கால் இந்து கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,எப் 7
அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் பவள விழாவை முன்னிட்டு நிலாவொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் கரப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது. அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மின்ஒளியில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்துஇளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
5 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:2என்றசெற்கணக்கில்வெற்றி பெற்றுசம்பியன் ஆனது. (த-23)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம்,ஏப். 7
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடந்தம் [illegible]ர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
இதில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.பீற்றஸ் விளையாட்டுக் கழகஅணி மோதவுள்ளது. (த-23)

யாழ்ப்பாணம்,ஏப் .7
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வளர்மதி விளையாட்டுக் கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 5மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் [illegible] பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் விக்னேஸவர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

## மரதனில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம், ஏப் .7
உயிர்ப்பு ஞாயிறு தினத்தையொட்டி கொழும்புத்துறை புனித செப மாலை அன்னை ஆலயத்தின் இளையோர் அமைப்பின் ஏற்பாட்டில் மரதன் ஓட்டப் போட்டிகள், சிறுவர்களுக்கான உள்ளக விளையாட்டுப்போட்டிகள் என்பன நேற்று முன்தினம் ஞாயிறு காலை இடம் பெற்றன.
மாலை இளையோர் எதிர் திருமணமானோருக்கு இடையே கிரிக்கெட் போட்டியும் இடம் பெற்றது.
மரதன் ஓட்டப் போட்டியில் (பொது) வெற்றி பெற்றோர் விவரம்:-
முதலாம் இடம்-ம.நிரோஜன்,
இரண்டாம் இடம்-கிஷோர்,
3ஆம் இடம்-ஐ.டொறிங்ரன் .
ஆண்டு 11 இற்கு உட்பட்டவர்களுக் கான போட்டியில்,
முதலாம் இடம்-யே.சுபீட்சன்,
இரண்டாம் இடம்-அ.தயூலன்
மூன்றாம் இடம்-ஜேம்ஸ் ரீபன்
(ஒ-135)

## இறுதிப்போட்டி நாளை

வலி. வடக்கு, ஏப் .7
வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளின் 17 வயது, 19 வயதுப் பிரிவினர்களுக்கு இடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடம் மற்றும் இறுதிப் போட்டிகள் நாளை புதன்கிழமை பகல் 10.00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளன. இப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.
மூன்றாம் இடம்.
*17 வயதுப் பிரிவு*
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
*19 வயதுப் பிரிவு*
வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
இறுதிப் போட்டி
*17 வயதுப் பிரிவு*
தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
*19 வயதுப் பிரிவு*
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
(த-86)

## சென். ஜோன்ஸ் நடத்தும் ஹொக்கி சுற்றுப் போட்டி

வலி வடக்கு, ஏப் 07
யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 09 ஆம், 10 ஆம் 11 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் மாபெரும் ஹொக்கி சுற்றுப் போட்டி நடை பெறவுள்ளது. இந்தப் போட்டியில் யாழ் மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கி அணிகளுடன் கழக அணிகளும் கலந்துகொள்ளவுள்ளன. திறந்த போட்டியாக இது நடைபெறுவதால் பத்துக்கும் மேற்பட்ட அணிகள்



இந்தப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (த-86)

## தாச்சியில் சாதித்தது தாவடி காளியம்பாள்



யாழ்ப்பாணம், ஏப். 7
நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வளர்ச்சி நிதிக்காக யாழ்.மாவட்டத் தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் கொக்குவில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொக்குவில் காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. பலம் பொருந்திய அணிகள் மோதிக் கொண்டதால் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது.
முதல்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது கொக்குவில் தாவடி காளியாம்பாள் விளையாட்டுக்கழகஅணி 3:1என்ற பழங்களைப் பெற்று முன்னிலையில் இருத்தது. இரண்டாம்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழக அணியினர் தமது ஒரு பழத்தினைப் பெற்றுக் கொண்டதால் ஆட்டம் மேலும் பரபரப்பான கட்டத்தை அடைந்தது. ஆட்டம் முடிவடைவதற்கு 5 நிமிடங்கள் இருக்கையில் நடுவரினால் வழங்கப்பட்ட தீர்ப்பை மயிலிட்டி கண்ணகி விளைய[illegible]டுக் கழக அணி வீரர்கள் ஏற்க மறுத்ததுடன் போட்டியில் தொடர்ந்து விளையாடமுடியாது எனக் கூறி மைதானத்தை விட்டு வெளியேறினர். இதனால் கொக்குவில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற பழங்கள் பெற்று வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
(த-23)

## தென்மராட்சிக் கல்வி வலய பெருவிளையாட்டு முடிவுகள்

கரணவாய், ஏப்.7
தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பெருவிளையாட்டுக்களில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

*கிரிக்கெட் - ஆண்கள்*
முதலாமிடம் - கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.
இரண்டாமிடம்- வரணி மத்திய கல்லூரி.
மூன்றாமிடம்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

*பெண்கள்*
முதலாமிடம் - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
இரண்டாமிடம் - சாவகச்சேரி மகளிர்கல்லூரி

*கரப்பந்து-ஆண்கள் 15 வயதுப் பிரிவு*
முதலாமிடம் : சந்திரபுரம் கந்தவரோதயம் ம.வி
இரண்டாமிடம்: கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி
மூன்றாமிடம் : மட்டுவில் தெற்கு அமெரிக்க மிசன் பாடசாலை.

*17 வயது*
முதலாமிடம் : கைதடி முத்துக்குமாரசுவாமிகள் ம.வி.
இரண்டாமிடம்:மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
மூன்றாமிடம்: கச்சாய் அ.த.க. பாடசாலை.

*19வயது*
முதலாமிடம் :சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
இரண்டாமிடம்:சாவகச்சேரி இந்துக் கல்லூரி
மூன்றாமிடம் : கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

*பெண்கள்-15 வயது*
முதலாமிடம் :மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிசன் அ.த.க.பாடசாலை
இரண்டாமிடம்:கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை
மூன்றாமிடம் :சாவகச்சேரி மகளிர் கல்லூரி

*17 வ்யது*
முதலாமிடம் : மட்டுவில் தெற்கு அ.மி தமிழ் கலவன் பாடசாலை.
இரண்டாமிடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி

*19 வயது*
முதலாமிடம் : கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை
இரண்டாமிடம்:சாவகச்சேரி மகளிர் கல்லூரி
மூன்றாமிடம் :மட்டுவில் தெற்கு அ.மி.

*வலைப்பந்தாட்டம்-15 வயதுப் பிரிவு பெண்கள்*
முதலாமிடம் :வரணி மத்திய கல்லூரி
இரண்டாமிடம்:மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
மூன்றாமிடம் :கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியர்லயம்.

*17 வயது*
முதலாமிடம் :சாவகச்சேரி இந்துக் கல்லூரி
இரண்டாமிடம்:கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.
மூன்றாமிடம் :மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

*19 வயது*
முதலாமிடம் :கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.
இரண்டாமிடம்:வரணி மத்திய கல்லூரி
மூன்றாமிடம் :சாவகச்சேரி[illegible] கல்லூரி

*உதைபந்து 15 வயதுப் பிரிவு ஆண்கள்*
முதலாமிடம் :சந்திரபுரம் கந்தவரோதயம் ம.வி
இரண்டாமிடம்: டிறிபேக் கல்லூரி
மூன்றாமிடம் : கச்சாய் அ.த.க பாடசாலை.

*17 வயது*
முதலாமிடம் :நாவற்குழி ம.வி
இரண்டாமிடம் : சந்திரபுரம் கந்தவரோதயம் ம.வி.
மூன்றாமிடம் :சாவகச்சேரி இந்துக் கல்லூரி. (ற-108)

## மும்பாய் இந்தியன்ஸ் சாதிக்கும்

மும்பாய் இந்தியன்ஸ் அணி திறமை வாய்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுபவ வீரர்களை சம நிலையில் கொண்ட அணி என்று ரோஹித் சர்மா கூறியுள்ளார்.
இந்தியாவில் நடைபெறும் ஐ.பி.எல் 8ஆவது தொடர் நாளை தொடங்குகிறது.
இந்நிலையில் இந்த தொடர் பற்றி மும்பாய் இந்தியன்ஸ் அணித் தலைவர் ரோஹித் சர்மா கூறுகையில், நாங்கள் நல்ல திறமையுள்ள இந்திய வீரர்களை எங்களுடைய அணியில் கொண்டுள்ளோம்.
கடந்த சீசனில் விளையாடிய 15 முதல் 16 வீரர்களை தக்க வைத்துள்ளோம். வெளிநாட்டு வீரர்கள் சி[illegible]ான நிலையில் செயல்படுகிறார்கள். ஐ.பி.எல் சீசனை சிறப்பான முறையில் தொடங்குவோம் என்ற நம்பிக்கை உள்ளது.
கொல்கத்தாவில் நடைபெற இருக்கும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தா அணியுடன் மோத இருக்கிறோம். சில சமயங்களில் அது சிறப்பாக அமையலாம். கொல்கத்தா ஈடன் கார்டனில் நாங்கள் சிறப்பாகச் செயல்பட்ட வரலாறு உண்டு.
கடந்த 2013ஆம் ஆண்டு சென்னையை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது அங்குதான். அங்குள்ள சூழ்நிலைகள் எங்களுக்கு நன்றாக தெரியும்.
நாளை புதன்கிழமை தொடங்கும் முதல் போட்டி எங்களுக்கு முக்கியமானது என்று தெரிவித்துள்ளார். (த)





# 5 கோல்களை அடித்து ரொனால்டோ சாதனை

லா லிகா லீக் கால்பந்து சுற்றுத் தொடரின் நேற்றைய போட்டியில் ரியல் மட்ரிட் – கிரனாடா அணிகள் மோதின.
இந்தப் போட்டியில் ரியல் மட்ரிட் ஆட்டத்துக்கு கிரனாடாவால் ஈடு கொடுத்து விளையாட முடியவில்லை. இதனால் ரியல் மட்ரிட் 9–1 என அபார வெற்றி பெற்றது. அந்த அணியின் முன்னணி வீரர் கிறிஸ்டியானா ரொனால்டோ 5 கோல் அடித்து அசத்தினார்.
ஆட்டம் தொடங்கிய 25ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கரேத் பலே முதல் கோலை அடித்து அணியின் எண்ணிக்கையைத் தொடங்கி வைத்தார். 30ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானா ரொனால்டோ ஒரு கோல் அடித்தார். அடுத்த 6ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலை அடித்தார்.
அதன் பின் 2 நிமிடம் கழித்து மீண்டும் ஒரு கோல் அடித்தார். இதனால் 8 நிமிடத்திற்குள் ஹட்ரிக் கோல் அடித்து சாதனைப் படைத்தார். ரொனால்டோவின் ஹட்ரிக் கோலால் ரியல் மட்ரிக் முதல் பாதி நேரத்தில் 4–0 என முன்னிலை பெற்றது.
2ஆவது பாதி நேரத்திலும் ரியல் மட்ரிட் அணியில் கோல் பசி அடங்கவில்லை. அந்த அணியின் பென்சிமா 52ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். அடுத்த 2ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மேலும் ஒரு கோல் அடித்தார். அடுத்த 2ஆவது நிமிடத்தில் பென்சிமா ஒரு கோல் அடித்தார்.
இதனால் 56ஆவது நிமிட ஆட்டத்தில் ரியல் மட்ரிட் வீரர்கள் 7 கோல்கள் அடித்தனர். இதற்கு கிரனாடா 74ஆவது நிமிடத்தில் பதில் கோல் ஒன்று அடித்தது. 83ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி மேலும் ஒரு கோல் அடித்தது. கடைசி 89 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மேலும் ஒரு கோல் அடித்தார். இதனால் ரியல் மாட்ரிட் 9–1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.(த)

## கோஹ்லியின் நம்பிக்கை

காயத்தால் அவதிப்பட்டு வரும் வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் விரைவில் குணமடைவார் என பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணித்தலைவர் விராட் கோஹ்லி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் சீருடை அறிமுக நிகழ்ச்சி மும்பையில் நேற்று நடந்தது.
இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட கோஹ்லி அளித்த பேட்டியில், முழங்காலில் காயம் அடைந்த மிட்செல் ஸ்டார்க் குணமடைந்து வருகிறார். அவர் முதல் 4 ஆட்டங்களுக்கு பிறகு எங்களது அணிக்கு திரும்புவார் என்று எதிர்பார்க்கிறோம்.
கடந்த சில ஆண்டுகளாக நான், கெய்ல், டிவில்லியர்ஸ் ஆகியோர் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயல்பட வேண்டிய கட்டாயம் இருந்தது. ஆனால் இந்த ஆண்டில் தினேஷ் கார்த்திக், டேரன் சேமி, பத்ரிநாத், மன்தீப் சிங் ஆகியோர் எங்கள் அணியில் இடம்பெற்று இருப்பது துடுப்பாட்டத்தில் எங்கள் அணிக்கு கூடுதல் வலுசேர்க்கும் என்று தெரிவித்துள்ளார்.
ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான மிட்செல் ஸ்டார்க் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத் தொடரில் தொடர் ஆட்ட நாயகன் விருது வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



## உலக சாதனையை சமன் செய்த சானக வெலகெதர

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சானக வெலகெதர 20/20 போட்டியில் சிக்கனமாக பந்து வீசுவதில் தென்னாபிரிக்க வீரர் கிறிஸ் மோரிஸின் சாதனையைச் சமன் செய்துள்ளார்.
நேற்று முன் தினம் நடந்த உள்ளூர் 20/20 போட்டியில் சிங்கள ஸ்போட்ஸ் அணிக்கு எதிராக அசத்திய வெலகெதர 4 ஓவரில் 2 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். மேலும் 2 ஓட்டமற்ற ஓவர்களையும் வீசினார்.
இதன் மூலம் கடந்த வருடம் 4 ஓவர்களுக்கு 2 ஓட்டங்கள், 3 ஓட்டமற்ற ஓவர், 2 விக்கெட் என சிக்கனமாக பந்து வீசிய தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர் கிறிஸ் மோரிஸின் சாதன்னயை வெலகெதர சமன் செய்துள்ளார்.
34 வயதான சானக வெலகெதர, 21 டெஸ்ட் போட்டி, 10 ஒருநாள் போட்டி, இரண்டு 20/20 போட்டிகளில் இலங்கை அணிக்காக விளையாடியுள்ளார். (த)





## ஐ.பி.எல். இன்று கோலாகல ஆரம்பம்

ஐ.பி.எல். தொடக்க விழாவில் இன்று பொலிவுட் நட்சத்திரங்கள் ஹிருத்திக் ரோஷன், ஷாகித் கபூர், அனுஷ்கா சர்மா ஆகியோர் நடனமாடவுள்ளனர்.
கொல்கத்தாவில் உள்ள சால்ட் லேக் மைதானத்தில் இன்று ஐ.பி.எல் தொடக்க விழா பிரமாண்டமான முறையில் நடைபெறவுள்ளது.
இ[illegible] 7.30 மணிக்கு ஆரம்பிக்கும் தொடக்க விழாவில் பிரபலங்களின் கண்கவர் நடனம், கலை நிகழ்ச்சி, லேசர் ஒளி வெள்ளத்தில் இசை விருந்து என்று மொத்தம் 2 மணி நேரம் நடைபெறும்.
ரசிகர்களை மகிழ்விக்கக் கூடிய வகையில் மிகப் பிரமாண்டமாக நடைபெறவுள்ள தொடக்க விழாவை பொலிவுட் நடிகர் சயீப் அலிகான் [illegible]ாகுத்து வழங்குகிறார். பொலிவுட் நட்சத்திரங்கள் பர்ஹான் அக்தர், [illegible]சையமைப்பாளர் பிரிதாம் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள்.
[illegible]ிழாவின் தொடக்கமாக ஹிருத்திக் ரோஷன், அனுஷ்கா சர்மா ஆகியோரின் நடனம் இடம்பெறுகிறது.
நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெறும் உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சியில் போட்டியில் பங்கேற்கும் 8 அணிகளின் அணித் தலைவர்களும் பங்கேற்கிறார்கள்.
அதைத் தொடர்ந்து நடப்புச் சம்பியனான கொல்கத்தா அணியின் அணித் [illegible] கௌதம் கம்பீர் கிண்ணத்தை ஒப்படைக்கும் நிகழ்வு நடை[illegible] (த)

# ஐ.பி.எல். ஸ்பெசல்

இந்தியாவில் களைகட்டவிருக்கும் ஐ.பி.எல். கொண்டாட்டங்களுக்கு ரசிகர்கள் தயாராகி விட்டனர்.
சமீபத்தில் நடந்த உலகக்கிண்ணத் தொடரில் ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்த பல விடயங்கள் ஐ.பி.எல். தொடர் மூலம் அரங்கேறவுள்ளன.
இந்நிலையில் ஐ.பி.எல். தொடரில் நடந்த சில முக்கிய நிகழ்வுகளை பற்றி பார்க்கலாம்.

*சென்னை தான் 'ரொப்*

ஐ.பி.எல் போட்டிகளில் அதிக வெற்றிகளை பெற்ற அணிகளில் சென்னை அணி முதலிடத்தில் உள்ளது. இந்த அணி 69 வெற்றிகளை இதுவரை பெற்றுள்ளது.

*சிக்சர் மன்னன் கெய்ல்*

ஐ.பி.எல் தொடரில் அதிக சிக்சர்கள் விளாசிய வீரர்களில், கொல்கத்தா மற்றும் பெங்களூர் அணிக்காக விளையாடிய கிறிஸ் கெய்ல் முதலிடத்தில் உள்ளார். 68 ஆட்டங்களில் விளையாடியுள்ள இவர், 192 சிக்சர்களை அடித்துள்ளார். கடந்த 2013ஆம் ஆண்டு சீசனில், பெங்களூர் அணிக்காக விளையாடிய கிறிஸ் கெய்ல், புனே அணிக்கு எதிராக 175 ஓட்டங்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.
ஐ.பி.எல் தொடரில் தனிப்பட்ட வீரர் ஒருவர் எடுத்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். இந்த போட்டியில் 20 ஓவர்களில் பெங்களூர் அணி 263 ஓட்டங்களை எடுத்ததுதான் ஐ.பி.எல் போட்டியின் ஒரு அணி எடுத்த அதிகபட்ச ஓட்டங்கள் ஆகும்.

*டக்– அவுட் கம்பீர்*

அதிகமுறை டக் அவுட் ஆனவர்களில் கவுதம் கம்பீரும், அமித் மிஷ்ராவும் முதலிடத்தை பங்கு போட்டுக் கொண்டுள்ளனர். இருவரும் தலா 10 முறை டக் அவுட் ஆகியுள்ளனர்.



*டோனியின் சாதனை*

ஐ.பி.எல். அணியில் இதுவரை நடந்த அனைத்து தொடர்களிலும் சென்னை அணி அரையிறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது. இரண்டு முறை கிண்ணம் வென்றுள்ளது. சென்னை சூப்பர் கிங்சுக்கு 8 சீசன்களிலும் அணித்தலைவராக இருந்து டோனி சாதனை படைத்துள்ளார்.

*ரெய்னா அசத்தல்*

சென்னை அணிக்காக விளையாடி வரும் புதுமாப்பிள்ளை சுரேஷ் ரெய்னா சென்னை அணி விளையாடியுள்ள 115 போட்டிகளிலும் பங்கேற்றுச் சாதனை படைத்துள்ளார்.
அத்தோடு ஐ.பி.எல். தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர் பட்டியலில் ரெய்னா தான் முதலிடம் வகிக்கிறார். இதுவரை அவர் 3 ஆயிரத்து 335 ஓட்டங்களை குவித்துள்ளார்.

*மிரட்டல் மலிங்க*

மும்பை அணி வீரர் லசித் மலிங்க, 83 ஆட்டங்களில் 119 இலக்குகளை வீழ்த்தி முதலிடத்தில் உள்ளார்.
ஐ.பி.எல். தொடரில் இதுவரை 13 முறை ஹட்ரிக் இலக்குகள் வீழ்த்தப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக சுழற்பந்துவீச்சாளர் அமித் மிஷ்ரா 3 முறை ஹட்ரிக் இலக்குகள் எடுத்துள்ளார். (த)

## பஸில் ராஜபக்ஷ 24 ஆம் திகதி பொலிஸில் வாக்குமூலம் ?

கொழும்பு, ஏப். 7
முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 24ஆம் திகதி பொலிஸில் வாக்கு மூலம் அளிப்பார் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அரசினால் நிறுவப்பட்டுள்ள நிதிக் குற்றவியல் விசாரணைப் பிரிவில் இவ்வாறு பஸில் ராஜபக்ஷ வாக்கு மூலம் அளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. பஸில் ராபஜக்ஷவின் சட்டத்தரணி உதய ரொசான் டி சில்வாவை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.
பஸில் ராபஜக்ஷ அமெரிக்காவிலிருந்து வியட்நாம் சென்றுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.
உடல் நலக் குறைவினால் அவர் அமெரிக்காவில் சில மருத்துவப் பரிசோதனைகளை செய்து கொண்டு வருவதாக சட்டத்தரணி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் சட்ட மா அதிபர் மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது எனச் சட்டத்தரணி கூறினார்.
எவ்வாறெனினும், பஸில் ராஜபக்ஷ நாட்டை வந்தடைந்தவுடன் கைது செய்யுமாறு கடுவெல நீதிவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவர் கோகுலதாசன்

யாழ்ப்பாணம், ஏப். 7
பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக சோமசுந்தரம் கோகுலதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேற்று இந்த நியமனத்தை வழங்கியுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின் ஸ்தாபகத் தலைவர் நடராஜா உதயனுக்குத் தெரிவித்தார்.
புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பனை அபிவிருத்திச் சபையின் தலைவரை நியமிப்பதில் இழுபறி நிலை இருந்து வந்தது. பனை அபிவிருத்திச் சபை எந்த அமைச்சின் கீழ் வருகிறது என்பது கூட சபையின் பணியாளர்களுக்குத் தெரியாத நிலை இருந்தது.
இந்த நிலையிலேயே அதன் புதிய தலைவராக கோகுலதாசன் நேற்று மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதனால் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
இதுவரை காலமும் சபைக்கு அரசியல் தலையீடுகளால் பொருத்தமான தலைமை இல்லாதிருந்ததாகவும், இப்போது வழங்கப்பட்ட நியமனம் மிகப் பொருத்தமான ஒன்று எனவும் சபையின் ஸ்தாபகத் தலைவர் நடராஜா கூறினார்.
புதிய தலைவர் கோகுலதாசன் பனை அபிவிருத்திச் சபையின் ஆரம்பகாலம் முதல் பல்வேறு செயற்திட்டங்களில் ஈடுபட்டவர் எனவும், அவர் பனை வளம் தொடர்பில் முதுமாணிப் பட்டம் பெற்றவர் எனவும் கூறப்பட்டது. (த)

## மிதக்கும் ஆயுத களஞ்சியம்; ஏப்ரல் 21க்கு முன் அறிக்கை

கொழும்பு, ஏப். 7
அவன்கார்ட் நிறுவனத்தின் மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பான விசாரணை அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக தெரிய வருகிறது.
மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் உட்பட குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றில் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு கிடப்பில் போடப்பட்ட சில ஆவணங்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதமாக மேற்கொண்டு எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் சகல விடயங்களும் அடங்கிய அறிக்கை தாக்கல் செய்வதாக அரசு உறுதியளித்துள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கூறியுள்ளார்.
மக்கள் எமக்கு வழங்கியுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்காக தேசிய நிறைவேற்றுச் சபைக்குள் தலையீடுகளை மேற் கொண்டு சகல செயற்பாடுகள் குறித்தும் அறிக்கைகளைப் பெற்று முழுமையான மீளாய்வை மேற்கொள்ளும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதனை ஜனாதிபதியும் பிரதமரும் உறுதிப்படுத்தி காட்ட வேண்டும் எனவும் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
குறிப்பிட்ட காலத்திற்கு அமைய இந்த பணிகள் நிறைவேற்றப்படவில்லை என்றால், தேசிய நிறைவேற்றுச் சபையில் அங்கம் வகிப்பதா இல்லையா என்பது தொடர்பாக ஜே.வி.பி தீர்மானம் ஒன்றை எடுக்கும் எனவும் அதன் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

## பிரியந்த சிறிசேனவின் கொலையில் மர்மம்

கொழும்பு, ஏப் 7
ஜனாதிபதியின் சகோதரர் பிரியந்த சிறிசேன கோடரியால் தாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த மேலும் இருவர், கொலை நடந்த இடத்தில் இருந்ததாகப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.
இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் அவ்விருவரிடம் விசாரணை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.
இந்தக் கொலையானது ஏதேனும் திட்டத்துடன் மேற்கொள்ளப்பட்டதா என ஆராய்வதற்கு மேலதிகமாக விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த)

## மஹிந்தவின் செயற்பாடுகள் அவருக்கே அழிவைத் தரும்

### எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஏப். 7
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியைப் பெறுவதற்காக தற்போது மேற்கொண்டு வரும் பரப்புரைகள் மற்றும் சூழ்ச்சியான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அவருக்கே அரசியல் ரீதியான அழிவை ஏற்படுத்தும் என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால், இறுதியில் மைத்திரிபால சேனாநாயக்க, அனுர பண்டாரநாயக்க ஆகியோர் தலைமையிலான அணி மற்றும் லலித் அத்துலத்முதலி காமினி திஸாநாயக்க தலைமையிலான அணியினருக்கு ஏற்பட்டது போல் வெற்று மைதானத்தில் உரையாற்ற வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.
சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
மைத்திரிபால சேனாநாயக்க, அனுர பண்டாரநாயக்க ஆகியோர் கட்சியை உடைத்துக் கொண்டு வெளியில் சென்றனர். அவர்களுடன் கட்சியின் மத்திய செயற்குழுவைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் சென்ற போதிலும் இறுதியில் வெற்று மைதானத்தில் உரையாற்றும் நிலைமை அவர்களுக்கு ஏற்பட்டது.
கட்சியைப் பிளவுபடுத்திச் சென்றவர்கள் மீண்டும் சிறிமாவோ பண்டாரநாயக்கவிடம் திரும்பி வந்தனர்.
ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற லலித் மற்றும் காமினிக்கும் அதே நிலைமைதான் ஏற்பட்டது. இவர்கள் நுகேகொடையில் நடத்திய கூட்டத்துக்கு விமல் வீரவன்ஸவினர் மஹிந்தவுக்கு ஆதரவாக நடத்திய கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனத்தை விட அதிகளவில் மக்கள் கலந்து கொண்டனர்.
லலித்தும் காமினியும் இப்படி நாடு முழுவதும் பெரும் கூட்டங்களை நடத்தினர். மக்கள் அந்த கூட்டங்களில் திரளாககலந்து கொண்டனர். இறுதியில் அவர்கள் வெற்று மைதானத்தில் உரையாற்ற நேர்ந்தது—என்றார்.(த)

## சகல தவறுகளுக்கும் கடந்த அரசே பொறுப்பு

### அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 7
நாட்டில் இடம்பெற்ற அனைத்துத் தவறுகளுக்கும் கடந்த அரசே பொறுப்பு என விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
விவசாயிகளை மன்னர்களாக்கி அவர்களின் பொருளாதாரத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த வேண்டும். நிவாரணங்களை வழங்குவதன் மூலம் மட்டும் அதனைச் செய்ய முடியாது. விவசாயிகளின் விளைச்சலை அதிகரித்து அவற்றுக்கு உரிய விலைகளை வழங்க வேண்டும்.
நவீன தொழில்நுட்பங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமானது—என்றார்.(த)

## பெண் சடலமாக மீட்பு

கொழும்பு, ஏப் 7
காவத்தை, கொட்ட கெத்தனவில் காணாமற்போன பெண்ணின் சடலம் கொட்டகெத்தனவில் உள்ள வாய்க்காலிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலிருந்து காணாமல் போன சந்திராணி ஸ்வர்ணலதா (வயது 39) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. அவரது வீட்டிலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்திலிருக்கும் வாய்க்காலிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.
கடந்த வருடத்திலிருந்து இதுவரையிலும் கொட்ட கெத்தனையிலிருந்து 18 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

## மஹாவலி கங்கையில் நீராடிய சிறுவன் மாயம்

கொழும்பு, ஏப் .7
மஹாவலி கங்கையில் நீராடச் சென்ற 13 வயது மாணவனொருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாகவும், அந்த மாணவனுடன் நீரில் மூழ்கிய மேலும் இரு மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுத் திங்கட்கிழமை மாலை காணாமற்போன மாணவனை மீட்கும் பணியில் பிரதேசவாசிகளும் சுழியோடிகளும் ஈடுபட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலையொன்றில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவர்கள் [illegible] இவ்வாறு நீராடச் சென்றுள்[illegible] குளித்துகொண்டிருந்தபோது இவர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன் இவர்களில் இருவரைப் பிரதேசவாசிகள் உடனடியாக மீட்டுள்ளனர். மற்றைய சிறுவனை மீட்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

PHYSICS
A/L 2016
வெப்பவியல் (புதன் 5.00 pm)
ஆரம்பம்:- 08/04/2015
(Bsc)
SCIENCE CORNER
0776116724

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
11.04.2015
1. காலை 08.00-10.00 3. மு.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
11.04.2015 இற்குமுன் பதிவுசெய்பவர்களுக்கு மட்டும் VIDEO DVD இலவசம்.
SAAMSON
021 320 3313
077 621 4567

இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
NALIN INFORMATION TECHNOLOGIES PVT LTD
சித்திரை தமிழ் புது வருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
மடிக்கணனி - 5ம் தலைமுறை
LAP TOP - i5 5th GEN
FREE
PRINTER + COOLAR PAD
HEAD PHONE/ MOUSE, BAG
இவற்றுடன் ஆகக்குறைந்த விலை 73,500/=
(HP/ DELL/ SAMSUNG - ASUS Dual Core i3/i5/i7 Laptop Desktop Computer, Accessories)
021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it
195/4 PARAMESWARA JUNCTION, PALALY ROAD, THIRUNELVELY.
Branch : No. 116 G, K.K.S. Road, Chunnakam. 021 224 2

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனை[illegible] அச்சிட்டு வெளியிடப்பெற்றது.